"When your appointment as Governor of this Island was announced earlier this year it created in the public mind an extraordinary degree of sympathetic interest, which, I may say, has not yet abated, and I have no doubt that your assumption of this office this morning will be acclaimed throughout this Island as a happy event inaugurating a new era of progress in all directions.

"Your Excellency's record of service and achievements in other parts of the Empire has encouraged the people of Ceylon to hope that during your administration, and under your wise guidance, many knotty problems that face us to-day will be satisfactorily solved.

"We hope that the social advancement and economic development of this country will be accelerated, and that the powers of freedom will be so extended that Ceylon may, ere long, occupy its rightful place as a self-governing unit in the British Commonwealth of nations.

"May we be so fortunate as to be able to say at the end of your term of office that these hopes and aspirations of the people have been fully realised.

"Let me express our sincere hope that

the days you spend amongst us will be, to you, Lady Caldecott and all those near and dear to you, a period of great and unalloyed happiness!"

Sir Andrew's Reply.

His Excellency, in reply, said:—

"I am deeply grateful to you for the kind words of welcome which, as Leader of the State Council, you have just expressed to me and also for the excellence of the arrangements which, as Minister of Home Affairs, you made for my official landing this morning.

"But with the feelings of happiness and gratitude which the warmth of your welcome inspires in me, there is at the moment mixed and other feelings which arise from the solemnity of this occasion and the gravity of the oath which I have just taken.

"Indeed, if I feel I alone was affected by this ceremony I would at once confess to a sense of extreme unworthiness and of loneliness at being confronted with a task beyond my ability and possibly beyond my endurance.

"Happily, I realize that I stand here this morning, surrounded by Officers and Ministers of State and members of the State Council, who themselves have taken oaths, no less grave and solemn, and that their presence here this morning represents the reaffirmation of those oaths, and re-dedication of themselves with me in the service of Ceylon.

"First Hand".

"We stand here together as bondsmen in that high service, and, it is indeed fitting that this solemn ceremony should take place in this noble home of the State Council, at whose proceedings all eyes and ears turn for the equality, dignity and charity of politics.

"During the past few months I have read a good deal of literature about your beautiful Island, but have purposely refrained from attempting any study of its current problems and affairs, and that for two reasons.

"Firstly, because I believe that problems are always better studied at first hand, and on the spot, but chiefly because I desire to be introduced to all local questions by the Officers and Ministers of State is frequent personal contact.

"In such manner I am eager to learn, and having learnt, to try and help them.

"I come to think it is a happy augury that my local training should begin with this warm welcome to which you gave such eloquent expression."

In reply to the addresses presented to him by various bodies, the Governor said:

Singapore and Hongkong.

"In the course of my 30 years' Colonial experience, I have on several occasions been entrusted with the task of presenting addresses to in-coming Governors or to distinguished visitors, and when engaged in that task, I sometimes began to wonder whether the recipient had read the address or listened to it.

"Being myself the recipient this morning, I am at the same time in the position of having resolved my previous doubts and to assure you that I have read and re-read the addresses (copies of which I received at Port Said), and I propose to read them again, word by word.

"I had two reactions to those addresses. The first reaction is the revival of many happy and inspiring memories. I remember, for instance, the extreme interest of my municipal work as Town Planning Administrator and chairman of two Sanitary Boards. I remember the tackling of many a difficult problem in collaboration with the

Chamber of Commerce—at Singapore and Hongkong—and in co-operation with planting and mining associations in the Malay States.

"I call to mind those happy associations which were mine with the chiefs and headmen of Malaya, first when I was District Officer and afterwards when I was British Resident.

"I remember too, the loyal backing which I always received from the office staffs (a good many of whom were composed of members from the northern parts of this Island) whom I am looking forward to meeting as fellow workers.

"In short, I remembered as I listened to those addresses that man to man, race to race, community to community, the contact, conciliation and adjustment, which made the Public Service of Malaya and also of Hongkong such an inspiring and invigorating experience.

"The second reaction to the addresses was a humble sense of the immensity of your expectations. I hope forthwith that the fulfilment of those expectations, even partial fulfilment, rests as much with you as it does with me."

"When the kind people of Hongkong made complimentary references to me at our sad parting last Spring I reminded them of the well-known saying that a country got the Government it deserved.

Physical Beauty Of Ceylon.

"The period of Governorship is a mirror in time wherein the people of the State see reflected their own expression, attitude and action, and although the Governor is necessarily in the foreground of the picture, and although he may help in its composition, nevertheless the beauty and symmetry of the scenes must depend on the posture and gesture of every single figure in the foreground.

"I ask everybody to join with me in an endeavour to make our five-year time picture of Ceylon politics and administration, one worthy of the physical beauty which God has given this Island.

"I recommend to you these words which I read sometimes ago: "The justification of majority rule lies in the fair treatment of the minorities: the strength of the minorities must be commensurate with the reasonableness of their demands."

Wise Words.

"Those words struck me as wise words. As Governor of this Island, under your Constitution, I shall endeavour to the best of my judgment and ability to promote the good name, the sound credit, clear conscience and the peace of Ceylon. In the certainty that the Officers and Ministers of State and the members of the State Council and of every local government body in the Island have an identical purpose, I look forward to take my part in the team progress shoulder to shoulder in that common progress towards the common goal."

Houses Of Earth.

(Continued from last issue.)

[Reproduced from an American Journal.]

How To Judge Soil.

The soil in a foot path which remains hard in wet weather is fit for rammed earth walls. Difficulty in crushing a dry lump of soil between the fingers is another indication, but to prove that the earth is suitable for building, the following test should be made. Place a small wooden tub without a bottom in a hole in the ground in which a flat stone has been set. To prevent bursting, the space around the tub should be filled with well rammed earth. The soil to be tested should then be rammed into the tub in four-inch layers until it rings like metal, then removed. If when the natural moisture decreases, it continues to increase in density, then it is fit for building. Pure clays are not suitable because of excess shrinkage and pure sand will not bind. A mixture of the two is good.

Foundations.

A concrete or stone wall must be built to go below the frost line. Lay the foundation 4 inches wider than the earth wall is to be; that is, for an 18-inch wall lay a 22-inch foundation up to or slightly higher than the surface level. The rammed earth walls must be off of the ground. On top of this lay a 2-inch section of concrete exactly as wide as the wall is to be. The width is important as the mold must later be laid plumb and true, and clamp to the course at the start. You are erecting a house which will last for centuries if you use care.

To make the molds, you need 6 planks 1½ inches thick and about 10 feet long and 9 inches wide—with 50 feet of 2 by 4—all planed timber. These planks are nailed on stout battens. They are held together by 4 pairs of posts 3 inches by 3 inches which are connected above and below with tiebars of flat iron 1½ by ¼ inch. The tiebars have at each end a certain number of 1-inch holes punched in them to receive pins for the purpose of preventing the posts from slipping off. By changing the pins, walls of any given size can be obtained.

Although commonly confined to one or two-storey buildings *pise* walls have been carried fifty feet high, as in a church in France which was 80 feet long, 40 feet wide with walls 18 inches thick. If the building is to be 40 feet high, the bottom walls should be 22 inches thick; for the second story, the wall may be 18 inches thick, and for the third story, 14 inches thick.

The Ramming Work Begins.

Place in the mold boards any section pieces for doorways or windows which will reach to the foundation. In order to provide openings in the earth wall for the floor joists, wooden blocks of the proper dimension should be placed inside the mold at the correct positions where the beams are to come, and lightly nailed to the mold boards. The floor joists may be set as soon as the blocks are removed. The joist recesses should be large enough to permit the circulation of air. All openings in the walls must be foreseen and blocked off in the mold. The openings must be made the exact size.

If made by a carpenter, a set of molds should not exceed in total cost $130. This

amount should cover all iron parts and blacksmithing, lumber and carpentry. Quarter-inch ironpipe and ordinary "tee" fittings will serve for the mold "tiebars," eliminating blacksmithing.

Piping.

Provision for the soil pipe, electric conduit should be carefully made in the original plans. The pipes and conduits can be placed against the inside surface of the molds which will render them more accessible and the rammed earth will hold them in place. Bulk-heads must be set in the forms at door, window, and other openings to withstand the pressure created by ramming.

The earth is shoveled into the form in 4-inch layers. The most skilful workman should be placed at the corner to see that the form does not swerve from line or level. The earth in the corner and close to the side of the form should be rammed first and then the rest of the surface. The strokes should cross one another so as to press in all directions. The ramming should be rapid but never in unison. The men must not keep time in striking the earth nor drive heavy blows. When the rammers bring forth a singing sound, it is time to place another 4 inches of soil in the form. Layer after layer is rammed hard until the form is full and level with the top, and the form can then be taken apart and reset for the next wall, by knocking the keys or pins out of the bolts. The top of the lower course walls should be roughened and slightly moistened so that the next layer of earth will adhere to that already in place. Thus section by section the walls are raised to the desired height. Carry the first course all around the building and when this is completed start the second course. It is exactly the same system followed in laying brick or masonry.

The top of the earthwork on which it is proposed to erect another section should be well moistened and covered with wet bags while waiting for the completion of the next layer to be set upon it, and if this section adjoins one already built, the ends of the latter should be beveled off so as not to form a straight joint.

The earth is first beaten down with a V-shaped rammer and then surfaced with a flat-bottomed one; the sides of the molds are rammed with a spade-shaped rammer. The doors and window frames are correctly set in the molds and anchored into the walls by long hoop-iron ties, while the walls are going up.

Boards in the earth wall will be as sound in 100 years as on the day they were placed in the wall. The rammed earth over doors and window openings should rest on heavy wood re-enforcement and 3-inch Georgia pine will last for centuries.

Once properly rammed, the earth is so solid that it will support from 10 to 30 tons per square foot. Beams may be set at once when the mold is removed, and the heaviest roof and floor timbers may be put in place in the freshly rammed wall. A house for a single family is generally finished in about 2 weeks. 2 men, new to the work and therefore proceeding slowly, completed a six-room house in 26 days. With a power plant, I believe 4 men could do the work in about 3 working days, by using air-compressers to do the ramming, or in 8 to 10 days with hand ramming.

If plaster is desired for your inner walls, just apply it as you would on lath. It sticks tightly if you give it additional holding surface by scoring it with a rake.

For outside walls the cheapest finish is a waterproof coating made from 1½ gallons unslacked lime, 3½ gallons boiling water and ½ pound of common tallow, mixed thoroughly, adding enough water to insure easy handling with a brush.

Fireplaces may be finished in rammed earth walls in exactly the same fashion they

are finished with any other walls, and if the house is being built in the summer, it will be dry enough for occupancy within 10 days after completion.

The housing problem has all at once become an acute national need, and while a world-wide search has been going on for lower-cost building materials, we have actually found a superior product right under our feet.

A. B. LEE.

Personal and General.

Mr. S. Sundram, Technical Assistant, P. & T., Kuala Lumpur, is away in Ceylon on three months' leave.

At Chan At Thong Street to Mr. & Mrs. Alagaratanam (Land Office, Kuala Lumpur) a daughter.

Mr. Ratnam of the W. & O. P. F. Office, who was away in Ceylon on medical leave has returned fully benefited by the change.

Mr. S. Velautham of the Federal Secretariat, has returned from his holiday in Ceylon accompanied by his wife and family.

Mrs. Singam wife of Mr. A.R. Singam of the State Store has left for Ceylon.

We regret to record the death at the age of eighty six of Mr. S. Aramboo on 6. 10. 37 at Tholpuram, Jaffna. The late Mr. Aramboo, a product of the Batticotta Seminary, Jaffna, resigned the Ceylon clerical service in 1884 to take up farming which he was very successful. He was held in high esteem by his countrymen for his impartial and considered opinion and advice on matters of importance affecting the welfare of the people in his locality. For a considerable number of years he was a member of the Jury of the Supreme Court (Jaffna). Two of his sons are in the F.M.S. namely, Messrs. A. Shanmugam, Women Hospital, Kuala Kangsar, and A. Mayilvahanam, Chief Clerk, District Office, Temerloh. Besides these there are daughters and several grandchildren to bemoan his death. We extend our sympathy to the bereaved family.

Mrs. Sinnathamber wife of Mr. S. Sinnathamber of the State Engineer's Office. Taiping has been blessed with a daughter.

Mr. S. Arumugam, Health Inspector, has been transferred from Rawang to Kuala Lumpur.

Mr. C. Chinnadurai of Kuala Kubu Bharu would be away on short leave at Penang with his wife and children.

The following have received promotions in the General Clerical Service:—

Mr. J. S. Muthu of the Police, Taiping, from Class I to Special.

Mr. R. Cumaravelu of Seremban, from Class I to Special.

Mr. P. Apputhurai, P.W.D., K.K. Bharu, from Class III to Class II

Mr. Munisamy, S. E's Office, Taiping, from Class III to Class II

Mr. Ayadurai, S. E's Office, Taiping, from Class III to Class II

Mr. Sattyappan of the Treasury, Taiping, from Class III to Class II

Mr. S. Cumaravelu, P. W. D., Kuala Selangor, from Class III to Class II

Mr. R. Selvanayagam, Seremban, from Class III to Class II

Mr. M. Subramaniam, Seremban, from Class

III to Class II

Mr. K. Arumugam, Seremban, from Class III to Class II

Mr. V. Arumugam, Kuala Lipis, from Class III to Class II.

Mr. T. Subramaniam, Kuala Lipis, from Class III to Class II.

Mr. S. Thambiayah, Kuala Lipis, from Class III to Class II.

Mr. S. Kanapathipillai, Kuala Langat, from Class III to Class II.

The following have satisfied the Promotion Board:—

Mr. Sow Ah Keng, P.W.D., Taiping, from Class I to Special.

Mr. A. S. Kathiramer, Selama, from Class I to Special.

Mr. Peter, Parit Buntar, from Class I to Special.

Mr. Seenivasagam, Taiping, from Class I to Special.

Mr. K. Ponniah, Seremban, from Class I to Special.

Mr. F. T. Selvaratnam Seremban, from Class I to Special.

Mr. V. Eliatamby, Police, Kuala Lipis, from Class I to Special.

We offer our congratulations.

Mrs. Apputhurai wife of Mr. P. Apputhurai of Kuala Kubu Bharu is progressing satisfactorily after her recent confinement.

Cable news have been received by Mr. V. Viswanathan of Rawang intimating the death of his mother at the age of 74 at Changanai. We condole with him.

On the departure of Mr. Sabapathy of Kampar Hospital on leave to Ceylon, Mr. K. Karthigasu of Taiping Hospital has replaced him.

Exchange of duties between Mr. P. Arulampalam of Hospital Taiping and Mr. Chinniah of the Lumut Hospital is ordered.

Mr. P. Eliatamby of the Registry Taiping has come to Kuala Lumpur on mutual transfer with Mr. S. Manuelpillai of the Accountant General's Office.

Mr. S.R. Selvanayagam of the P. & T. Taiping, during his short sojourn in Ceylon, has been successful in finding a partner in life.

The engagement is announced and the marriage will take place in August, 1938 between Dr. C. Nadarajah of the General Hospital, Kuala Lumpur and Miss S. Rajeswari eldest daughter of Mr. K. Sinnappu of the Medical Dept., Taiping.

Mr. S. Seenivasagam has succeeded Mr. Loo Kim Thuan as Chief Clerk, Land Office, Teluk Anson.

A son is born to Mrs. Sangarapillai wife of Mr. A. Sangarapillai of the Railway Police, Ipoh.

A son was born on 2. 10. 37 to Mrs. Thuraiayah wife of Mr. K. Thuraiayah of the P.W.D., Ipoh.

Mr. P. Peethamparam has gone on transfer from Kuala Lipis to the Kinta Sanitary Board.

Mr. P. Nagamuthu of the Railways Seremban has been transferred to Gemas.

Mr. K. A. Suppiah, State Treasurer, N.S., has returned from leave and resumed duties relieving his *locum tenents* Mr. R. Kunaratnam Sub-Treasurer, Kuala Pilah.

Mr. I. Vallipuram of the Surveys, Pahang, on his transfer to the Customs, Kuala Lumpur, was entertained by his friends to a dinner.

Messrs. P. Thambiah of Lipis and J.A. Sinnadurai of Raub were inmates of the Kuala Lipis Hospital.

Mr. M. Nadarajah of the Pahang Secretariat is indisposed.

To Mrs. Armugam wife of Mr. V. Armugam (member of the Lipis District Committee) a son.

Mr. S. Kanagaratnam, Kuala Lipis, has received cable news of the death of his sister.

Our condolence to him.

Mr. S. Seenivsagam of the Pahang Coast District Office, has proceeded on transfer to the Lower Perak District Office.

Mrs. Kathirasu wife of Mr. K. Kathirasu of Kajang has given birth to a daughter.

Mr. K. Ayathurai of the hospital, Kajang has proceeded on leave to Ceylon.

Mr. V. Nagalingam of Kuala Selangor has been as successful as Mr. S.R. Chelvanayagam of the P. & T., Taiping in finding a partner in life.

Mr. Nagamuthu of Kuala Selangor has been bedridden. He is himself again.

Mrs. Kandiah wife of Mr. V. Kandiah of Kuala Langat, has returned from Ceylon.

The birth of a daughter to Mrs. Ramalingam wife of Mr. C. Ramalingam of the Banting Club is announced.

Mr. A. Sinnathurai of the Sanitary Board, Klang has returned from his long leave in Ceylon.

Mr. K. Thambiah of the Electrical Dept., Klang has gone on transfer to Kuala Lumpur.

Mr. C. Sivasamboo of the Federal Secretariat has reported his return from leave in Ceylon.

Mr. K. Duryappah of Messrs. Hallam & Co., has returned from Ceylon accompanied by his bride.

Mr. V. S. Arumugam of the State Engineer's Office, Selangor has assumed duties in his new appointment in the F.M.S. F.F. Office at Raub.

Mr. C. Arumugam, Head Postmaster, Kuala Lumpur is away on short leave in Ceylon.

Mr. R. Kanapathipillai of the Audit Office, Kuala Lumpur, has underwent an operation. He is progressing satisfactorily.

Mr. & Mrs. S. Kathiravelu (P. & T.) Kuala Lumpur, have returned from their holiday in Ceylon.

Sri Vethiah the Saiva Kurukkal attached to the Sivan Temple Sentul, has returned from leave in India and resumed duties.

Mrs. Chinniah wife of Mr. V. Chinniah, General Hospital, Seremban, has been blessed with a daughter on 18. 9. 1937.

A notice by the Government of Pahang offering lands for alienation on cheap premium and rent is appended below:—

NOTICE:

NOTICE is hereby given for general information that Government of Pahang is prepared for a period of 5 years commencing from October, 1937, to consider applications from suitable applicants for the alienation by means of grants under the Land Code of blocks of land of not less than 20 acres in extent on special terms as regards premium and rent for the cultivation of certain crops (other than rubber) amongst which are the following, classified as A, B. and C according to the premium and rent which will be charged. Applications for land should be lodged with the Collector of Land Revenue of the district in which the land is situated, and any further information may be obtained from the Land Office concerned.

SCHEDULE.

Land for Class A

Crops i. e.	Rent.
Derris Oil Palm Tapioca Tea	$1- per acre per annum for 6 years and thereafter $2|- per acre per annum.

Premium—$4|- per acre.

Land for Class B

Crops i. e.	
Arecanut	$1|- per acre per annum for
Bananas	10 years and thereafter $2|-
Coconut	per acre per annum.
Coffee	
Chillies	
Fruits	
Gambier	
Ginger	
Pepper	
Sireh.	

Premium—$2|- per acre.

Land for Class C

Crops i. e.	
Cloves	50 cents per acre per annum
Cocoa	for 10 years and thereafter
Manila Hemp	$2|- per acre per annum.
Tobacco	
Dairying	
Pig Farming	

Premium—$1|- per acre.

This offer provides a welcome opportunity for industrious members of our community to embark on agricultural enterprises in Pahang and, if availed of, should be the means of providing employment to quite a number of unemployed youths. Owing to the existing high premium and rent, acquisition of land by those with limited means has so far been a problem. But these concession terms now before the public opens for those interested in land schemes a new field for seeking a living from the soil, and partially solving the unemployment problem to utilise the services of those trained with the assistance of the Jaffnese Co-operative Society at the Serdang Agricultural School.

THE BANK OF MALAYA LIMITED,

INCORPORATED IN F.M.S.

Registered Office:—
No. 2, Foch Avenue,
TELE{PHONE: 3346,
GRAM "PEOPLEBANK"
KUALA LUMPUR.

Branches & Agencies :
COLOMBO, JAFFNA,
KLANG, SEREMBAN, IPOH.

CURRENT ACCOUNT and SAVING FUND ACCOUNTS opened: FIXED DEPOSITS received:- Terms which are liberal may be ascertained on application.

Drafts granted upon and Bill negotiated and collected at JAFFNA and at any of the BRANCHES and AGENCIES.

பாங்க் ஒவ் மலாயா லிமிட்டட்

மலாய் நாட்டில் வசிக்கும் இந்தியா-இலங்கை வாசிகளின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இவ்வங்கியில்:—

மிகவும் சொற்ப தொகையுடன் கணக்குத் தொடர்ந்து செக்குவெட்டவோ,
நியாயமான பொறுப்புடன் கொடுக்கல் வாங்கல் செய்யவோ,
இந்திய இலங்கை ஆகிய இடங்களுக்கு சாசமான வீலுக்கு உண்டியல்கள் வெட்டவோ,
மாதாந்தம் நடாத்தி வரும் ஏல சீட்டில் பங்குபெறவோ,
நம்மவரின் கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியன விருத்திசெய்வதற்கோ,
அந்தியகால ஆறுதலான வாழ்விற்கோ, வேறு பல மனத்தேறுதலுக்கோ இவ்வங்கி உற்ற சிநேகிதனைப்போல உதவிபுரியுமென்பதற்கு, இதில் சேர்ந்து ஒத்துழைத்து பற்றுவரவு செய்துவரும் பல்லாயிரம் நண்பர்கள் அத்தாட்சியாயிருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணலாம்.

கணக்குத் தொடர்ந்து செக்குவெட்ட விரும்புவோர், விஷயத்தை நேரேவந்து வங்கியின் மானேஜரிடம் எவ்வேளையிலும் பேசிக்கொள்ளலாம்.

D. V. KANDIAH, Secretary.

"வழி காட்டி"

—:o:—

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க சஞ்சிகை.

பொருளடக்கம் பக்கம்

தன்னம்பிக்கை ... ... 1.

ஈஸ்வராதியானம் ... ... 4.

இடம்ப வாழ்வு ஈற்றில் தாழ்வு ... ... 6.

அன்பின் மகிமை... ... ... 10.

சரஸ்வதி அல்லது ஊக்கம் உவ்டேல் உயர்வை அடையலாம் 12.

வெற்றியாருடையது ... ... 15.

சரஸ்வதி... ... ... 18.

சகோதரத்துவம் ... ... 22.

ஐக்கிய சங்க அரை வருடக்கூட்டம் ... ... 25.

நீங்கள் அறிவீர்களா ... ... 27.

கடிதங்கள் ... ... 28.

"வழி காட்டி"

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க முன்னேற்ற உயரிய மாதப்பத்திரிகை.

மலர் க.	ஈசுர ஆண்டு, கார்த்திகைத் திங்கள்.	இதழ் அ

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனேவர்க்கும் தாழ்வு.

- - தன்னம்பிக்கை - -

—:o:—

நம்பிக்கையில் இரண்டு வகையுளது. ஒன்று தன்னம்பிக்கை, மற்றது பிறர் நம்பிக்கை. நான் இதைச் செய்வேன்; இது என்னால் முடியும்; என்ற துணிவும் வீரமும் தன்மேலிருக்கும் நம்பிக்கை; மற்றது பிறர் நம்பிக்கை, அதாவது இவர் எனக்குத் துரோகஞ் செய்யமாட்டார்; இவரை நம்பி நான் என்னவும் சொல்லலாம், செய்யலாம் என்று பிறர்மேல் கொள்ளும் நம்பிக்கை.

முதல் சொன்ன அந்தத் தன்னம்பிக்கை எப்படிப்பட்டது.? அதனால் நாமடையும் நன்மை தீன்மை யாது? என்பவற்றுச் சற்றைக் கவனிப்போம்.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி.

தானே தனக்குச் சினேகனும் பகைவனுமாயிருந்து, இந்த ஜென்மத்திலும் மறு ஜென்மத்திலும் தான் செய்த வினையின் பயனைத் தானே அனுபவிக்க வேண்டியவனதலின், தானே தனக்குச் சாக்ஷி என்றார் பெரியோர்.

மனிதர்களுக்குள்ள மேம்பாடும் கீர்த்தியும் அவரவர்களுக்குள்ள தன்னம்பிக்கையைப் பொறுத்த தொன்றாகும். தன்னம்பிக்கையில்லாதவன் தான் ஈடுபடும் முயற்சியில் அநுகூலம் அடைவது அசாத்தியம். அநுகூலம் இல்லாதொழியின், அவனது வாழ்க்கையும் இன்பத்துக்கு ஏதுவான தொன்றல்ல. எந்த வேலையைச் செய்யும்போதும் தன்னம்பிக்கையுடன் ஆரம்பித்தால் அதில் அநுகூலமடையலாம். சாதகமற்ற பக்கத்துணை பார்த்திருத்தல் பயனற்றது. உற்றார் உறவினரின் துணையைக் கொண்டு தான் கடைத்தேறலாமென எண்ணுவது பேதமை. அவர்கள் எவ்வளவு உதவியைச் செய்ய முன் வருவார்களானாலும், தன்னம்பிக்கை இல்லாதிருப்பின் அவர்கள் உய்வது எங்ஙனம்?

இடுப்பில் கட்டியதுணி அவிழும்போது தன்னுடைய கைகளல்லவா அந்தச் சந்தர்ப்பத்தில் உதவி செய்வன. "தன்கையே தனக்கு உதவி" என்பதும் ஓர் அரிய முது மொழி. தம் தம் நடக்கைகளே தமக்குத் தக்க சமயத்தில் உதவுவனவாதலின், எக்காலத்தும் மனிதனுக்கு தன் கைகளே உற்ற துணைகளாகும். பிறன் கைபார்த்து நிற்பவன் பேதையிற் பேதை. பொய்க்கால் கட்டிப் பத்தடி நடப்பதற்குள் வெறுங்கால் வெகு தூரஞ் செல்லும். கையில் பொருள் மிகுந்திருந்தாலன்றே முயற்சிகளைத் தொடங்கி அவற்றில் இலாபம் அடையலாமென்று ஏங்கிச் சும்மா இருப்பது ஏற்றதல்ல. கைமுதல் மிகுந்தவர் கடைசியில் கந்தையுடுத்தது முண்டல்லவா?

தனக்குப் பிறரால் கொடுக்கப்பட்ட விலையுயர்ந்த கட்டிலில் படுத்துறங்குவோனைக் காட்டிலும்,

தன் கையால் இளைத்த கோரைப் பாயில் படுத்து றங்குபவன் கூடிய மகிழ்ச்சியை யடைகிறான். தான் வருந்தித் தேடிய கைப் பொருளை அநுபவித்துக் கொண்டிருப்பவன் தன் மூதாதையரின் செல்வத்தை அனுபவித்துக் கொண்டிருப்போனைக் காட்டிலும் கூடிய மனச் சந்தோஷத்தை யடைகிறான். தன் மூதாதையரின் செல்வத்தை அனுபவிப்பவன், அதன் அருமை தெரியாது கண்டபடி வீண்விரயம் செய்து, சீக்கிரம் தரித்திரனுவான். தன் முயற்சியால் தேடிய பொருளைச் செலவு செய்யும் போது அவன் கணக்குடன் செலவு செய்து, மிகுதிகடை சிகாலத்துக் கெனச் சேகரம் பண்ணிவைத்துக் கொள்வான். ஆதலால் அவன் கடைசியிலும் அல்லலுற வேண்டி நேராது.

சிலர் "காலம் நல்லாயில்லை" "நல்ல காலம் வரும் போது எல்லாம் நன்மையாகவே நடக்கும்" என்ப னபோன்ற சமாதானங்களைச் சொல்லிக் கொண்டு வாணாள வீணாளாகக் கழிக்கின்றனர். முயற்சி இல்லாமலிருந்து கொண்டு காலம் நல்லா யில்லை என்று வீண் பொழுது போக்கித் திரியக் கல்வியும் செல்வமும் வலிய வந்து சேருமோ. எத்தனையோ மாணவர் பரீட்சையில் சித்தி பெப் தாதற்கு ஓர் காரணம் அவர்களிடத்தில் தன்னம் பிக்கையில்லாமையே. எந்த விதத்திலும் காரியத் தைச் செய்து முடித்தே தீரவேண்டுமென்ற மனே திடம் இல்லாமையாலேயே பலர் மேனிலை யடைவதில்லை. "என் தலைவிதி நான் தரித்திரனா யிருக்கவேண்டும் போலிருக்கிறது" என ஏங்கி நிற்போன் என்றைக்கும் தரித்திரனாகவே யிருப் பான். எல்லாம் கர்ம வினைப்படி நடப்தாயி னும்;

"தெய்வத்தா லாகாதெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்பதையும் உன்னிக் கஷ்டப்பட்டு முயற்சிப் போமேல், அதற்கேற்ற பயனடையாமற் போகார். ஆகாயத்துப் பறவைகளுக்கும் ஆகாரம் கொடுப் பவர் ஆண்டவர்தான். ஆனால் அவர் ஆகாரத் தைக் குருவிக் கூட்டில் கொட்டி வைக்கிறதில்லை. தேடிப்போகும் குருவிக்கு மாத்திரமே ஆகாரம் கிட்டும். கஷ்டப்படுகிறவர்களுக்கே பரம்பொ ருளும் பக்கத் துணையாய் நிருறு பேன்தவி புரி வார். நம்பிக்கையுடன் செய்யத் தொடங்கிய காரியம் வெற்றிகரமாய் முடிவடையும்.

ஐயோ சனியன்கார்ன் போய்விட்டான், குழ நன்தையோ கத்துகிறது. என்ன செய்வது எதை யென்றுதான் பார்ப்பது என்று சிணுங்கியபடி யிருந்தால் காரியம் ஆகுமா? காரியமும் ஆகாமல் வீண் மன வருத்தமல்லவோ உண்டாகும். ஆத லால் என்ன தொடங்கும் போதும் "இது என் னால் ஆகும், எத்தனை வேலைகளையும் மனச் சந் தோஷத்துடன் செய்து வந்தவர்களின் வழித் தோன்றலல்லவா நான். எனனால் செய்ய முடி யும்" என்ற தன்னம்பிக்கையை மனதில் பதிக் கொண்டால் ஒன்றுமே கஷ்டமாகத் தோற்றாது.

"பாடில்லாமல் பயனுண்டோ" தேங்காய் பறி க்க வேண்டுமானால் தென்னமரம் எறித்தான் தீர வேண்டும். சும்மா இருந்தால் சுகம் வருவதெங் ஙனம். ஒன்றிலும் மனச்சலிப்படையக் கூடாது. எந்த அலுவலையும் கிரமந் தவறாமல் செய்து முடிக்க வேண்டும். புத்திமானே பலவானுவான். பலமுளான் புத்தியற்றால் இடருற்று ஏங்கி நிற்க வேண்டியதே. நாளை நாளை என்று பிற்போடு வது புத்திமானுக்கழகல்ல. காலதாமதத்தினால எவ்வளவோ நஷ்டங்கள் உண்டு.

இவ்விடமிருக்கும் நம் சாதியாரின் தற்காலத் திய நிலமை என்ன? இத்தனை காலமும் நம் ஆண் மக்கள் இவ்வூர் அரசாங்கத்தில் உத்தியோகம் இலகுவாக எடுத்து வந்தார்கள். ஆனால் தற்காலத் திலோ இவ்வூர் மக்கள் அநேகர் ஆங்கிலம் படித்து விட்டபடியால், நம்மக்கட்கு உத்தியோகங் கிடை ப்பது அரிதாயிருகிறது. நம்மவரில் நூற்றுக் கணக்கான பிள்ளைகள் ஒவ்வொரு வருடமும் பரீக்ஷையில் தேறி வருகிறார்கள். அவர்களது பிற்கால நிலமை என்ன? இதைப்பற்றிப் பெற் றோர் என்ன யோசித்திருக்கிறார்கள்? வருத்தம் வந்தால் அதை முளையிலேயே களைந்து விடாமல், வியாதியை முற்றவிட்டால் பின் என்னவாகும்? எவ்வளவு கஷ்டம்? இப்படியே நம் குழந்தைகள் ஈற்றில் கஷ்டப்படாமல் இருக்க வழி தேடுவது மாதா, பிதாவாகிய இருபாலாருடையவும் கடமை யல்லவா? "வெள்ளம் வருமுன் அணை கோலிக் கொள்ளவேண்டு" மென்பார்கள். ஆனால் இதோ! வெள்ளம் கரைபுரண்டு நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது! இன்னும் நாம் அணைபோட முயற்சி செய்யாமலிருந்தால் ஈற்றில் என்னவா கும்? என்பதைச் சகோதரிகளே நீங்கள் நன்றாக யோசித்துப் பாருங்கள். எங்களில் நாங்களே நம்பிக்கை வைத்து ஒன்று கூடி என்ன செய்ய வேண்டுமென்பதை யோசித்து அதற்கேற்ற வழி வகைகள் தேடுவது அத்தியாவசியமல்லவா? பெ ண்களே தம்மக்களின் பிற்கால நலனை முக்கிய மாகக் கருதுபவர்களானதினால் அவர்களே இதைச் சிரத்தையுடன் சிந்திக்க வேண்டுகிறோம்.

ஒரு கனத்த பொருளைத் தூக்குவதற்கு நம் கையிலுள்ள ஒரு சிறு விரல் உதவி செய்தால் போதுமா? அந்தப் பொருளைத் தூக்க அச்சிறு விரலால் முடியுமா? அந்தக் கையிலுள்ள ஐந்து விரலுஞ் சேர்வதுடன் மற்றக் கையிலுள்ள ஐந்து விரலுஞ் சேர்ந்து உதவி செய்தால், எவ்வளவு சுலபமாக அப்பொருளைத் தூக்க முடியும். சகோதர சகோதரிகளே இப்படியேதான் நம் சமூக ஒத்துழைப்பும் என்பது நீங்கள் அறியாததல்ல. அப்படியிருந்தும் அதை உற்று யோசிக்காததோ அல்லது என்ன நியாயமோ இன்னும் தூக்கத்திலிருக்கிறீர்கள். இதோ வெள்ளம் உங்களை நாடி வந்து கொண்டிருக்கிறது! எழுங்கள்! விழித்தெழுங்கள்! உங்கள் கடமையைச் செய்யுங்கள்!

* * *

"ஈஸ்வரத்தியானம்" என்பது யாவர்க்கும் பொதுவாய், வெகு தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தியானமே மக்களுக்கு உற்ற துணை. தேகம் அழிந்த பின்னும் கூட வருவது அதுவே.

* * *

"இடம்ப வாழ்வு ஈற்றில் தாழ்வு" மிகவும் சிறந்த புத்திமதி. ஒரு சிறு கதை ரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. தற்காலத்திய நாகரீகத்தினால் படும் கஷ்டங்களைத் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகிறது. தாய் நாட்டிலிருந்தும், இவ்விடம் வதியும் தம் சகோதரரின் நலனை நாடி, எழுதி உதவி வரும் சகோதர சகோதரிகளுக்கு நாம் மிகுந்த நன்றி செலுத்தகின்றோம்.

* * *

ஈஸ்வரத் தியானத்தைப் போலவே அன்பின் மகிமையும் பக்திப் பெருக்கை வெளியிடுவதாயிருக்கின்றது. சூரியன் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்தாலும் குருடர் அதைப்பார்க்க முடிவதில்லை. அதுபோல் அஞ்ஞானமாகிய திரையொன்று நம் கண் முன் இருக்கும்போது நாம் அம்மகிமையை அறிவது எங்ஙனம்? "மனமாயை யன்றி மற்றொன்றுமில்லை" என்றபடி முதலில் மனதை அடக்கப் பழகிக் கொள்ளவேண்டும். மனதை அடக்க ஆசை (அதாவது உலகப் பொருள்களில் உண்டாகும் அளவு கடந்த இச்சை) அடங்கும். அவற்றைச் சிறிது சிறிதாக நாம் அடக்கப் பழகிக் கொண்டால் அந்த மகிமையை அறிந்து கொள்வது சுலபமாகும்.

* * *

"சரஸ்வதி" அல்லது "ஊக்கமுண்டேல் உயர் வையடையலாம்" சீதனத்தின் கேட்டையும் புரட்டு உருட்டுக்காரரின் செயல்களையும் விளங்க வைப்பதாயிருக்கிறது. இனி யார் ஊக்கத்தினால் உயர்வையடைந்தார்களென்பதை அறிய மிகுந்த ஆவலாக இருக்கிறோம். உத்தியோகம் அற்றவனை உத்தியோகமுள்ளவனென்று தீரவிசாரியாமல் பெண்ணைக் கொடுத்துவிட்டு ஏமாந்த நிற்பவரும் தற்காலத்திலுண்டு. அறியாமலா "பாத்திரமறிந்து பிச்சையிடு கோத்திரமறிந்து பெண் கொடு" எனற பழமொழி வழங்கி வருகிறது.

* * *

'வெற்றி யாருடையது" முடிவடைந்துவிட்ட போதிலும் வெற்றி யாருடையது என்று எம்மால் நிச்சயிக்க முடியவில்லை. இருந்தாலும் நம் சகோதரிகள் யாவரும் கல்வியறிவுடன் தேசாபிமான முள்ளோராய் இருப்பின், அவர் தம் புருஷன் பிள்ளைகளுக் அப்படியாய் சமூக சேவை செய்து நிற்பார்களென்பதற்கையமில்லை. ஆண்கள் வீண் பொழுது போக்குவதும் பெண்களின் அறியாமையாலேயே என்பது எமது துணிபு. சகோதரிகளே உங்கள் புருஷன் பிள்ளைகளை தெய்வபக்தி, தேசபக்தி, சமூகபக்தி உடையவர்களாகச் செய்வது உங்களாலன்றி மற்றவராலாகாது. "அபலைகளாகிய நம்மால் என்ன ஆகும்" என்று வீண் சாட்டுச் சொல்லி விடாதீர்கள். எல்லாப் பொறுப்பையும் உங்கள் கையில் அளித்திருக்கிறார் ஈசன். இனி அவர்களை நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ பழக்குவது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது. உங்களால் இயலாதது ஒன்றுமில்லை. சகோதரிகளே எழுங்கள்! உங்கள் கணவரை சோசமுடையவராகச் செய்வது உங்கள் கடமை. கடமையை மறந்துவிடாதீர்கள்.

ப—ர்

ஈஸ்வர தியானம்

எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே எழில் மிக்கதென்பது எக்காலத்தும், எச்சாதியாரும், எம்மதத்தினரும் ஏற்றுக்கொண்ட ஓர் மறுக்கொணு உண்மை. முறபிறவிகளிற் செய்த புண்ணியங்களின் பயனுகவே ஒருவன் மானிடப் பிறவி வாய்க்கப் பெறுகிறனென்று சமய சாஸ்திரங்கள் எடுத்துக் கூறும். உலகத்திலேயுள்ள சகல சிருஷ்டிகளையும் உற்று நோக்குமிடத்து மக்கட் பிறவியின் உன்னத நிலையை உணரத் தக்கதாயிருக்கும். பூர்வ புண்ணிய பூஜாபலத்தினுலே பொருந்திய இம்மானிட தேகத்தைக் கொண்டு நாம் செய்யவேண்டிய சேவைகள் பல வுள. திரிகரணங்களாலேயே நாம் பல தொழில்களையும் செய்கின்றோம். இவைகள் செவ்வனே செய்யப்படுவதற்கு எல்லாவற்றிற்கும் மேலாய்த் திரிகரண சுத்தியே அத்தியாவசியமாகும். திரிகரணங்களுள் மனம் மிகவும் மாட்சியுடையதென்பதை மறுத்தலரிது. ஏனெனில் வாக்காலும் காயத்தாலும் நாம் செய்வனவனைத்தும் மனதிற் றோன்றும் எண்ணங்களின் பயனேயன்றி வேறல்ல. வாக்காலும், காயத்தாலும் நாம் செய்யுங் கன்மங்கள் நம்மாலும், மற்றவர்களாலும் மெச்சப்படத் தக்கவைகளாயும், குற்றமற்றவைகளாயும், புண்ணியம் நிறைந்தவைகளாயுமிருக்க வேண்டுமென்று நாம் விரும்பினுல் நமது மனம் மிகவும் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும்.

செம்பிலிருக்கும் களிம்பை நீக்கித் திகழ்வித்தற்குப் புளி முதலிய பதார்த்தங்கள் புரியும் சேவை போன்று, நம்முடைய மனதிலிருக்கும் மாசு நீங்கி மகிழ்வெய்தற்குக் கடவுள் தியானம் ஓர் சிறந்த சாதனமாகும். பூரணராகும் பெருமான் ஒருவரிருக்கிறரென்பதும், அவரைத் தேடியடைந்து அவர் மயமாவதே பேரின்பம் பெறுவதற்குரிய பெறற்கரும் வழி யென்பதும், எம்மதத்தினருக்கும் சம்மதமான ஓர் கொள்கையாகும். மனம் பூரண நிலை அடையும்வரையும் ஏதாவதொன்றை எண்ணியபடியே யிருக்கு மென்பதை நாம் ஒவ்வொருவரும் அனுபவத்திற் கண்டிருக்கிறோம். துன்பமற்று, இன்பமுற்று வாழ நாம் விரும்பினுல் நம் மனதில் நிகழும் நிகழ்ச்சிகளொவ்வொன்றையுங் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். மனதிற்கு அடிமைப்பட்டு அதன் போக்கின்படி ஓடுகுபவர்களின் கதி அதோகதியாகவே முடியுமென்பதை ஒருவரும் மறுக்கத் துணியார். நித்தியவின்பத்தை நாடி நிற்பவன் மனம்போன போக்கெல்லாம் போகாமல், அறிவின் வழி நின்று மனத்தை யடக்கி நித்தியவின்பத்தைப் பெறுதற்குரிய வழி வகைகளைக் குறித்து யோசித்தபடி யிருப்பான்.

அஞ்ஞான அந்தகாரத்துள் அமிழ்ந்தி யிருப்பவர்கள் அவ்விருளைப்போக்கி, ஞானத்தை அடைவதற்குத் தெய்வ தியானத்தைப் போன்ற சிறந்த வழி பிறிதொன்றில்லை. குஷ்டம், சிரங்கு, காய்ச்சல் முதலிய நோய்கள் தேகத்தைப் பீடிப்பது போல கொலை, களவு, கள், காமம், குரு நிந்தை யென்னும் பஞ்சமா பாதகங்களையும் செய்ய மக்களை ஏவும் துர்க்குணங்களை, மக்களுடைய மனத்தைப் பற்றியிருக்கும் பிணிகளென்று சொல்வது பிழையாகாது. மனதை வருத்தும் பல துர்க்குணங்களையும் தொலைப்பதற்கு இடைவிடாத் தியானம் இன்றியமையாதது. கடவுள் தியானமென்ற திவ்விய பயிர், மனமென்னும் வயலிலே செழித்தோங்கி வளர்வதற்கு பொறுமை, வெகுளி முதலிய களைகள் அவ்வயலினின்றும் அகற்றப்படுதல் அவசியம். ஆகவே துர்க்குணங்களைப் போக்குவதற்குத் தியானமும், இத்தியானம் நிலைபெறுவதற்குப் பலவித துர்க்குணங்களை நீக்குவதும், அவசியமாதலால் ஒன்றற்கொன்று ஆதாரமாயிருக்கும்.

ஒருவனுடைய மனப எத்தன்மை யுடையதோ, அத்தன்மையைச் சார்ந்ததாகவே அவனுடைய சொல், செயல் இரண்டுமிருக்கும். நாம் விழித்திருக்கும்பொழுது நமது மனம் ஒன்றையும் பற்றாதிருப்பது ஒருபோதும் முடியாத காரியம். ஆனபடியால் இடைவிடாது நித்தியமான ஓர் வஸ்துவை மனம் எப்பொழுதும் பற்றியிருக்கச் செய்தல் இப்பிறவியின் உண்மையான பயனையடைய விரும்புவோர்கள் ஒவ்வொருவரும் அவசியம் கவனிக்க வேண்டிய ஓர் கடமையாகும். இக்கடமையை மறக்குந்தோறும் நித்திய வின்பத்திற் கருகராகாது, அற்பவின்பத்தைப் பெற்று அல்லலுறுவது நிச்சயம். மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், சதுரங்க சேனைகள், முதலிய சகல பாக்கியங்களும் வாய்க்கப் பெற்று ஒப்புயர்வற்ற ஓர் சக்கரவர்த்தி தானும், தவத்தியானமின்றிப் பவத் தியானத்திலே பயின்றவனுயிருந்தால், அவன் மானிடப் பிறவியின் மதித்தற்கரும் மகிமையை மறந்தவனுகி மனச் சஞ்சலம் நிறைந்த மதியிலோனுவான். ஒருவன் உண்ண உடுக்க ஒன்றுக்கும் வழியற்றவனுய் உற்றருறவினரற்ற ஓர் பரம ஏழையா யிருந்தாலும், எந்த நேரமும் ஈஸ்வர தியானமே யன்றி வேறோர் சிந்தையு மற்றவனுயிருந்தால் அவன் நித்தியவின்பம் நிரம்பப் பெற்றவனுய், புத்திசாலி யென்று பலராலும் போற்றப்படுவான்.

அழியும் பொருட்களில் ஆசை வைத்து அவைகளையே அல்லும் பகலும் அடைய வேண்டுமென்னும் அற்ப சிந்தையுடையவனுக்குக் கடவுள் தியா

னத்தாலடையப் பெறும் திவ்விய கதி ஒருபொழு துங் கிடையாது, மனத்தின் தன்மையதாகவே மக்கள் வாழ்வுமிருக்குமென்பது நாம் சரித்திரங் கள் மூலமாகவும் அனுபவ மூலமாகவும் கண்ட றிந்த சாற்றற்கரும் சத்தியம்.

இதை முற்ற யறிந்திருந்தும் உண்மையான வழியில் உள்ளத்தைச் செலுத்தாது, பயனற்ற வழியில் ஊக்கஞ் செலுத்துவது ஊழின் பயனே யன்றி வேறல்ல. "விண்ணுறுவார்க்கு விதி யில்லை" யென்ற பிரகாரம் இறைவனுடைய தியா னம் நமது இருதயத்தை முற்றுய்க் கொள்ளை கொண்டவுடன் பிறவிகள்தோறுஞ் செய்த பிழை களெல்லாம் வலியற்று நம்மை வருந்தா தொழி யும். உலகத்தின் பல பாகங்களிலும் காலத் திற்குக் காலம் அனேக ஞானிகளும், துறவிகளுந் தோன்றி உலகமுய்யும் பொருட்டும், தாங்கள் கடைத்தேறி நித்தியவின்பம் நிலைபெறச் செய்வ தற்காகவும், "சிவனே வணங்கிற் பவமணுகாது" என்பதை முற்றுயுணர்ந்து நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், என்றும் சச்சிதானந்த சொ ரூபியாகிய எம்பெருமானுடைய எண்ணமொன் றே யுடையவர்களாய், இப்பிரபஞ்சத்திலுள்ள அழியுந் தன்மை வாய்ந்த அனைத்திலும் அன் பற்றவர்களாய்ச் சீவித்து, உலகத்தவர்களுக்கு ஒப் பற்ற நன் முன்மாதிரி காட்டியிருக்கின்றனர்.

எப்பொழுதும் களவே தொழிலாகக் கொண் டவன் கள்வனுவது போலவும், ஓயாமற் பொய் சொல்லும் பழக்கமுடையவன் பொய்யனுவது போலவும், இடைவிடாது சிவத் தியானம் ஒன் றேயன்றி வேறோர் தியானமுமில்லாதவன் சிவத் தன்மையடைவது நிச்சயம். இத்தன்மை வாய்க் கப் பெற்றவர்கள் மற்றவர்களைவிட விசேஷமான வர்களென்பதைச் சமயகுரவர்கள், பட்டினத் தடிகள், தாயுமானசுவாமிகள் முதலிய புண்ணிய புருஷரத்தினங்களின் சீவிய சரித்திரங்களால் நன்கு விளக்கிக் கொள்ளலாம். சிவத்தன்மை பெறுவதற்குரிய வழிகளைக் கொஞ்சமேனும் சிந் தியாது பஞ்சப் புலன்களின் வழியில் நின்று பரி தபிக்கும் பாவிகள்கூடச் சிவத்தன்மை யடை வதைவிட வேறோர் உசிதநிலை இல்லை யென்பதை முழு மனதோடும் ஒத்துக்கொள்வர். இந்த அரிய உண்மையை விளங்காதவர்கள் இவ்வுலகத் திற் சிலரினுஞ் சிலரேயாம். விளங்கி யிருந்தும் நம்மிலனேகர் இந்த உசிதநிலை பெறுவதற்கு ஒரு சிறிதும் முயற்சிக்காது, அநித்திய பொருட்களை அவாவி, அவற்றைப் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பதைக் காண்பது எவ்வளவு பரி தாபமான காரியம். பிழையான வழிகளிலெல் லாம் போய்ப் பெருங் கஷ்டப்பட்டுப் பித்தரைப் போற்றிரிந்து, பின்பு நல்ல வழியை நாடுவதை விடக் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த கண்ணி யற்ற கனவான்களின் கட்டளைகளைக் கடவாது, எந்தத் தொழிலைச் செய்யும்பொழுதும் எல்லாம் வல்ல எம்பெருமானை ஏக சிந்தையோடு எண்ணி, எதையும் அவருக்கே அர்ப்பணமாகச் செய்தால், அல்லலனைத்தினின்றும் அகன்று எம்மதத்தினரு மேத்தும் எம்பெருமானை எய்தலெளிதாகும். அழியா இன்பமும், அளப்பரும் மனவமைதியும், சொலற்கரும் மனத்தூய்மையும், பகரரும் சிவப் பான்மையும் தவறாது கைகூடும். இத்தன்மைகள் வாய்ந்த எழிலுறு மாண்பினர், மயல்நிறை வாழ் விற் சிக்காது எக்காரியத்திலும் சித்தியெய்துவர். திரிகரண சுத்தியைப்பெற்று, அதன் வாயிலாய்த் திருவருளைத் தேடியடைந்து திவ்வியகதி சேர்வர். உலக மாயையிற் சிக்கி மயங்கி உழலுபவர்களுக்கு உன்னத நிலை இன்னதென்றுணரும்படி ஒப்பரும் உபதேசஞ் செய்வர். இவர்களினுதவியால் இன் னலுற்றிருப்போர் அனேகர் இறைவனின் இணை யடிகளை எண்ணியெண்ணி இன்புறுவர். பாவத் தைப் பகைக்கும் பாக்கியத்தை பெற்று, பல பொருட் பாசமற்று, நித்திய வஸ்துவை உள்ள வாறுணர்ந்து ஓங்காரத்துள்ளொளியைக் கண்டுய் வர்.

ஆதலால் நாமனைவரும் இம்மானிடப் பிறவி யின் மகிமையை மறவாது சிவத்தியானமொன்றே திவ்விய கதியிற் சேர்க்கும் சீலம் வாய்ந்ததென் பதைத் திண்ணமா யெண்ணி, மண்ணிலும், பெ ண்ணிலும், பொன்னிலும் மயங்கி மாழாமல் நம் மைக் காத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யுந்தோறும் அகண்டாகார சிவபோகத்தின் அனுபவம் அணையப் பெறுவோம். இதைவிட்டு, நித்திய துன்பத்தை நிலைக்கச்செய்யும் நிலையிலாச் சிற்றின்பத்தில் மனதை நிறுத்திலை, இன்னும் அனேக பிறவிகளை யெடுத்து, அறத்தை மறந்து, மறத்தில் மயங்கி வருந்துவோமென்பதற்கையமில்லை. உலகப் பொருட்களை அடைதற்கிருக் கும் ஊக்கத்திலும், பரமபதியின் பாதாரவிந்தங் களைப் பற்றும் பாக்கியத்தைப் பெறுவதற்குப் பன்மடங்கதிகமான ஊக்கமிருத்தல் வேண்டும். மனைவி, மக்கள், சுற்ற மித்திரர், காணி, பூமி முத லியவைகளிலேயே முற்றுகப் பற்றுவைத்திருப்ப வன் கடவுளின் கருணைக்காளாய்க் கலக்கமிலாக் கதியுறுவது மிகக்கஷ்டமாகும். ஆதலால் நாமெ ல்லோரும், எப்பொழுதும், எத்தொழிலைச் செய் யும் பொழுதும் சிவத் தியானத்தை மறவாமல் சிறப்புற்று விளங்கும்வண்ணம் சிவபெருமானின் திருவருளைத் தேடி யடைந்து திண்மை யுறுவோ மாக.

கா. சின்னப்பா,
தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம்.

: இடம்ப வாழ்வு : தற்றில் தாழ்வு :

—o—

மரீலே 5 மணி இருக்கும். பிரேமாவதி என்னும் பெண் தன் வீட்டு வாசலில் அடிக்கடி வந்து தன் கணவனுகிய சந்திரன் வருகிறானு என்று தெருவை நோக்குகிறாள். சிறிது நேரத்தில் சந்திரனும் வந்து சேர்ந்தான். உடனே அவனை அழைத்துக் கொண்டுபோய், ஆயத்தமாய் வைத்திருந்த சிற்றுண்டி தேனீரை இருவருமாக அருந்தினர்கள். சந்திரனே ஏதோ பெரும் யோசனையிலாழ்ந்தவன் போல் காணப்பட்டான். இதை உணர்ந்து பிரேமா பின்வருமாறு கூறினாள்.

பிரேமாவதி:—நாதா! யாது காரணம்பற்றி நீங்கள் இவ்வளவு ஆலோசனையில் இருக்கிறீர்கள்? என்னிடம் அதைத் தெரிவிக்கக் கூடாதா? உங்களுடைய சுகதுக்கமிரண்டிலும் பங்கு எனக்குண்டல்லவா? இரண்டு மூன்று தினங்களாக நான் கேட்டும் கூறாமலிப்பது சரியாகுமா?"

சந்திரன்:—கண்ணே! பிரேமா! நான் சிலநாட்களாக ஒரு காரியத்தைப் பற்றி யோசித்து, அதை விவர்த்தி செய்யும் விதத்தைப் பற்றித் தீர்மானித்துவிட்டேன்.

பி:—அவ்வளவு பிரமாதமான இரகசியம் என்ன? அதைச் சீக்கிரத்தில் எனக்குச்சொல்லுங்கள்.

ச:—இன்றைக்கு உந்தச் சமாசாரத்தை உனக்குச் சொல்லுவதென்று தான் இருந்தேன். அதற்கிடையில் நீயும் கேட்டு விட்டாய். நாங்கள் எவ்வளவு காலத்திற்கு இப்படி வாடை வீட்டில் இருப்பது? எனது நண்பரெல்லோரும் தமக்குச் சொந்தமான வீடுகளிலே குடியிருக்கிறார்கள்.

பி:—நாதா! அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலை கொள்ள வேண்டும்? எங்களுக்கு வசதியாயிருக்கும் பொழுது ஒரு வீட்டை வாங்கி, அல்லது கட்டிக் கொள்ளலாமே.

ச:—பிரேமா! நீ உலகமே அறியாதவள் போல் பேசுகிறாய்! எனது நண்பர்களான நடேசனும், கிருஷ்ணனும் எவ்வளவு அழகான வீடுகளையும், மோட்டார்களையும் வைத்திருக்கிறார்கள். அவர்களை எத்தனை பேர் விருந்திற் கெல்லாம் அழைக்கிறார்கள். அவர்களும் மற்றவர்களைப் போசனத்திற்கு அழைத்துக் கொண்டாடுகிறார்கள். அவர்களென்ன என்னை விடக் கூடச் சம்பளத்தில் வேலை பார்க்கிறார்களா? எனக்கோ உன்னையும், பிள்ளைகளையும் நல்ல அந்தஸ்தில் வைக்க வேண்டும் என்ற விருப்பமாயிருக்கிறது. நாங்களும் ஒரு தக்கவீட்டை வாங்கி அதிலிருந்து சிநேகிதருடன் கொண்டாடி வந்தால் தானே எங்களையும் நாலு பேர் மதிப்பார்கள்.

பி:—பிராண பதி! இது என்ன ஒரு நாளுமில்லாத திருநாளாய் இன்றைக்கு இப்படிச் சொல்லுகிறீர்கள்? மானிடராய்ப் பிறந்த நாமெல்லோரும், எம்மிலும் பார்க்கக் கீழ் நிலையிலிருப்பவர்க்கு எம்மாலியன்ற உதவியைச் செய்து அவர்களை மேனிலையடையச் செய்வதல்லவோ அழகு. அதை விடுத்து "மற்றவர்கள் மேனிலையில் இருக்கிறார்களே; நாமும் அவர்களைப் போல் வரவேண்டும்" என்று வகைவழி தேடுவதா? எங்களின் தற்போதைய அந்தஸ்துக்கு என்னகுறை? எப்பொழுதும் இப்படியிருக்க அந்த சர்வேசன் கருணை புரிவாராயின் போது மானதல்லவா?

ச:—பிரேமா! என் இதையிட்டு இவ்வளவு கண்டனம்? சென்ற 5 வருடகாலமாக நாங்கள் இந்த வீட்டிலிருந்து எவ்வளவு தொகையை வாடகைப் பணமாகக் கொடுத்திருக்கிறோம் என்பதை நீயறியாதவளல்லவே. இப்படிக் காசைக் கொட்டுவதிலும் பார்க்க ஒரு வீட்டை வாங்கிவிடல் சகாயமென்று எண்ணினேன்.

பி:—நீங்கள் என்ன சொன்னபோதிலும் எனக்கோ இந்த அபிப்பிராயம் உசிதமாகத் தோன்றவில்லை. சரி! இதற்கு வழியேது? அப்படி ஒரு வீடு வாங்குவதாயிருந்தால் ஆயிரக் கணக்கான பணம் வேண்டுமே; அதற் கென்ன செய்வது. நம்மிடம் அவ்வளவு பொருள் இல்லையே!

இப்படி இவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு மோட்டார் சத்தம்கேட்டது. கிளப்பிற்கு அழைத்துப் போவதற்காகத் தன் நண்பனொருவன் வந்திருப்பதாயும், தான் சென்று வருவதாயும் பிரேமாவிடம் சொல்லிப் போனான் சந்திரன்.

கதாநாயகியாகிய நம் பிரேமாவதியின் வரலாற்றைச் சற்று கவனிப்போம். அந்தப் பெண்ணுக்குச் சுமார் 27—28 வயதிருக்கலாம். நல்ல வடிவழகி. அவள் ஒவ்வொரு அம்சத்திலும் நல்ல உத்தம லக்ஷணங்களைப் பெற்ற உத்தமி என்பதை அவளுடைய நடையுடை பாவனைகளும், அவள் பேசும் மாதிரியும் விளக்குகின்றன. அவள் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவளாலும் அவள் பெற்றோர்:—

'வைப்புழிக்கோட்டபடா வாய்த்தியிற் கேடில்லை
மிக்க சிறப்பினரசர் செறின்வவ்வா
ரசசமென் வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற் றல்ல பிற"

என்பதை நன்குணர்ந்தவராய், அவளுக்குத் தாய்ப்பாஷையிலும், ஆங்கிலத்திலும் கல்வியூட்டினார்கள். பிரேமா இயன்ற அளவு கற்றுத் தேறி

பின் ஓர் பெண்கள் பாடசாலையில் உபாத்தியாயினியாகக் கடமை பார்த்து வந்தாள். சென்ற 5 வருடங்களுக்குமுன் அவளுக்கு விவாகம் நடந்தது. விவாகத்தின் பின் உபாத்தியாயினி வேலையினின்றும் விலகிக் குடும்ப நிர்வாகத்தை ஏற்றுச் சரிவர நடத்தி வந்தாள். ஆனால் அவளுக்குத் தன் கணவனின் நடவடிக்கைகள் சில, மனதுக்குப் பிடித்துக் கொள்ளவில்லை. அதனால் அவள் சிறிது துக்கமுடையவளாய்க் காணப்பட்டாள். அவள் கணவன் ஓர் செலவாளி. ஆடம்பர வாழ்க்கையில் சற்றுப் பிரியமுள்ளவன். ஆனால் பிரேமாவோ சிக்கன வாழ்க்கையே சுகத்தில் பயனளிக்கும் என்ற உறுதி கொண்டவள். இப்போ தன் கணவன் திடீரென் வீடொன்று வாங்குவதாகச் சொன்னது இவளுக்குப் பெரிய சஞ்சலத்தை உண்டு பண்ணியது. "ஆ! சுகர! நான் எவ்வளவு சொல்லியும் அவர், தான் நினைத்தது முடிக்கவே தீருவார் போலிருக்கிறதே. இவ்வளவு பெருந் தொகைப்பணத்திற்கு என்ன ஒழுங்கு செய்தாரோ" என்று தனக்குள் எண்ணிய வித்தம் கணவன் வருகையை எதிர் பார்த்திருந்தாள். பிரேமா எவ்வளவு ஆவலுடன் காத்திருந்தும், அன்று சந்திரன் திரும்பி வர வெகு நேரமாய்விட்டது. சந்திரன் வருகைகண்ட பிரேமா உடனே அவனை அழைத்துவந்து இராப் போசனமருந்தும்படி கேட்க, அவன் ஒரு காரணமுமின்றி அவளை வெறுத்துக்கோபித்து, ஓர் அறைக்குள் போய்க்கட்டிலொன்றில் சாய்ந்து விட்டான். இந்த விபரீதமான செய்கையைக் கண்ட பிரேமா துக்கமும் ஆச்சரியமும் அடைந்தவளாய், சிறிது நேரம் பிரமித்து நின்றாள். பின்பு "ஏது இன்று ஒருநாளுமில்லாதபடி விபரீதமாகக் கோபித்துக் கொண்டார். உடம்புக்கு ஏதும் அசௌகரியமோ தெரியவில்லையே. ஏதோ தயவாகக் கேட்டுப் பார்ப்போம்" என்று தனக்குள் நினைத்தவண்ணம் தன் கணவனருகில் சென்றாள். "நாதர்! உங்கள் உடம்பு அசௌகரியமாயிருக்கிறதா? ஒன்றும் சாப்பிடவுமில்லையே. கொஞ்சம் காப்பி கொண்டு வரட்டுமா" என்று பரிந்து கேட்டாள். அதற்குச்சந்திரன் அவளை அருகுநிற்க வேண்டாமென்று கடிந்து கோபித்தான். பேதைப் பிரேமாவுக்கோ ஒன்றும் புரியவில்லை. நடந்ததெல்லாவற்றையும் எண்ணி மிகவும் சஞ்சலமடைந்தாள். இரவுக்காலம் தனியாக வருகையில் ஏதோ பேய் பிசாசொன்று தன் கணவனைத் தொடர்ந்து வந்துவிட்டதோ என்றும் நினைத்தாள். ஆம்! சந்திரன் வருகையில் பிசாசொன்றுதான் கூட வந்திருக்கவேண்டும். பிரேமா இங்ஙனம் நினைத்ததிற் பாதகமில்லை. தற்காலத்தில் கணவர் கிளப்பில், பார்ட்டிகளில் அதிக நேரம் கழித்து விட்டு வீட்டுக்குத் திரும்பும்போது பிசாசும் தொடர்வது சகசந்தானே. ஆனால் நம்மைப்பாலியத்தில் பயிற்படுத்துவதற்காகப் பெற்றோரைழைக்கும் பிசாசல்ல இப்பிசாசு. இது சில மஸ்துள்ள வஸ்துகளைப் பருகுவதால் உண்டாகும் மகா பயங்கரமான பிசாசு. அந்தோ! இது எத்தனை குடும்பங்கள் சீர் குலைவதற்கு ஏதுவாயிற்று?

மறுநாள் சாயங்காலம் சந்திரன் கந்தோரால் வருகையில் "பிரேமா நாங்கள் இனி புதுவீட்டிற்குப் போக வேண்டிய ஆயத்தங்கள் செய்யவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே வீட்டுள் புகுந்தான்.

பி:—நாதா! இதென்ன ஆச்சரியம்! நேற்று வீடொன்று வாங்க வேண்டுமென்று சொன்னீர்கள். இன்றைக்கு இந்த வீட்டை விட்டகல வேண்டுமென்கிறீர்களே! எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லுங்கள்.

ச:—சரி சொல்கிறேன் கேள். வீடொன்று விலைக்கிருப்பதாகப் பத்திரிகையில் விளம்பரத்தைக் கண்டேன். அந்த வீட்டைப் போய்ப் பார்த்தேன். அது எங்களுக்கு ஏற்றதென்று தோன்றியபடியால் உடனே அதன் சொந்தக்காரரைக் கண்டு விசாரித்தேன். வீடும் நிலமும் பத்தாயிரம் ரூபாவென அறிந்தேன்.

பி:—என்ன! பத்தாயிரமா! இவ்வளவு தொகைக்கு நாமென்ன செய்வது?

ச:—நாமென்ன செய்வதா? படித்தும் உனக்குப் புத்தியில்லை. பணமில்லாதபோதில் அது இருப்பவரிடம் கடன் படுவதுதானே. அதை விடச்சுலபமானது வேறு என்ன?

பி:—ஆ! கடன் படுவதா சுலபமான காரியம்? எங்களுக்கு இப்போ வீடும் வேண்டாம்; அதன் மேற்படும் அநாவசியமான கடனும் வேண்டாம்; நாம் எவ்வளவு கஷ்டமடைந்த போதிலும் ஒரு போதும் கடன் படக் கூடாது. இது பற்றியன்றே ஆன்றோரும் "கடனில்லாக் கஞ்சி காலவயிறு போதும்" என்று கூறினார்கள். இப்போ கடன் வாங்கினால் பிறகு அது எப்படித் திருப்பிக் கொடுக்கிறது.

ச:—ஏது உனக்குப் புத்தி திடீரென மழுங்கி விட்டது! நாங்கள் இப்போ மாதா மாதம் ரூ. 75-00 வாடகையாகக் கொடுக்கிறோமல்லவா. அதை அப்படியே கடனுக்காகக் கொடுக்கிறதுதானே.

பி:—அப்படி மாதம் ரூ75-00 ஆகக் கொடுத்தால் ஒரு வருஷத்தில் 900 ரூபாவாகும். அப்படியென்றால் முழுத்தொகையும் தீர்க்கப் பத்து வருடங்களுக்கு மேலாகுமே! அத்துடன் வட்டிப் பணமும் இறுக்கவேண்டுமே!

ச:—வீணாகக் கூச்சல் போடாதே. எனக்கு என்ன எப்போதும் சம்பளம் 300 ரூபாவாகவா இருக்கப்போகிறது? சீக்கிரத்தில் எனக்குச்

சம்பளம் உயருமென்று கேற்று அறிந்தேன். அப்படி உயரும் பொழுது கடன் காசையும் கூட்டிக்கொடுக்கலாம் அப்படிச் செய்தால் 6 வருஷத்தில் கடன் தீர்ந்துவிடும்.

பி:—6 வருஷமென்றால் சொற்ப காலமா? கடன் படுவதென்றால் எனக்குச் சற்றும் சம்மதமில்லை. நாதா! தயவு செய்து இந்த எண்ணத்தை விட்டு விடுங்கள். கடன் படுவதைப் போல இழிவான செயல் ஒன்றுமேயில்லை அதனால் எவ்வளவோ கஷ்டங்கள் நேரக்கூடும். கடன் பட்டவர்களுக்கு மன நிம்மதி எப்படியிருக்கும்? இதுபற்றியன்றோ

"விடங்கொண்ட மீனைப் போலும் வெந்தழல்
[மெழுகு போலும்
படங் கொண்ட பாந்தழ் வாயிற் பற்றிய
[தேரை போலும்
திடங் கொண்ட ராமபாணம் செருக்களத்
[தற்ற போது
கடன் கொண்டார் நெஞ்சம் போலக்
[கலங்கினனிலங்கை வேந்தன்',

என்று மகா கவி கம்பரும் பாடியுள்ளார்.

ச:—கடன் கொடுக்கல் வாங்கல் முறையிலே யே வர்த்தக வியாபார கருமங்கள் நடைபெறுகின்றன. இந்தப் பத்தாயிரம் ரூபாதான் ஒரு பெருந் தொகையென்று நீ உயிரை விடுகின்றாய். அன்று என நண்பன் நடேசனுக்குக் குதிரைப் பந்தயத்தில் இருபதினாயிரம் ரூபா விழுந்தது. அப்படி ஓர் அதிர்ஷ்டம் எனக்கும் நேர்ந்தால் இந்தக்கடன் எம்மாத்திரம்?

பி:—சரி. ஏதோ என்சிற்றறிவுக்கு எட்டியவற்றைச் சொன்னேன். "காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒருகருமம் செய்பவே" என்றார் ஆன்றோர். ஆனது பற்றி உங்கள் கருமங்களுக்கு விரோதமாயிருப்பது எனக்குச் சித்தமில்லை. எங்கள் இரு குழந்தைகளும் இப்போ சிறுவராயிருந்தாலும் அவர்கள் வளர வளர அவர்கள் கலவிவிஷயத்தில்செலவதிகரிக்கும். இன்னும் இடஞ்சல்களவரும் நேரத்தில் உதவுவதற்கென்று இல்லறத்திலுள்ளோர் கூடிய தொகையைச் சேகரித்து வைப்பது சகசம். "வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கோலி வையார் பெருகுதற் கண் என்செய்வார்" என்றகூற்றுக்கு நாம் உட்பட்டல்ல வதுமாதாந்தம் சேர்த்துக்கொள்ளவேண்டாமா? இன்னோரன்ன நியாயங்கள் உங்களுக்கு ஞாபகமூட்டினேனன்றி நீங்கள் எடுத்துக்கொண்ட கருமத்திற்கு நான் குறுக்கிடவில்லை.

மேற் கூறிய சம்பாஷணை நடந்த சிலநாட்களுக்குப் பின், சந்திரன் மனைவி மக்களுடன் புதிய வீட்டிற்குச் சென்றான். அன்று "கிரகப் பிரவேசம்" என்று பல நண்பர்களை அழைத்து உபசரித்துக் கொண்டாடினார்கள். அதற்குப் பின் சந்திரன், தன் நண்பர்களுடன் கூடிச் சில பழக்கங்களைக் கற்றுக் கொண்டான். இப்பழக்கங்களில் ஈடுபட்டதன் பயனாகத் தன் வீட்டுக்குருமங்களைச் செவ்வனே கவனியாது விட்டான். இப்படியிருந்தும் பிரேமாவதியின் தூண்டுதலினால் முதல் 5, 6 மாதங்களுக்குக் கடனின் வட்டியையும் முதலில் பாகத்தையும் கட்டிவந்தான். பிரேமாவோ தற்கால முறையில் கல்வி பயின்ற வளானாலும், தன் கணவனைத் தெய்வம் என மதிப்பவள். ஆனது பற்றி அவனிடம் குற்றங்களைக் கண்டபோதும் அவற்றைக் கண்டியாது ஏதும் புத்தி மதிகளைப் பகன்று வருவாள். ஏற்கனவே சந்திரன் கிளப்புக்கு அடிக்கடி போவதும், சினிமாவில், குதிரைப்பந்தயத்தில் காசு செலவிடுவதும் இவளுக்கு மனஸ்தாபத்தைக்கொடுத்தன. இது மாத்திரமல்ல; புதிய வீட்டுக்குவந்த கொஞ்ச காலத்துக்குப் பின் சந்திரன் தன் நண்பர்களைக் கொண்டாட்டங்களுக்கழைத்து, அவர்களை மதுபான வகைகளால் உபசரிப்பதும், தானும் அவர்களிடம் போய் அந்தப்பான ங்களைப்பருகுவதும் வழக்கமாயிருந்தது. இதுகளையெல்லாமறிந்த பிரேமா, தன் கணவனை எப்படி நல்வழியில் திருப்பலாம் என்று பின் வருமாறு எண்ணி யெண்ணி மனம் புண்ணாளாள். "ஆ! தெய்வமே! நாமிந்த வீட்டிற்கு வந்தது முதல் என் மனதிற்குச் சற்றேனும் நிம்மதியில்லையே. நான் எவ்வளவு புத்தி சொல்லியும் அவர் எதையும் கவனிப்பதாகத் தெரியவில்லையே. இப்போ மூன்றுமாதங்களாகக் கடன் காரனின் வட்டியாவது முதலாவது கொடுபடவில்லை. நாளைக்கு அவன் வீட்டை விட்டுப் போகும்படி சொன்னால் என்னசெய்வது! வீடும்போய் இவ்வளவுநாளும் கொடுத்த காசும் வீணாகப் போய்விடுமே! என்னிடமோ ஒரு காசுமில்லை. வீட்டின் செலவிற்காகத் தருகின்ற காசும் சாப்பாட்டிற்கே போதவில்லை. கடன் ஒரு புறமிருக்கக் குதிரைப் பந்தயத்திலும், மதுபானத்திலும் எவ்வளவு அழிந்து போகிறது! இவையெல்லாவற்றிற்கும் காரண கர்த்தாவாயிருக்கும் அவரின்தற் (போதைய நண்பர்களின் சகவாசமிருக்கு மட்டும் அவர் ஒருபோதும் நல்வழியிற் திரும்ப மாட்டார். இன்றைக்கும் ஒரு தரம் சொல்லிப் பார்ப்போம்."

அன்று சாயந்தரம் பிரேமா தன் கணவனைநோக்கி "நாதா, நான் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ள வேண்டாம். இப்போ மூன்று மாசங்களாகக் கடன்காரனின் காசு கொடுக்க வில்லை. இவற்றைக் கவனியாமல் கிளப்பும், குதிரைப் பந்தயமுமாக என்றும் உங்கள் நண்பருடன் சகவாசஞ் செய்தால் கடன் எப்படிக் கொடுத்து முடிக்கிறது?

ச:—ஆ! இதுதானே பெரிய பிரமாதமான காரியம். என்னுடைய நண்பர்கள் எந்த நேரத்தில் வேணுமானாலும் எனக்குதவி செய்யப் பின் வாங்கமாட்டார்கள். இல்லாது போனால் என்னத்திற்காக நான் அவர்களுடன் இவ்வளவு ஐக்கியமாகப் பழகி வருகிறேன். நான் நாளைக்குப் போய் நடேசனிடம் வாங்கிக் கடன் காரனுக்குக் கொடுக்கவேண்டிய காசைக் கொடுக்கிறேன்.

பி:—நீங்கள் என்னத்திற்காக எந்த நாளும் கிளப்பிற்கே போகிறீர்கள்? வீட்டிலும் கொஞ்சம் தங்கினாலென்ன? குழந்தைகளுக்கும் உங்கள் முகத்தைக் காண்பது அருமையாய் விட்டது. அவர்களின் மதலை மொழிகளைக் கேட்டு இன்புறுது கிளப்புக்குப் போனால் போதுமா? அப்படித்தான் இடைக்கிடை போனாலும் நேரத்தோடு வீடுவந்தாலென்ன?

ச:—வீட்டிலிருந்து என்ன செய்வது? உன்னையும், குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா? கிளப்புக்குப் போனால் நாலு பேரைச் சந்திக்கலாம்; சீட்டாடலாம். சரி, எனக்கு நேரமாகிறது. நான் இன்றைக்குக் கட்டாயமாகக் கிளப்பிற்குப்போக வேண்டும். நடேசனையும் கண்டு அந்தக் காசுக்கு ஒழுங்கு பண்ண வேண்டும்.

மறு நாள் சந்திரன் தன் நண்பனிடம் சென்று நோட்டில் கையெழுத்திட்டுக் காசு வாங்கிக் கடன் காரனுக்குக் கொடுத்து விட்டான்.

ஒரு மாதத்தின் பின் ஒருநாள் பிரேமாவதியின் சிற்றன்னை, தான் அசௌக்கியமாயிருப்பதாயும், உடனே வரும்படியுந் தந்தியனுப்பியிருந்தாள். அதையறிந்த சந்திரன் தன்னால் போக முடியாதென்றும், பிரேமாவை மட்டும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போகும்படி சொன்னான்.

பிரேமாவதியும் சிற்றன்னை வீட்டிற்குப் போய் இரண்டு மாதங்களாகி விட்டது. அவளின் சிற்றன்னைக்கு வேறு நெருங்கியபந்துக்கள் யாருமில்லாதபடியால் பிரேமா அப்படித் தாமதப்பட நேரிட்டது. பிரேமா பல கடிதங்களை எழுதியனுப்பியும் சந்திரன் தொடக்கத்தில் எழுதிய ஒரு பதில் கடிதத்தோடு நின்றுவிட்டான். அதில் தான் சேஷமமாயிருப்பதாயும் சிற்றன்னைக்கு உடம்பு சௌகரியப் பட்டவுடன் திரும்பி வரும்படியும் எழுதியிருந்தான். நாட்கள் செல்லச் செல்ல பிரேமாவுக்கு அச்சமதிகரித்தது. தன் "கணவனின் உடம்புக்கு ஏதும் அசௌக்கிய மேற்பட்டிருக்குமோ; கடனுக்காகக் கொடுக்க வேண்டிய பணத்தை ஒழுங்காகக் கொடுக்கிறாரோ" என்று பலவிதமாக எண்ணி வருந்தினாள். இன்னும் இரண்டு நாட்களில் கடிதம்வராதுபோனால் சிற்றன்னையிடம் விடை பெற்றுக்கொண்டு போய்த் தன்கணவனைப் பார்த்து விட்டு வருவதாகத் தீர்மானித்தாள். இதற்கிடையில் சந்திரனோ, பிரேமா வெளிக்கிட்டபின் தன் கருமம் ஒன்றையும் கவனியாது, பல இடங்களிலும் கடன் வாங்கித் தான் விரும்பியபடி செலவழித்து வந்தான். சந்திரன் பல இடங்களில் நோட்டில் கையெழுத்திட்டுக் கடன் வாங்கியிருப்பதைப் பற்றி யாரோ அரசாங்கத்தாருக்கு மனுப்பண்ணி விட்டார்கள். தக்க நடவடிக்கைகளின்பின் சந்திரன் அரசாங்கத்தாரால் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டான். இதனையறிந்த செட்டியார் கடனுக்காக ஈடாக எழுதி யிருந்த வீட்டைப் பிடித்துக் கொண்டார். இறுதியில் உத்தியோகமும் போய், வீடும் போய், உற்ற நண்பர்களாலும் கைவிடப்பெற்றுச் சந்திரன் தத்தளித்தான். அப்போது தான் அவனுக்குத் தன் மனைவி சொல்லிய சற்போதனைகளெல்லாம் ஞாபகத்தில் வந்தன. தன்னையே தான் வெறுத்தான் இந்த அவமானத்துடன் எப்படி உயிர் வாழ்வது என்று எண்ணிப் பின் தன் மனைவியையும், மக்களையும் நினைத்து அவர்களுக்காகவாயினும் தன்னுடைய எஞ்சிய வாழ்நாளை நல்ல வழியில் கழிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். உடனே பிரேமாவிடம் போய் எல்லா விபரங்களையும் அவளுக்குச் சொல்ல வேண்டும் என்று நினைத்து அன்றிரவே புறப்பட்டான்.

காத்திராப் பிரகாரம் தன் கணவனைக் கண்ட பிரேமா சற்றுச் சந்தோஷமடைந்தாளெனினும், அவரின் முக வாட்டத்திலிருந்து ஏதோ பெரிய ஆபத்து நேர்ந்திருக்க வேண்டுமென்று நினைத்தாள். ஈற்றில் எல்லா விபரங்களையும் அறிந்த பின், "நாதா! உத்தியோகமும் வீடும் போனாலென்ன; நீங்கள் மாத்திரம் நல்வழிப்பட்டு சேஷமத்துடன் திரும்பி வந்ததே போதும்" என்று சொல்லித் தேற்றினாள்.

ச:—என்னருமைப் பிரேமா! நீ ஆதியில் சொன்னதை நான் கேட்டிருந்தால் எங்களுக்கு இப்போ இந்த அவமானமும், துன்பமும் வந்திராதே. இனி நான் ஒருபோதும் நீதி நெறியிலிருந்து வழுவமாட்டேன்.

சந்திரனுக்கோ தாங்களெல்லாரும் சிற்றன்னை தயவில் தங்கியிருப்பது விருப்பமில்லை. தனக்கு ஏதாவது ஒரு முயற்சி கிடைக்குமோ என்று தேடிப்பார்த்தான். ஒன்றும் கிடைக்க வில்லை. இதையறிந்த பிரேமா, கடைசியில் அந்தக் கிராமத்திலுள்ள தமிழ் பாடசாலையில் ஓர் உபாத்தியாயினி தேவை என்பதை அறிந்து விண்ணப்பம் அனுப்பினாள். பாடசாலை அதிபரால் பிரேமாவே தேர்ந்தெடுக்கப்பட்டாள். பிரேமா தனக்கு வேலை கிடைத்தவுடன் கணவனிடம் அறிவித்துத் தன்சிற்றன்னையிடமும் அதுமதி கேட்டாள். சிற்றன்னையோ தன் உதவியிருக்குமட்டும் பிரேமா உழைத்துக் குடும்பத்தைத் தாபரிக்க வேண்டிய அவசியமில்லை என்று எவ்வள

வோ சொல்லியும், பிரேமா "நான் ஒருவள் மாத்திரமென்றால் சரியில்லை; நாலு பேரையும் நீங்கள் தாபரிப்பதென்றால் சரியில்லை. உங்களைச் சரியாகக் கவனிக்கமாட்டேன் என்று நினைக்கிறீர்கள். அதெல்லாம் நான் முன்போலவே செய்வேன். அவர் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்வார். நான் நெடுகப் படிப்பிக்கப்போகிறேனே? அவருக்கு ஒரு முயற்சி கிடைத்தவுடன் விட்டு விடுவேன்" என்றாள். இறுதியில் சிறறன்னையும் ஒத்துக்கொண்டாள். பிரேமா தனக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தேர்டு சிக்கனமாகக் குடும்ப காரியங்களை நடத்திவந்தாள்.

சில மாசங்களின் பின் பிரேமாவின் சிறறன்னைக்கு வியாதி அதிகரித்து சில தினங்களில் மரணமடைந்தாள். அவளுக்குப் பிள்ளைகளில் லாதபடியாலும், பிரேமாவைத் தன் சகோதரி மகள் என நினையாது, சொந்த மகளென அன்பு பாராட்டி வந்தபடியாலும், மரண சாசனத்தில் தன் வீடு நிலங்களெல்லாம் உட்பட தன்னுடைய ஆஸ்தி முழுவதும் பிரேமாவுக்குச் சேரவேண்டுமென்று எழுதியிருந்தாள். இதையறிந்த சந்திரனும் பிரேமாவும் சந்தோஷமடைந்தார்கள். இப் பொருளில் ஒரு பாகத்தைக் கொண்டு சந்திரனுக்குள்ள கடன்களைத் தீர்த்தார்கள். பிரேமாவின் வேண்டுகோளின்படி எஞ்சிய பொருளைக் கொண்டு சந்திரன் ஒரு பொருட் சாலையை ஸ்தாபித்துச் சரி வரநடத்திவந்தான். காலகதியில் இது இவர்களுக்குப் போதிய வருமானத்தை அளித்தமையால் பிரேமா பாடசாலையை விட்டு விலகித் தன் கணவனுக்குதவி புரிவதும், பிள்ளைகளின் கல்வி ஒழுக்க விஷயங்களைக் கவனிப்பதுமாக வருகிறாள்.

இசசம்பவங்கள் நடந்து இப்போ ஐந்து வருஷங்களாகின்றன. சந்திரனும் பிரேமாவும் சகல சம்பத்துடன் இல்லறம் நடாத்தி வருகிறார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் பிரேமா பத்திரிகை யொன்றில் நடேசன் சிவில் வாரண்டில் கைது செய்யப்பட்டான் என்ற செய்தியைக் கண்டாள். கண்டமாத்திரம் தன் கணவனிடம் அதைத் தெரிவித்தாள். அப்போ சந்திரன் "என்ன! என் நண்பன் நடேசனு! அந்த லக்ஷாதிபதியா கைதியாக்கப்பட்டான்"! என்று சொல்லிப் பிரமித்து நின்றான்.

பி:—ஆம! உங்கள் நண்பன்தான்! இதோ படித்துப் பாருங்கள். காலம் பகைத்தது போலும்.

"ஆன முதலிதிகஞ் செலவாலை
மானமழிந்து மதி கெட்டுப்—போனதிசை
எலலாக்குங கள்ளனு யேழ் பிறப்புந் தீயனுய்
நல்லாக்கும் பொலலனு நாடு."

என்ற நல்வழி வாக்கியம் பொய்யாகுமா!

—ஆ. க.

Boswell Place,
Wellawatte, 2-10-37.
Ceylon.

: : அன்பின் மகிமை : :

அன்பு என்னும் பதத்திற்கு பக்தி, நம்பிக்கை, விசுவாசம், ஆசை, காதல், நேசம், தயை, முதலான பற்பல பரியாய நாமங்களுண்டு. அவை யனைத்தும் ஒரு பொருட் பல பெயர். அன்பு நானவிதமாகும். நாயகன் நாயகிகளுக் கிடையில் பிரகாசிக்கும் அன்பிற்கு காதல் என்றும், நண்பர் உறவினர் முதலியவர்களிடையிலுண்டாகும் அன்பிற்கு நேசமென்றும், ஏழைகள், மிருகங்கள், பக்ஷிகள் முதலான ஏனைய பிராணிகளின் மீதுண்டாகும் அன்பிற்கு தயை, கிருபை, காருண்யம் என்றும், கடவுள் மீதேற்படும் அன்பிற்கு பக்தியென்றும் பெயர். அன்பு முளைக்கும் ஆரம்பத்திற்கே பக்தியெனக் கூறுவார்கள். பக்தியின் முதிர்ச்சியாகிய அன்பானது, முழு நம்பிக்கை விசுவாசத்துடன் கடவுளைத் தரிசித்து, தியான சொரூபமாகப் புரியும் அரிய பெரிய முயற்சியாகும். அத்தகை முயற்சியானது இடைவிடாமல் கடவுளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்குமாகில் சர்வ பாச பந்தங்களும் நீங்கப் பெற்று, மோட்சம் அடைவதற்கும் ஏற்ற சாதனமாகும். அஃது தலையன்பு, இடையன்பு, கடையன்பு, என மூவகைத்தாகும். இதில் தலையன்பேசிறப்புற்றது. எங்ஙனம் உயிரில்லாவிடின் உடம்பினாற் பிரயோசனமில்லையோ, அங்ஙனமே அன்பில்லாவிடின் எத்தகைய பூசை, போகம், ஞானம், முதலிய யாவும் சோபிக்கமாட்டா. ஆகையால் எவரும் உள்ளன்பெனும் வழிகாட்டியின் மூலமாகவே கருணையங் கடலாகிய கடவுள் தெய்வீகச் சன்னிதானத்தை நண்குணரமுடியுமேயன்றி, அன்பில்லாத பல புறக் கிரியைகளால் மட்டும் ஒருபோதும் காண்டற்கியலாதென்பதில் திண்ணம்.

அன்பென்னும் விதையை, அச்சம் என்னும் பூமியிற் பதித்து, ஆனந்தக் கண்ணீரெனும் தண்ணீர்

வார்க்காவிடின், அந்தரமாகிய மூலதோன்றி, அருளென்னும் மணி பிடித்து விளையாட்டார்.

அன்பிற்கு உப்பலமாகிய அச்சம் நமக்கு ஏற்பட்டு, அவ்வச்ச மேலீட்டால் சரீரத்திலுள்ள உரோமக் கால்கள் சிலிர்க்க, சரீரம் வாட்டமுற்றுக் குழைய, மனமுருக, இரு கண்களிலிருந்து இடைவிடாது ஆனந்த நீர் வெதும்பிச் சொரிய, கடவுளுடைய குணங்களை பல்கால் சிந்தித்து கண்ணே, கருத்தே, எண்ணே, எழுத்தே, பொன்னே, பொருளே, அன்னே, அரசே, மூத்தே, முதலே, சித்தே, திருவே, என்பலவாறு துதித்துப்பாடி, ஆடி ஆரவாரித்துக் குதித்து அன்பினால் மூர்ச்சையடைந்த மெய்யன்பர்கட்கு கடவுள் சன்னிதானம் அதிக தூரமில்லை. ஆதலின் அன்பு செலுத்துவதற்கு பயபக்தி என்று வழங்கானின்ற அச்சமும் வேண்டற்பாலதே.

அன்பின் பெருமையோ அள்ளிடற் கரிதாய்த் திகழ்கின்றது. அன்பினாலேயே கடவுளின் திருவை உண்டாகிறது. மனம் சாந்தியடைகிறது. பந்துக்கள் அகமகிழ்கின்றனர். அன்பினாலேயே நேசர்கள் விசுவாசம் கொள்கின்றனர். மனிதரும் அன்பினாலேயே பிறக்கின்றனர். அன்பினாலேயே வளருகின்றனர். எங்ஙனமெனின், மானிட புருஷர்களாகிய தம்பதிகள் ஒருவர் மீதொருவர் அன்பு பாராட்டி இணங்குவதால் மனிதன் குழந்தையாய்ப் பிறக்கிறான். அப்போது அவனுடைய அன்பை ஒரு இளங்கொடிக்கு உவமானிப்போமாயின் அக்கொடி படருவதற்காக கடவுள் தாய்தந்தையென்ற இரண்டுகழிகளை நடுகிறார். அவ்விரண்டு கொம்புகளின் ஆதரவால் அக்கொடி வளர்ந்து, படர்ந்து மானிடமக்கள் முதலியகொம்புகளில் தாவி, முடிவில் கடவுளையே நாடுகிறது. ஆகையால் சகல காரணகாரியங்கட்கும் அன்பே மூலகாரணமாயிருக்கிறது. தலையான் போன்றே ஓர் வடிவாக வந்தவரே (கண்ணப்பநாயனார்) உடும்பூர் வேட அரசனாகிய நாகனின் குமாரர் திண்ணனார் எனும் பிள்ளைத் திருநாமம் பூண்டவர். அவர் ஓர் நாள் தமது தண்பர்களுடன் வேட்டை நிமித்தம் வனத்திற்கு வந்தபோது, சிகாளத்தி மலையில் எழுந்தருளியிருக்கும் சிகாளத்தியப்பரைத் தனித்துக் கண்டு மனம் பொறுதவராகி, "சிவபெருமானே! உமக்கு இக்கொடிய வனத்தில் யாரும் துணையின்றிப் பசி போல் வருந்துகின்றீர். இதோ உமக்கு உணவு கொண்டுவருகிறேன்" என்று விரைந்து சென்று தனது சாப்பாட்டில் ருசி உள்ளதாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்து சிவபெருமானுக்கு அபிடேகஞ் செய்து, காட்டுப்பத்திரங்களே பூஷ்பமாகத் தரித்து, கொண்டுவந்த சாப்பாட்டை முழு அன்பினோடும் உண்பித்து வந்தார். இங்ஙனமாக நாள்தோறும் தவறாது செய்து வருவார். அத்தருணம் வழக்கமாக வந்து பூசித்துச் செல்லும் சிவகோசரியார் இவ்வடாச் செயல்களை எவர் புரிந்தவர் என்று மனம் வருந்தி, சிந்திக்கிடந்த போசன பதார்த்தங்களை அப்புறப் படுத்தி, வழக்கம்போல் பூசித்துச் சென்றார். ஓர்நாள் திண்ணனாரின் அன்பைத் தெரிவிக்கும் பொருட்டு சிவகோசரியாரின் கனவில் சிவபெருமான் தோன்றி நானே மறைந்து நின்று அறிவா யென்றனர். அங்ஙனமே சிவ கோசரியாரும் செய்யலாயினர். அன்று திண்ணனார் பெருமானுக்கு இரைதேடிக்கொண்டு விரைந்து வந்து சிகாளத்தியப்பரை தரிசித்த போது, அப்பெருமானின் திருநேத்திரத்திலிருந்து இரத்தம் பீறிட்டோடுவதைக் கண்டு (ஆடுகின்ற கயிறு அற்ற பொழுது வீழ்ந்து விடுகின்ற நாடகப்பாவைபோன்று) பதை பதைத்து, நெடு நேரம் உள்ளுயிர்த்தலின்றி இறந்தவர் போலக் கிடந்து ஒருவாறு தெளிந்தெழுந்து:

(திருக்காளத்தி புராணம்)

1. "மலையிடை எனக்கு வாய்த்த மாகத
[மணியே செம்பொன்
இல கொளிக்குன்றே பெற்றாயிம
[பிரானின் கண்புண்ணீர்
கலுழ் தாற் தென்னே கொல்லோ?
[காரணந் திருவாய் சாற்றும்
அலர்கிலை என்கொலென்னுன ஆவி
சோர்ந்தருகு சென்றுன."

2. "கையிறற் துடைத்தான் பச்சை
[காலுதற் தவிராதாக
வையினத் தழுவிக் கொண்டான்
[அலறிஞன் நெடுமை போதெல்லாம்
பையென விடுத்துப் பின்பு பச்சிலை
[மருந்து தந்து
பெய்யினுய்த் தீருமென்று பெயர்ந்தனன்
[பருந்து கொய்ய"

கண்ணினது புண்ணுக்கு மருந்து பிழிந்தாற் கண்ணுயை சுகப்படுமென்ற அடவிமுழுதுந் திரிந்து, கண்ட இலைகளை யெல்லாம் பிடுங்கி ஓடி வந்து பிழிந்தும் குருதி நிற்காமையைக் கண்டு, ஆவி சோர்ந்து விழுந்து புரண்டெழுந்து தன் முகமெல்லாம் உதிர்ஞ் சோரவும், மார்பு வீங்கவும் கைகளால் அறைந்து கொண்டு தன்தலை பிளந்து போகும் விதமாய் கற்களில் மோதிக் கொண்டும், "எமது பெருமானுக்கு இத்தீங்கு விளைவித்தது என்கண்களாகிய வேடுவர் களோ? அல்லது இம்மலையில் சஞ்சரிக்கும் கொடிய மிருகங்களோ? தெரியவில்லையே. அப்பகையைக் காண்பேனேயாயின கொல்லாது விடுவேனே?" என்று நெடுந்தூரம் ஓடித்தேடியும்பகையைக் காணாது மீண்டுவந்து மனம் வருந்தி, "இனி இக்கண்ணையைக்கு யானென் செய்வேன்" என்று

நெடுநேரம் ஆலோசித்து நிற்க, "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி தன் நினைவிற்கு வர, உடனே தன் கண்ணை தன் கையிலிருந்த அம்பினால் தோண்டி இறைவர் கண்ணிலே அப்பினார். உடனே இரத்தம் நின்றுவிட்டதைக் கண்டு அடங்காத ஆனந்தமென்னும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி தான் செய்த உபாயச் செய்கையை மெச்சி வியந்தார்.

"ஒடிஞன் திசைகளெல்லாம் உடம்பெலாம
[குதுங்க நக்கான்
பாடிஞன் வாயில் வந்த படியெலாம்
[கைகள் கொட்டி
யாடிஞன் றுள்ளித் துள்ளியாரவாரித்தானின்று
காடிஞன் செயத செய்கை நன்று
நன்றென வியந்தான்."

அப்படி குதூகலம் அடைந்து கொண்டிருக்கும்வேளையில் இடக் கண்ணினின்றும் இரத்தம் வடியக் கண்டு, அக்கினி நரகத்தில் விழுந்து நெடுங்காலம் துன்புற்று அதினின்று நீங்கிச் சுவர்க்க இன்பத்தை அடையு மொருவன், மீண்டும் அந்நரகத்தில் வீழ்ந்தாற்போல, திண்ணனார் மகிழ்ச்சி மாறி, கங்கு கரையிலாத் துயர் கடலில் அழுந்தி ஏங்கி, ஒருவாறு தெளிந்து மருந்தைக் கண்டு கொண்டேன்! மருந்தைக் கண்டு கொண்டேன்!! இதற்காக அஞ்சமாட்டேன் எனத் துணிந்து, தன் கண்ணைத் தோண்டியபின் இறைவர் இடது கண் இருக்குமிடத்தைத் தெரியும் பொருட்டு தன் ஒரு செருப்புத் தரித்தகாலை பெருமான் கண்ணினருகே ஊன்றிக் கொண்டு அம்பைத் தன் கண்ணிலே வைத்தார். கிருபைக் கடலாகிய பெருமான் அதைச் சகித்தற்கியலாதவராகி வெகு தூரிதமாக:

(திருக்காளத்திப் புராணம்)

"மறை மொழி பிறந்ததம் வாய் மலர்
[திறந்தருட் போழி
யிறைவர் கண்ணப்ப நிற்கவென மூக்கால்
[மொழிந்து கொண்டே
கறையணற் கங்கணத்தகையினுற் பிடித்தார்
[செங்கை
யுறு கறைப் பொலம் பூமாரியும்பர் மண் புதையப்
[பெய்தார்"

(திருக்கண்ணப்ப தேவர் திருமறந்திம்)

"நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப வென
அன்புடைத் தோன்ற நில்லு கண்ணப்பவென்
றின்னுரையுத லொடுமெழிற் சிவலிங்கத்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவள் தன் கையம் பொடுமகப்
[படப் பிடித்தருளினன்"

எனக் கூறித்தாமே காட்சியளித்து, தமது பாதாரவிந்தம் தந்தருளினர். அதுகண்ட சிவகோசரியார் வியந்து பாராட்டினர். இத்தகைய பேரன்பின் வடிவமாயவதரித்த மகானுபவர்கட்கே கடவுள் திருவடி எழுகிற் கிடைக்குமே அல்லாது, விடயாதிகளில் இச்சைப் பட்டுழல்பவர்கட்கு யாது பிரயோசன முண்டாகும்.

(சிவஞான சித்தியார்)

"அரனடிக்கன்பர் செய்யும் பாவமு மறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதக
[நன்மையாய்த்தே."

—சி. சிவானந்தம்,
பென்சோங.

சரஸ்வதி அல்லது லக்ஷ்மி உண்டேல் : : உயர்வை அடையலாம் : :

(இ. மே.)

"மாவிட்டபுரம்" என்னும் யாழ்ப்பாணத்தில் ஓர் காட்டுப்புறக் கிராமத்தின் பெயர். அதிகமாகக் கமக்காரரால் நிறையப் பெற்ற ஊர். அக்கிராமத்தில் "ஜகராஜமாணிக்கம் மணியகார்" வசிக்கிறார். அவர் மகன், "கனகபாலசிங்கம்" ஓர் ஏழைப் பேர்வழி. வயசு இருபத்தைந்துக்கு மேலாய் விட்டது. ஒரு முயற்சியும் கிடையாது. தற்கால நாகரீகத்திற்கேற்றாற்போல, தனது பெயரில் முதலியும் கடையையும் தள்ளிவிட்டு "பாலு" என்று தனக்கு நாமகரணம் தரித்துக்கொண்டார் கனகபாலசிங்கம். பஞ்சமா பாதகங்களில் ஏச செயலையேனும் செய்வதற்கு ஒருபோதும் தயங்க மாட்டார். பாலு, "போக்கிரி" அல்ல "போக்கிரிகளிற் கடைந்தெடுத்த போக்கிரி." "இவன் மணியகாரருடைய குலத்தைக் கெடுக்க வந்த ஓர் நாய்" என்று அவ்வூரிலுள்ள பெரியோர் சொல்லுவார்கள். மேலும், பாலுவின் பாடசாலை நாட்களை ஆராய்ந்து பார்த்தால், எந்த வகுப்பில் வாசித்தாலும், அந்த வகுப்பு கடைசி வாங்கில் ஓர் மூலையில் உட்கார்ந்து கொள்வான். பாடங்கள் அவன் மூளையிற்புகுவதென்றால், எலி

வால்புகுந்த மாதிரியாகத்தான் இருக்கும். பரீட்சைகளிலெல்லாம் தேறுவதென்றால் கதிரைக்கொம்புதான். இருந்தும், "மணியகாரருடைய மகனுச்சே" என்று பாடசாலையில் பாலுவை ஒவ்வொரு வருடமும் வகுப்பை மாற்றி ஏற்றிக் கொண்டே போவார்கள். இப்படியாகவே, வருடா வருடம் தவறாது "ப்ரொமோஷன்" (Promotion) எடுத்து வந்து "ஜூனியர்" வகுப்பை அடைந்துவிட்டான். ஜூனியர் வகுப்பிலும், பாலுவுக்கு, பாடங்களெல்லாம் சுத்த சூனியமாயிருந்ததையும் பொருட்படுத்தாது மணியகாரனுடைய முகத்திற்காக, 'கேம்ப்ரிட்ஜ்' பரீட்சைக்கும் உட்கார அனுமதித்தார்கள். இங்கிலாந்தில், பாலுவுக்கு, "ஜூனியர்" பரீட்சையிற் "பாஸ்" போடுவதற்கு, மணியகாரனைத் தெரிந்தவர்கள் அங்கொருவருமில்லை. அதன் பயனாக பாலு பரீட்சையிற் தேறவில்லை. அடுத்த வருடம் கல்லூரியிற் பாலுவை "ஸீனியர்" பரீட்சைக்கு உட்கார அனுமதித்தார்கள். பாலுவுக்கு ஜூனியர் பரீட்சையில் எப்பட்டம் கிடைத்ததோ, அப்பட்டமே இப்பரீட்சையிலும் கிடைத்தது. "ஏ கழுதையே! உனக்கென்னத்திற்கெடா படிப்பு; நீ தெருத்தெருவாய்த் திரிந்து எக்கேடாயினும் கெட்டுப்போ" என்று மகன் மேற் சீறி, அவனைப் பாடசாலையிலிருந்து நிறுத்திவிட்டார் ஜெகராஜமாணிக்க மணியகாரன். "பிள்ளை, என்ன, ஒவ்வொரு வருடமும் தவறாது எல்லா வகுப்பும் பாஸ் பண்ணிக் கொண்டுதானே வந்தான். ஒரு வகுப்பிலாவது அவன் இரண்டு வருடங்களுக்குத் தங்கவில்லை. ஏதோ அவனுடைய கஷ்ட காலமாக்கும், இப்போ இரண்டு வருடமாகப் பெயில் பண்ணிப் போட்டான். அன்றைக்கு "சாரங்கபாணி சாஸ்திரியார்" வந்தார். என்ன, சாஸ்திரியாரை மெத்த நாளாக இந்தப் பக்கம் கண்டதில்லையே என்றேன். அதற்கவர், தான் எங்கோ வெளியூர் போயிருந்ததாகக் கூறினார். பின், நான் தம்பியின் குறிப்பை எடுத்து வந்து சாஸ்திரியாரிடம் ஒருக்காற் காலநேரமெப்படி யிருக்கிறதென்று பார்க்கும்படி கொடுத்தேன். அவர், தம்பிக்கு இப்போ கிரகங்களொன்றும் போதாமலிருக்குதாம்; சனியீஸ்வரனுக்கு எள்ளெண்ணை எரிக்கும்படி சொன்னார்" என்று புருஷனுக்கு சமாதானம் கூறினாள் பாலுவின் தாயாகிய முத்துலெக்ஷ்மி அம்மாள். இது கனகபாலசிங்கத்திற்கு பரம சந்தோஷம். தாயாரோ, ஐயோ குலத்தைப் பெருக்க வந்த ஒரேயொரு பிள்ளையாச்சே"—என்று காலத்திற்குக் காலம் கனகபாலசிங்கத்திற்கு பால், பழம், அறுசுவை பதார்த்தங்களுடன் அழுதளிப்பாள். போதாக் குறைக்கு அவன் கைகூசாது செலவு செய்ய போதிய பணமும், மணியகாரனுக்குத் தெரியாமற் கொடுத்து வந்தாள். இதன் பயனாக கனகபாலசிங்கம் யாழ்ப்பாணத்திலே ஓர் பெரிய கெச பேர்க்கிரியாய் விட்டான்.

இஃதிங்ஙனமிருப்ப, மணியகாரனுக்கும், மனைவியாருக்கும் தங்கள் பிள்ளைக்கு எங்காவது ஓர் நல்ல இடத்தில் கலியாணம் செய்து வைக்கவேண்டுமென்றும், தாங்கள் சீக்கிரத்தில் பேரப் பிள்ளைகளைக் கண்டுகளிக்க வேண்டுமென்றும் ஆசை தலைகாட்டத் தொடங்கி விட்டது. பிள்ளையோ துஷ்டன்; துஷ்டர்கள் சகவாசம் உடையவன்; கல்வியறிவில்லை; உத்தியோகம் கிடையாது. இப்படியாக விநப்பவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? எங்குபோய்ப் பெண் தேடுவது? பல வழிகளாலும் ஒன்றுகூடி ஆலோசிக்கலானார்கள் மணியகாரனும், முத்துலெக்ஷ்மி அம்மாளும். கடைசியாக ஜெகராஜமாணிக்க மணியகாரர் ஓர் முடிவிற்கு வந்தார். எது வகையிலும் ஓர் பெரிய இடத்தில் நல்லதொகை சீதனத்துடன் தமது மகனுக்கு பெண்எடுக்க வேண்டுமென்று தீர்மானம்செய்தார்.

அடுத்தவாரம், ஜெகராஜமாணிக்க மணியம், தனது மகன் பாலுவை அழைத்துக் கொண்டு கொழும்புப் பட்டணம் சென்றார். அங்கே ஓர் வீட்டை வாடகைக்கு அமர்த்தி, "மகனே! நீ இங்கே கொஞ்ச காலத்திற்குச் சீவித்திரு; இதெல்லாம் உனது நன்மைக்காகவே செய்கிறேன். உனக்கு நல்ல இடத்தில், அழகுடையதாய், நல்ல சீதனத்துடன் ஓர் பெண்ணைத் தேடி மண முடித்து வைக்கப் போகிறேன். உனக்கு மாசத்திற்கு மாசம் செலவிற்கு ரூபா 100 வீதம் அனுப்பிக் கொண்டு வருகிறேன். துஷ்டர் சகவாசங்களொன்றும் உனக்கு இனிமேல் வேண்டாம். நீ ஊருக்கு வரவேண்டுமானால், நான் உனக்கு கடிதம் எழுதுவேன். அப்போ நீ வந்து விடு" என்று கூறி, வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்து விட்டு, யாழ்ப்பாணம் திருப்பி வந்து, தனது மகன் கொழும்பில் ஓர் கம்பெனியில் கணக்குப் பரிசோதகராக ரூபா 300 மாச வேதனத்தில் உத்தியோகமாய் விட்டாரென்று கதைகட்டிவிட்டார்.

உயர் குலத்தோராலும், பணம் படைத்த செல்வந்தர்களாலும், கல்வியில் மேம்பட்ட மேதாவிகளாலும், இடையறா உழைப்பைக்கொண்ட வியாபாரிகளாலும், கல்விச் சிறப்பும், தர்ம குணமும், பூரண சந்திரனை பொத்த அழகும் வாய்ந்த மாதரசிரோன்மணிகளாலும், அரச மாளிகைகளை யொத்த அலங்காரமான மனைகளாலும், மண்டபங்களாலும், தாமரைத் தடாகங்களாலும், சிவாலயம் கிறிஸ்துவாலயங்களாலும், விசாலமான வீதிகளாலும், வியாபாரஸ்தலங்களாலும் நிறையப் பெற்று விளங்குமாம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரென்னும் பொன் நகரம். அந்நகரத்திலே "அமபிகை பாகர்" ஓர் பெரிய பூபதி. அத்துடன் அவர் ஓர் சுருட்டுத் தொழிற்சாலையும் வைத்து

கடத்துகிறார். அவருக்கு ஓர் பெண் குழந்தையும், ஓர் ஆண் குழந்தையுமுண்டு. பெண் குழந்தை "சரஸ்வதி" வயசு இருபத்தொன்று நிறையப் பெற்று விட்டாள். ஸரஸ்வதி தேவிதான் வந்து அவதாரம் எடுத்திருக்கிறாளோ வென்று பார்ப்போர் ஐயுறும்படியான அழகும் புத்தி சாதுர்ய முமுடையவள். ஆங்கிலத்தில் "ஸீனியர்" பாஸ் பண்ணியிருக்கிறாள். தமிழிலோ பால பண்டிதர் வகுப்பிற் சித்தியடைந்திருக்கிறாள். சங்கீதத்திலும் சிறிது பாண்டித்யமுண்டு. ஆண் குழந்தை "பராபரன்" ஆங்கிலம் "ஜூனியர்" வகுப்பில் வாசிக்கிறான்.

அப்பிகை பாகரும், ஜெகராஜமாணிக்க மணியகாரரும் பழைய காலத்து அத்தியந்த பிராண சிநேகிதர்கள். நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர், தீர்த்தம் முதலிய திருவிழாக்களுக்கு, ஜெகராஜ மாணிக்க மணியகாரன் குடும்ப சமேதராய் வந்தால் அம்பிகை பாகருடைய வீட்டிலேயே தங்குவதுவழக்கம். அந்தவருடமும் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர் திருவிழாவுக்கு ஜெகராஜ மாணிக்க மணியகாரரும் மனைவியாரும் வந்தார்கள். அன்று காலே ஏழு மணிக்கெல்லாம், பெருமான் தேருக்கு எழுந்தருளி சகல ஜனங்களுக்கும் காட்சி கொடுத்து வீதி வலம் வந்தார். பக்த சிரோன்மணிகளெல்லாம், தங்களுக்கு கடவுள் மேலுள்ள அன்பும் விசுவாசமும் பொங்கி வழிய, ஆனந்தக் கண்ணீர் பொழிந்து பெருமானுக்கு காணிக்கை முதலியன செலுத்தி, ஸ்வவாற்பணமாக ஏழைகளுக்கு சகல தான தருமங்களெல்லாம் வழங்கிவிட்டுத் தம் இல்லங்கட்கு ஏகினர்.

ஜெகராஜமாணிக்க மணியமும், மனைவியாரும், அம்பிகை பாகரையும், பாரியாரையும் கோவிலிலேயே சந்தித்துக் கொண்டார்கள். அவர்கள் ஸ்வாமி தரிசனம் ஆனதும் எல்லோருமாக அம்பிகை பாகர் வீட்டிற்குச் சென்றனர். அறுசுவை பதார்த்தங்களுடன் போஜனம் ஆனதும், எல்லோரும் நடு அறையில் வந்து உட்கார்ந்து கொண்டு தாம்பூலம் தரிக்கலாயினர். அப்பொழுது அம்பிகைபாகர் தனது மகனோக்கி, "கண்ணே! சரசு! விருந்தினரை உபசரிக்கவேண்டியது உனது கடமையல்லவா; எங்கே! உனது வீணையை எடுத்துவந்து மாமா மகிழும்படி ஒரு கீதம்பாடிவிடு" என்றார். சொன்னதும் சொல்லுமுன்பே, தந்தை சொல் எப்பொழுதும் தட்டியறியாத அன்று மலர்ந்த தாமரைப் புஷ்பத்தைப் போன்ற மெல்லிடையாள் சரஸ்வதி எழுந்து சென்றுவிட்டாள் தனது வீணையை எடுத்து வருவதற்காக. அப்பொழுது, "எனக்கு 'மாமா' பட்டங்கட்டி விட்டீர்கள். நான் சரஸ்வதிக்கு மாமா ஆவேனா? என்றார் ஜெகராஜ மாணிக்கமணியம். "ஏன்! ஆகமுடியாதோ"— என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தாள் அம்பிகைபாகர் மனைவி. "அப்படியானால் என்னைவிட பக்கியசாலிகள் உலகத்திலே வெறுயாராவது இருப்பார்களோ வென்றால் ஒருக்காலத்திலும் முடியாது" என்று அட்டகாசம் செய்து சிரித்துக் கொண்டே கூறினார் மணியகாரர். இதற்கிடையில் சரஸ்வதி வீணையை எடுத்துவந்து விட்டாள். "ஸ்ரீராம பாதமா நீ ஹ்ருப ஜாலனே" என்ற தியாகராஜ ஐயர் கீர்த்தனத்தை எல்லோரும் பரவசப்படும்படியாக வீணையில் வாசித்துப் பாடினாள். அவளது பூரணசந்திரனை யொத்த முகமும், விற்போன்று வளைந்த புருவங்களும், மூன்றாம் பிறைச் சந்திரனை யொத்த நெற்றியும், செந்தாமரைப் புஷ்பத்தை யொத்த பாதங்களும், பொன் நிறத்தை யொத்த மேனியும், அவள் அழகிற்கு ஏற்றாப் போல நீலவர்ணப் பட்டுப் புடவையை மிகவும் அலங்காரமாகக் கட்டிக்கொண்டு, ஓய்யாரமாக உட்கார்ந்து வாசித்த வீணை வாசிப்பும் ஒரே மயக்கத்தை உண்டாக்கி விட்டது மணியகாரன் பாரியாள் முத்து லெக்ஷ்மி அம்மாளுக்கு. "இவளே என் பாலுவுக்கு ஏற்ற மனைவி. இவளே என் செல்வக் கொழுந்துவுக்கு கலியாணம் செய்து கண் குளிரப் பார்க்கும் நாள் என்னாளோ" என்று ஏங்கி அங்கலாய்த்தாள்.

பின் அம்பிகைபாகர் மனைவி, மணியகாரர், மனைவி, ஆகியநால்வரும், வெளி விறாந்தையில் வந்து உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களைப் பற்றிப் பேசிப் பின் கலியாணப் பேச்சும் வந்தது. மணியகாரர் அம்பிகைபாகருக்கு நாள்பட்ட பழயநண்பர். மிகவும் அன்யோன்யமானவர். பொருளும் ஏராளமாக உண்டு. கனகபாலசிங்கமும் கொழும்பில் நல்ல உத்தியோகத்திலிருக்கிறான். அம்பிகை பாகருக்கு ஒரு குறையும் தென்படவில்லை. மிகவும் விசேஷமான சம்பந்தமென்றே நினைத்தார். கூடிய சீக்கிரத்தில் கலியாணத்தை நடத்திக் கண்டுகளிக்க வேண்டுமென்று இருவரும் ஓர் தீர்மானத்திற்கு வந்தார்கள். பெண்களும் என்றுமில்லா முகமலர்ச்சியுடனும் சந்தோஷத்துடனும் ஆமோதித்தார்கள். முகூர்த்தம் வைப்பதற்கு தனது மகனை எழுதிக்கேட்டு, அவனுடைய லீவு காரியங்கள் எப்படியிருக்குமோ அதற்கேற்றாப்போல கலியாணத்திற்கு நாள் ஏற்படுத்தலாமென்று கூறினார் மணிபகாரன்.

அடுத்த நாள் தீர்த்தமும், அதற்கடுத்த நாள் பூங்காவனத் திருவிழாவும் பார்த்துக் கொண்டு போகலாமென்று சம்மந்தியார் பிரயாணத்தை மறித்துக்கொண்டார் அம்பிகை பாகர். அவர்களும் நின்று பூங்காவனத் திருவிழா முடிந்த மறுநாள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள்.

அடுத்தநாள் ஜெகராஜமாணிக்க மணியம் கொழும்புக்குப் போக வேண்டுமென்று சகல ஆயத்தங்களும் செய்து கொண்டிருக்கும்போ

ழுது, அவருடைய விலாசத்திற்கு ஓர் கடிதம் வந்தது. பிரித்துப் பார்த்தார். அது, அவர் மகன் கனகபாலசிங்கம் எழுதிய கடிதம். தனக்கு ரூபா 5000 வரை கடன் வந்துவிட்டதென்றும், தான் அதிக சங்கடத்திலிருப்பதாகவும், பணத்துடன் வந்து தன்னை மீட்டுவிடும்படி மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்ளுவதாகவும் எழுதப்பட்டிருந்தது. கோபம் வந்து விட்டது மணியகாரருக்கு. கண்களிரண்டும் தீ போற் சிவக்க, "ஏ! காயே! என்னைக் குட்டிச் சுவராக்கவாடா வந்தாய்," என்று மூர்க்கமாக ஓரே கூச்சல் போட்டார். "என்ன! என்ன!!" என்றுகொண்டு ஓடி வந்தாள் முத்துலெக்ஷ்மி அம்மாள். ஆனால் அவர் ஒன்றும் பேசவில்லை. பக்கத்தில் கிடந்த கடிதத்தை எடுத்து வாசித்துப் பார்த்தாள். அவளும் மனம் பதை பதைத்தாள். "ஐயோ! நீங்கள் இந்த நேரம் கூச்சல் போட்டு மற்றவர்களுக்கு சமுசியத்தை உண்டாக்கிவிடவேண்டாம். இந்த நேரம் கோபம் கூடாது. இனி எங்கள் பிள்ளை என்ன கஷ்டப்படுகிறதோ தெரியாது. நீங்கள் இன்று சாயந்தர மெயிலில் பணத்துடன் சுணங்காது போங்கள். பிள்ளையை மீட்டுக் கையுடன் கொணர்ந்து விடுங்கள். ஆகவேண்டியதை இங்கே யோசித்துச் செய்யலாம்" என்று பலவகையாலும் சமாதானம் கூறினாள்.

(தொடரும்.)

: : வெற்றி யாருடையது : :

நான்: இன்னும் உனக்கு உடம்பு சரிப்படவில்லையே, இதற்குள் அந்தத் துக்கரமான சரித்திரத்தைத் தொடங்கினையாகில், பின்னும் ஏதும் வந்து விடுமோ என்றே பயப்படுகிறேன்.

கமலா: இல்லை இல்லை! அப்படி ஒன்றும் நேராது. அதுபற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம் (என்று சொல்லி விட்டுத் தன் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினாள்.) அக்கா எவ்விடத்தில் விட்டேன்? மறந்துவிட்டேனே.

நான்: உன் தம்பி நேயால் கஷ்டப்பட்டு இறந்துவிட்டதாகச் சொல்லி அழுது கொண்டு தானே நிறுத்தினாய். அதற்குள் உன் குழந்தை வந்து கூட்டிப்போய் விட்டது.

கமலா: ஓம் ஓம்! அவன்தான் இறந்து மண்ணுலக இன்ப துன்பம் எல்லாம் வெறுத்து மறைந்துவிட்டான். நாங்களல்லவோ அனுபவிக்கிறோம். இறந்துவிட்டவனைப் பற்றி இப்போ எண்ணமில்லை. இருப்பவனைப்பற்றி யல்லவோ இப்போ துக்கப்படுகிறோம். எனது மற்றத் தம்பியையும் தகப்பனாரையும் பின்னும் என்ன தந்திரத்தோடும் நான் கவனமாகப் பார்த்துவந்தேன். எனது புருஷனும் மிகவும் ஆறுதலாகக் கடிதம் அனுப்பி வருவார். ஆறுமாசமானதும் எல்லாரையும் வந்து தன்னுடன் இருக்கும்படி எழுதிவிட்டார். என்னைத் தனியாய் வரும்படி எழுதினால் நான் வரமாட்டேனென்றோ, அல்லது அவர்களும் ஆதரிப்பாரற்று இருக்கிறார்களென்று இரங்கியோ, என்னவோ அப்படி எழுதிவிட்டார். என் தகப்பனாருக்கு மிகவும் துக்கமாய்விட்டது. இருந்தும் என்ன செய்வது; வேறு வகையின்றி; காணி பூமி எல்லாவற்றையும் ஆர்வசமோ குத்தகைக்குக் கொடுத்து விட்டு, எல்லாம் ஆயத்தப்படுத்தி பிரயாணத்துக்குச் சித்தமானோம். வீட்டையும் அடுத்த வீட்டுக் கிழவியையே பார்க்க ஒழுங்கு செய்தோம்.

நான்: இதற்கிடையில் குழப்புகிறேனென்று எண்ணாதே; உனது தகப்பனுக்காவது தாயாருக்காவது உடன் பிறந்தவர்களில்லையா?

கமலா: தகப்பனாருக்கு, உடன் பிறந்தார் யாருமில்லை; தாயாருக்கு இரு சகோதரிமாரும் ஒரு அண்ணனும் உண்டு.

நான்: அவர்களில் யாராவது உனது தகப்பனையும் தம்பிமாரையும் பாதுகாக்கமாட்டார்களா?

கமலா: அவர்கள் யாவரும், "பிள்ளைகளையும் கொண்டு வந்து எங்களுடன் இருந்தாலென்ன? பார்க்கமாட்டோமா? இல்லாமல் எங்கள் குடும்பத்தை விட்டு அங்கேபோய் இருப்பதென்றால் எப்படி முடியும்" என்று சொல்லி விட்டார்கள். என் தகப்பனாரும் "ஏன் அவர்கள் வீட்டிலிருக்க வேண்டும். எனக்கென்று வீடில்லையா? வாசலில்லையா?" என்று பேசாமல் இருந்துவிட்டார்.

என்னுடன் வருவதற்கும் அவ்வளவு விருப்பமில்லாவிடினும் மகனின் நன்மையைக் கோரி ஏதும் உத்தியோகம் எடுக்கலாம் என்றே வெளிக்கிடப் பட்டார். என் பத்தாவுடைய சிநேகிதர் சிலர் வந்தார்கள். அவர்களுடன் நாங்களும் வந்து சேர்ந்தோம். எங்கள் கப்பல் பிரயாணத்தைப் பற்றிச் சொல்லவென்றால் ஒருநாள் செல்லும். ஆனால் சுருக்கச் சொல்லி முடிக்கிறேன். எங்களுக்கு அந்தச் சிநேகிதர்களுடன் அறை எடுத்துவரக் காசு அனுப்பி இருந்தாராதலால் நாங்கள் நல்ல சுகமாக கப்பலில் யாதொரு விக்கினமுமின்றி வந்து சேர்ந்தோம். துறைமுகத்தில் என் பத்தாவந்து நின்றார். பின் ஒரு சாப்பாட்டுக் கடைக்குப்போய் சாப்பிட்டோம். இரயிலேறினோம். வீடு வந்து சேர்ந்தோம்.

அப்போ செந்தூல் வீடுகளில் ஒன்றில் குடியிருந்தோம். அதிலும் இரண்டு வருஷம் வரையில் இருந்தோம். தம்பியையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்து படிக்க வைத்து 18 வயசிற்கிடையில் ஒரு வேலையும் எடுத்து என் புருஷன் கொடுத்துவிட்டார். தகப்பனரும் மிகவும் சந்தோஷப் பட்டார். ஐயோ பாவம்! அவரின் சந்தோஷம் நீடித்திருக்கவில்லை. அவன் கொஞ்ச நாளாய் வீட்டுக்கே வருவதில்லை. கேட்டால் எனக்கு வேலை யதிகம்; அங்கே போனேன், இங்கே போனேன் என்று சொல்லி விடுவான். இதற்கிடையில் எங்கள் வீடுகளில் ஒன்றில் இருந்து வந்த ஒரு வேறு சாதிப் பெண்ணுடன் அவன் கூடித் திரிவதாகக் கேள்வியுற்றோம். ஐயோ! இதை எப்படி தகப்பனரிடம் சொல்லுவது என்று எனக்கு நா எழவில்லை. அப்போ நான் சொல்லியிருந்தால் கேடு நேரிடாமல் ஒரு வேளை தடுத்திருக்கலாம். ஆனால் பாழும் விதி என்னைச் சொல்ல வொட்டாமல் தடுத்துவிட்டது. என்ன செய்வது! அவன் வேலையாய் ஒரு வருஷத்துக்குள், அவளையே மணந்து கொண்டு எங்கள் கண்ணில் விழிக்காமல் வேறுக்குடித்தனம் பண்ணப்போய் விட்டான். இதைக் கேள்வியுற்ற என் தகப்பனார் அப்படியே இடிந்து உட்கார்ந்து போய்விட்டார். எல்லாவற்றையுமே வெறுத்து விட்டார். அதிகம் விரிப்பானேன்! அவர் சன்னியாசியாய் இருந்தவர் முழுச் சன்னியாசியாய்விட்டார். நான் காசி கதிர்காமம் போவது என் பாவத்தைத் தொலைக்கப் போகிறேன்னார். ஐயோ! அப்பு! எனக்கும் எல்லாம் போய் உங்களையே தஞ்மென்று இருக்கிறேனே! நீங்களும இப்படி யிருந்தால் நான் என்னசெய்வது. நானும் உங்களுடன் வெளிக்கிட்டு வருகிறேன்! என்னை விட்டுவிட்டுச் சென்றுவிடாதீர்கள்! என்பேன். "சீ! ஒருபோதும் அப்படிச் சொல்லாதே! உனக்குத் தங்கமான புருஷன் கிடைத்திருக்கிறார். சொர்ண விக்கிரகம்போல் ஒரு பிள்ளையுமாச்சு. இனி நீ அப்படி யெல்லாம் சொல்லாதே; உன் புருஷனுடன் ஒத்துநட; அவர் சொல் கடவாதே" என்று நாளிலும் பொழுதிலும் சொல்லிவருவார். திடீரென்று ஒருநாள் எனக்கு சொல்லாமலேயே மறைந்துவிட்டார். காலையில் எழும்பின நான், முகம் கைகால் சுத்தி செய்துவிட்டு வந்து பார்த்தேன். படுக்கையில் அவருக்குப் பதிலாக ஒரு கடிதம் கிடைத்தது. அதைப் பார்க்கவே இருதய ஓட்டம் நின்றுவிடும் போல் நெஞ்சில் என்னவோ டக்கென்றது. அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு என் நாதரிடம் ஓடினேன். அவர் அதை வாசித்துவிட்டுப் பேசாமல் இருந்தார். எனக்கு முன்னமே எனது தகப்பனரின் யோசனை கொஞ்சம் தெரியுமானதும், என் பத்தாவுக்கு ஒன்றுமே தெரியாததினால், அவரும் உண்மையில் கலங்கிவிட்டார். "என்ன பேசாமலிருக்கிறீர்களே! என்னதான் நடந்தது! வாசியுங்கள்" என்று ஆத்திரப்பட்டபின், அவரும், "என்னருமை மகளே நான் உனக்குச் சொல்லிக் கொண்டு வெளிக்கிட நீ சம்மதிக்க மாட்டா யென்றே சொல்லாமல் வெளிக்கிடத் துணிந்தேன். பாவியாகிய நான் உன் வீட்டிலிருந்தாலும் உனக்கும் அந்தப் பாவம் சேர்ந்துவிடுமாதலால், நான் புண்ணிய சேஷத்திரங்கள் சென்று என் பாவத்தைத் தொலைத்துவிட்டுப் பிராப்தமிருந்தால் மறுபடி வந்து சந்திக்கிறேன். ஏதோ மலையளவு பாவத்திலும், கடுகளவு புண்ணியம் செய்து விட்டேனானால், மகா புண்ணியாத்மாவான மருமகனை அடையப் பெற்றேன். அவரே எல்லார்க்கும் எல்லாமாய் நின்று உன்னை ஆதரிப்பார். அவரே உன் தஞ்சமென்று நம்பி நடந்து கொள். நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்" என்று வாசித்து முடித்தார். அவர் வாசிக்க வாசிக்க என் கண்ணில் கண்ணீர் அருவிபோல் ஓடிக் கொண்டே இருந்தது. ஒன்றுக்கும் கலங்காத என் நாதர்கூடக் கொஞ்சம் சண் கலங்கி விட்டார் என்றால் என்னைப்பற்றிக் கேட்பானேன். அவரும் எவ்வளவோ புத்தி சொல்லி விட்டுத் தன் வேலைத்தலத்துக்குச் சென்றுவிட்டார். நான் செத்தவர்க்கு அழுவது போலவே கோவென்று குழறி அழுதுவிட்டேன். அடுத்த வீட்டிலிருந்து துக்கம் விசாரிக்க வந்துவிட்டார்கள். இப்படியே ஒரு மாச காலமாய் கண்ணீரும், கம்பலையுமாய் காலங் கழித்து வந்தேன். இதைப் பார்த்து சகிக்காத எனது நாதர் ஒருவேளை வேறு வீட்டுக்குப் போனாலாவது எனது துக்கம் சிறிது தணியுமென்று வேறு வீட்டில் கொண்டு வந்து சேர்த்தார். அங்கு இரண்டு வீடு ஒன்றாய் இருந்தது. இரண்டு வீட்டின் படியும் ஒன்றுதான். இடையில் ஒரு பலகை போட்டுத் தடுத்திருந்தார்கள். அடுத்த வீட்டிலும் யாழ்ப்பாணத்தார்தான் குடியிருந்தது. அவர்கள் இருவரும் நன்றாய படித்தவர்கள். அந்த அம்மாள் ஒவ்வொரு நாளும் பொழுது போக்காக என்னுடன் வந்திருந்து போகும். அந்தம்மாளின் புருஷனும் என் புருஷனுடன் மிகவும் சிநேகம். இருவரும் கூட்டமென்றும், சங்கமென்றும், ஒருமித்தே போய் வருவார்கள். அங்கு வந்த பின்னல்லவா என் புருஷனுமிப்படி வீட்டுக்கு வராமல் திரியிறாரென்று ஒரு கெட்ட அபிப்பிராயம் இருந்தாலும், அந்தம்மாளின் கதையினாலும், நாகரிகத்தினாலும் எல்லாம் மாறிப் போய்விடும். நான் துக்கப்பட்ட நேரத்திலெல்லாம், தன் சுய சரித்திரத்தைச் சொல்வார்கள். அவர்கள் சரித்திரமும் மகா துக்கமானதுதான். ஆனாலும், எனக்கு

என் சங்கதிதான் மிகவும் பாதிக்கும். இப்படியே நாளிலும் பொழுதிலும் அந்தம்மாளின் நற் சகவாசத்தால் எனது துக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறிவரத் தலைப்பட்டது. அவர்களைப் போல் சட்டை வெட்டவும், தைக்கவும் இன்னும் தீவிரமாக முடிபோட்டுக் கொள்ளவும், திருத்தமாகச் சேலை கட்டிக்கொள்ளவும், எல்லாம் அந்தம்மாளிடமே கற்றுக் கொண்டேன். இப்படியே நாளுக்குநாள் நான் நாகரீகமாவதைக்கண்ட எனது நாதர் சந்தோஷித்தவராய், கொஞ்சம் எழுத வாசிக்கவும் கற்றுக் கொள்ளென்று பல தடவையும் சொல்லி வந்தார். அதில் மட்டும் என் மூளை செல்லவில்லை. ஏனெனில் அந்தம்மாளும் எவ்வளவு படித்தவளா யிருந்தும், பகலெல்லாம் தையல்வேலையில் கழிப்பார்களேயொழிய, உங்களைப்போல் வாசிப்பதிலேயே செலவிடமாட்டார்கள்.

நான்: அப்படியா! அதனால் என்னை நாகரீகமற்றவள் என்று பரிகாசம் பண்ணுகிறாயா? எனக்கு என்னவோ ஒருநேரம் வாசிக்காவிடில் பயித்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொன்றில் தான் பயித்தியம். அவ்வளவிலாவது நீ சந்தோஷமாயிருப்பதற்கு அவர்கள் உதவி புரிந்தவர்களானதினால் அவர்களுக்கு வந்தனம் புரிகிறேன்.

கமலா: "என்ன தான் நான் சந்தோஷமாயிருப்பதாக வெளியில் காணப்பட்டாலும், எனது தகப்பனாரின் கதியை நினைந்து நான் உருகாத நேரமில்லை. தாயில்லாமலிருக்கவும், நான் அருமையாய் வளர்த்த தம்பி இப்படிப் போகவும், அதனால் எனதுதகப்பனார் எல்லாம் துறந்து, பரதேசியாய்த் திரிய நான் மட்டும் சுகமாக உண்டு உடுத்துக் காலத்தை விடுகிறேன், என்று சொல்லி மறுபடியும் அழத் தொடங்கிவிட்டாள்.

நான்: என்ன கமலா! கடவுளடி தொழவும் கிடைத்திருக்கா! அவர் எல்லாச் சேஷத்திரத்தையும், தொழுது கொண்டு திரும்பி வருவார் காணே! பின் அவரைப் பற்றி ஒன்றும் கேள்விப்பட்டதில்லையோ?

கமலா: எனது நாதர் எனது தாய் மாமனுக்கு எழுதிக் கேட்டவராம். "எனது தகப்பனார் போய் எல்லாக் காணியையும் என்பேருக்கே எழுதிவைத்துவிட்டுச் சன்னியாசிபோல், சடை வளர்த்துக்கொண்டு, கதிர்காமம் போய் வருவதாகச் சொல்லிப் போய்விட்டாராம்." இரண்டு வருஷமாக ஒரு தகவலும் தெரியவில்லை.

நான்: இனி நீ இதுகளைப்பற்றிச் சிந்திக்காதே. கடவுள்மேல் பழியைப்போட்டுக்கொள். அவர் எல்லாம் சுகத்துக்குக் கொண்டு வருவார். நீ உன் புருஷனோடு சேர்ந்து அவர் செய்யும் தொண்டுக்கு உதவி செய். ஏழைகளுக்கு உதவி செய்தாமானால் கடவுள் எங்களுக்கு உதவி புரிவார். வீணாக மனதை அலட்டிக் கெடுக்காதே. "சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" என்பதை மறந்துவிடாதே.

கமலா: சரிதான்! அக்கா அப்படியே அவரையே வேண்டி நிற்கின்றேன். இனி நடப்பது நடக்கட்டும். நேரமாகிறது போய் வருகிறேன். (என்று சொல்லி எழுந்துபோய்விட்டாள்.)

பிறகும் ஒருமாசம் இப்படியே கழிந்து விட்டது. ஒருநாள் ஒரு பத்திரிகையை எடுத்து வாசித்தேன். அதில் எனது பர்த்தாவின் பெயர் கொட்டை கொட்டையான எழுத்துக்களில் "உபதலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்" என்று எழுதி யிருப்பதைப் பார்த்தேன். உண்மை தானு என்று மறுமுறையும் வாசித்துப்பார்த்தேன. உண்மையே! சந்தேகமில்லை. நான் அடைந்த ஆனந்தத்தை என்னவென்று சொல்லுவேன். மூன்று மாசகாலமாக மூதேவி பிடித்திருந்த என் முகம் என்னையறியாமலே புன்னகையைக் கக்குகின்றது. என்ன செய்வதென்பதே தெரியவில்லை. அதை எடுத்தேன்; இதை வைத்தேன்; அங்கே போனேன்; இப்படியே பயித்தியக்காரிபோல் அலைந்து திரிந்தேன். திரும்பப் போய் அதை எடுத்து வாசித்தேன். ஆகா! இன்றல்லவோ நான் பாக்கிய சாலி. சத்தியம் நிலைக்கும் என்றும், சத்தியமே ஜெயிக்கு மென்றும், புண்ணியம் பலிக்குமென்றும், பொறுமையே கெலிக்குமென்றும், தானமே தழைக்குமென்றும், கடவுள் உண்மை வடிவமென்றும், இன்னு மென்னென்னவோ வாயில் வந்ததெல்லாம் பிதற்றினேன்.

பின்னிருக்கும் ஒன்றையுமே வாசித்துப் பார்க்க மனம் எவரில்லை. துக்கமோ சாந்தியோ என்று சொல்ல முடியாவண்ணம், எழுந்து போய் சுவாமி படத்துக்கு முன்னால் நின்று அழுதேனே தொழுதேனு சொல்ல முடியவில்லை. மறுபடியும் போய் பத்திரிகையை எடுத்து ஆறுதலாக வாசித்தேன். மூன்று மாசகாலமாக இரவும் பகலும் அரும்பாடு பட்டு வந்தாரென்றும், கண்டசியாக வெற்றி பெற்றாரென்றும் இன்னும் எவ்வளவோ எழுதியிருந்தது. மகா சந்தோஷத்தோடு பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்து, பிள்ளைகள் நித்திரையுமாய்விட்டார்கள். வழமைபோல் 9 மணிக்கு வீடு வந்து சேர்ந்தார் என் நாதர். கதவைத் திறந்து விட்ட நான், "பாவி, என்னை மன்னிப்பீர்களா" என்று அவர் பாதத்தடியில் வீழ்ந்து காலைப் பற்றிக் கொண்டேன். "என்ன நடந்தது என்று ஒன்றும் அறியாதவர்போல் என்னைத் தூக்கி நிறுத்தி வினவலானார். இன்னும் என்னைச் சோதிப்பது அழகா? ஏதோ தெரியாத்தன

த்தால் சொன்ன ஒரு சொல்லுக்கு விதித்த தண்டனை போதாதோ? என்று வேண்டினேன். "சரிதான் நீ சொன்னது சரியே! அதனால்லவா ஊன் எடுத்தற்கு ஒரு தொண்டாற்றல னேன். நீ அவ்வளவு பதற்றலாகச் சொன்னதினால்தான் உன்னை இவ்வளவு நாளும் சோதிக்கலானேன். அதுவும் என் மடைத்தனமே. நீயும் அவ்வளவு ரோச முண்டாகச் செல்லியிராவிடின் நானும் இவ்வளவு சுறுக்கில் திருந்தியிருக்கமாட்டேன். நீயே கெட்டிக்காரி; நீயே வெற்றி கொண்டாய்" என்றார். அவருடைய அந்தத் தேவாமிர்தம் போன்ற சொல் என்னை அப்படியே ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு போய்விட்டது. "ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்" என்பதில் எவ்வளவு கருத்தடங்கியிருக்கிறது" என்றார். பெண்கள் நினைத்தாலாகாத காரி மும் உண்டோ" என்றார். "அடுப்பங்கரையிலிருந்து கொண்டே அகில மெல்லாம் ஆளுவார்களே" என்றார். சகோதரிகளிற் பலர் கமலாவைப் போன்றிருப்பதாலல்லவா இன்னும் நம் சமூகம் இப்படியிருக்கிறது" என்றார். இன்னும் ஏதேதோ சொன்னார். என் ஆனந்தத்தில் ஒன்றுமே கலில் விழவில்லை. நான் அடைந்த ஆனந்தத்தை இன்னும் விஸ்தரித்தால், அந்தச் சந்தோஷம் கொஞ்சம் குறைந்துவிடுமோ என்றே அதை விஸ்தரிப்பதை விட்டுப் பின் நடந்த சங்கதியைச் சுருங்கச் சொல்லி முடிக்கிறேன்.

இப்படியே என் நாதர் நாளுக்கு நாள் சமூகாபிமானியாய் விளங்கி வருவது கண்டு, நானும் அதில் பங்கெடுத்துப் பெண்கள் சங்கத்துக்கு உதவி புரிந்துவருகிறேன்னாளிலும்பொழுதிலும்சொல்லி வந்ததினால் போலும் கமலாவும் இப்போ எங்கள் சங்கத்தில் மிகவும் அக்கரை எடுத்து வருகிறாள். இப்போ எழுத வாசிக்கப் பழகித்தானே பத்திரிகைகள் வாசிக்கிறாள். நாங்களிருவரும் இணை பிரியாச் சிநேகிதிகளா யிருப்பதுபோலவே, எங்கள் பத்தாமாரும் இருந்து தொண்டாற்றி வருகிறார்கள்.

கமலாவின் புருஷனுக்கு என் பத்தாவின் நடத்தை யெல்லாம் நன்கு தெரியும். அவரின் உதவியாலேயே இவரும் வெற்றி கொண்டார். ஆனால் இவ்வளவுநாளும் எனக்கோ, தன் மனைவிக்கோ ஒன்றும் அதுபற்றி வெளியிடவில்லை. இப்போ எங்களைக் கண்ட நேரமெல்லாம் "வெற்றி யாருடையது" என்கிறார்.

இப்போ கமலாவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து சுகமாக இருக்கிறது. தகப்பனரும் புண்ணிய க்ஷேத்திரங்களெல்லாம் தரிசித்து வந்து மகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் சந்தோஷமாகக் காலத்தைக் கடத்தி வருகிறார். சூரியனை மேகம் மறைப்பதுபோல் இடையில் சென்று போன குமாரனின் எண்ணமும் எந்த மனதிலிருப்பதுண்டுதான். ஆனால் என்ன செய்வது! உலகில் ஒரு சிறு துக்கமாவது இல்லாத ஜென்மமுண்டோ?

சுபம்.

—கனகம்.

* சரஸ்வதி *

முன் நான் என் சிநேகிதியைக் கண்ட விபரமும் எங்களுக்குள் நடந்த சம்பாஷணையும் எல்லாம் விபரமாக எழுதி, கடைசியில் கோயிலைப்பற்றியும் அதற்கு நான் சென்று வந்த விதமும், அவளுரைத்த புத்தி மதிகளும், எல்லாம் எழுதியிருந்தேன்.

அடுத்த வெள்ளிக்கிழமை அவள் சொன்னது போல் மகாதூய்மையாகத் தோய்த்த வஸ்திரம் உடுத்திக் கோயிலுக்குச் சென்றேன்.

'மற்றொன்றும்வேண்டிலேன், மாதேவா உன்தனிரு
மலரடிப்பதம் வேண்டி நின்றேன்;
குற்றங்கள் பலவுண்டு, ஏழைநான் செய்தவை
குறியாமல் ஆண்டருளுவாய்;
கற்றகலையா லுன்றன், கருணை தனையடையவோ;
கடையனேன் திடமுற்றிலேன்;
உற்றதுணை உன்தனிரு, பாதமென நம்பினேன்;
உபேட்சியாதடிமை கொள்வாய்.

என்ற பாடலைவாயாரப்பாடி மனபாரத் தொழுதேன். ஏதோ ஒரு பெரிய பாரங்குறைந்து விட்டது போல் எனது உள்ளம் உணர்ந்தது.

இரண்டு மூன்று நாட்களின்பின் என் சிநேகிதியைப் பார்க்கப் போயிருந்தேன். அவள் தீபாவளிக்குப் பலகாரங்கள் சுட்டுக் கொண்டிருந்தாள். நானும் போய் உதவிசெய்ய உட்கார்ந்தேன். "நான் இம்முறை அதிகம் ஒன்றும் செய்யவில்லை. இது தீபாவளி தானே வருஷப் பிறப்பென்றால் தான் அதிகமாகச் செய்வேன்" என்றாள் அவள்.

நான்:—நீ வருஷப்பிறப்புக்கும் பலகாரம் செய்வதுண்டா? நான் வருஷப்பிறப்பிற்கு ஒன்றும் செய்வதேகிடையாதே, தீபாவளியைத்தான் இந்த ஊரில் அதிகமாகக் கொண்டாடுகிறார்கள். எங்கள் பக்கத்தில் இருப்பவர் யாரும் தீபாவளியைத்தான் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறேயே.

அவள்:—நம் ஊரில் தீபாவளிக்குக் காலமே எழும்புவார்கள் எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்வார்கள், ஒரு கோடி வஸ்திரம் தரிப்பார்கள். கோயிலுக்குப் போவார்கள் அவ்வளவுதான். பலகாரம் சுடுவதும் அரிது. இவ்வூரில் யாவரும் தீபாவளி கொண்டாடுகிறார்கள் என்று நாமும் அதைக்கொண்டாடினாலும், நம் மூதாதையர் பரம்பரையாகக் கொண்டாடிவந்த புதுவருஷத்தைக் கொண்டாடாமலிருப்பது அழகா? நீ சிறுவயசிலிருந்தே இவ்வூரிலிருப்பவளானதினால் உனக்கு இவ்வூர்ப் பழக்கம்தானே.

நான்:—நீ ஊரில் அவ்வளவாகக் கொண்டாடுவதில்லை யென்கிறாயே, அங்கேதான் தீபாவளிக்கு ஆடுகள், கோழிகள் என்று எத்தனையோ பலிகள் நடக்குமாம். குடிவகைகள் யாவர் வீட்டிலும் சென்று புகுந்து கொள்ளுமாம். அன்று முழுதும் எவ்வளவோ கேளிக்கையாம் எங்கள் அயல் வீட்டுச் சகோதரி சொன்னாள்.

அவள்:—ஐயையோ பாவமே! வருஷம் முழுதும்தான் பாவத்தைச் செய்தாலும் அந்த ஒருநாளிலாவது எல்லாவற்றையும் விலக்கி புண்ணியநாளான அந்நாளை சுவாமி ஸ்தோத்திரத்துடன் செலவிடாமல் இப்படியான அனியாயமும் செய்வார்களா?

இந்துக்கள் யாவரும் இத்தினத்தேமிக
இன்ப வுல்லாசமாய்க் கொண்டாடுவர்
அந்தோ இதன் பொருளாய்ந் தறியாரதை
அறிவித் திடுவோமே தோழிப் பெண்ணே.
நம்மைப் பிடித்துள்ள துர்க்குணம் யாவும்
நரகனைப் போலவே நாசமாக்கி,
செம்மைத் திருவருட் செல்வினைச் சிந்தனை
செய்வதிதன் பொருள் தோழிப்பெண்ணே.
புத்தம் புதிய கலையை யணிவது
போலப் பலப்புது நூல்களையும்,
இத்தரை மெச்சிடவே நல்லறிஞர்கள்
யாத்திடல் வேண்டுமே தோழிப் பெண்ணே.
தஞ்சமென்றடைந் தோரைக் காத்திடுவோ மீசன்
சன்னதி தனிலுயிர்ப்பலி தவிர்ப்போம்.
விஞ்சிடு மாணவத்தைப் புலச் சேட்டையை
வென்றிடுவோம் நாமே தோழிப் பெண்ணே.
பொல்லாக்குணங்களை போட்டிடுவீர் ஈசன்
பொன்னடி மேலன்பு நாட்டிடுவீர்.
எல்லார்க்கும் நாமிதை யின்பமுடன் கூறி
என்றும் மகிழ்வோமே தோழிப் பெண்ணே.

என்று அவள் சொல்லிக் கொண்டே யிருந்ததில் எண்ணைச் சட்டியிலிருந்த பலகாரத்தையும் கவனிக்கவில்லை.

"பலகாரம் கருகிப் போய்விட்டதே" என்று நான் நினைப்பூட்டியபின் அதை எடுத்துக் கெட்டிவிட்டு மறுபடியும் சொல்லத் தொடங்கினாள்.

வைகறை யிலெழுந்தே முழுகிக் கோடி
வஸ்திரங்களாக வாங்கிச் சட்டி
செய்கடன் யாவையும் செப்பமதாகவே
செய்து முடிப்போமே தோழிப் பெண்ணே.
வரிசை வரிசையாய் தீபங்களே ஏற்றி
வைகறைக் காலையில் வைத்திடுவோம்
அரியதினமதில் ஆடு மீன் கோழிகள்
அருந்திடலாகாதே தோழிப் பெண்ணே.
ஆடை புதியது சிந்தை புதியது
ஆன செயல் முறை யாவும் புதிபது
நாடு புதியது வாக்கித் தமிழ்மொழி
ஞானம் புதுக்குவோம் தோழிப் பெண்ணே
தீதுபுரி மது பானவகைகளைத்
தீபாவளியன்று தேடிக் குடிப்பது
பாதகத்துள்ள திபாதகமா மென்று
பாரெங்கும் கூறுவோம் தோழிப் பெண்ணே.
தேவர் துயரினைத் தீர்த்த திருமாலைச்
சிந்தையிலன்புடன் சந்ததமும்
பாவினத்தாற் புகழ் பாடிப் பாடி பாடி
பாடி மகிழ்வோமே தோழிப் பெண்ணே.

நான்:—ஓகோ அப்படியா! தீபாவளியன்று புனிதநாளாகவா பாவிக்க வேண்டும்? எனக்கு இது இவ்வளவு காலமாகத் தெரியாதே! அன்று கோவிலுக்கும் போக வேண்டுமா? இந்துக்களிலும் சிலர் முழுகிக் கோடி உடுப்பதில்லையே? இதெல்லாம் என்ன என்று சொல்லி வேதாந்தம் பேசுகிறார்களே. அது ஏன்?

அவள்:—அவர்கள் பழைய புராணங்களில் நம்பிக்கையற்றவர். அதுவுமற்று இதுவுமற்று அந்தரத்தில் நிற்பவர்கள். இதெல்லாம் விஸ்வாசத்தையும் நம்பிக்கையையும் பொறுத்தது.
அந்நாளிலே நரகாசுர னென்றொரு
அவுணனுதினம் ஆனைவருக்கும்
இன்னல் புரிந்திடத் தேவர்கள் யாவரும்
ஏகினர் வைகுண்டம் தோழிப் பெண்ணே
விண்டுவின் பாதத்தில் வீழ்ந்து நரகனால்
வேதனைப்படுவதை விள்ள மாலும்
தண்டு சில சக்கு சங்கரம் வாள்கொடு
சமர் செயச் சார்ங்கனன் தோழிப் பெண்ணே
யுத்தத்திலே நரகாசுரனும் முயிர்
ஓய்ம் தருணத்திலுண்மை உணர்ந்
தத்தன் திருமாலை நோக்கியடி பணிந்
தன்புடன் சொல்லுவான் தோழிப் பெண்ணே
நானிறக்கு மிந்த நேரத்தில் நீராடி
நல்லகலை யுடுத்துன்னை வணங்காதார்
தானியற்றுந் தவமென்னையே சார்ந்திடத்
தாவரமென்றனன் தோழிப் பெண்ணே
அப்படியாக வென்றே மாலுந்திரு
வாய்மலர்ந்தேகினர் அத்தினமும்
ஐப்பசி மாசம் கிட்டின பட்சத்தி
லான சதுர்த்தசி தோழிப் பெண்ணே.

என்று சொல்லி முடித்து பலகாரச்சட்டியைத் திரும்பிப் பார்த்தாள். எல்லாம் கருகிப்போய் இருந்தது. நானும் இவ்வளவு நேரமும் அவள் வாயையே பார்த்துக் கொண்டிருந்து விட்டேனெழுயு சட்டியைக் கவனிக்கவேயில்லை. சட்டியை இறக்குவதற்குத் துணி எடுத்து வருவதற்குள் சட்டி பக்கென்று தீப்பற்றிக் கொண்டது. தண்ணீர்வாளி ஊற்றலாமென நான் தண்ணீர்க் குழாயண்டை ஓடினேன். அவள் தண்ணீர் ஊற்றுவது கூடாதென்று சொல்லி ஒரு சட்டியை அதன் மேல் வைத்தாள். திடீரெனத் தீயணைந்தது.

எங்களாரவாரத்தைக் கேட்டு அடுத்த வீட்டில் புதிதாகக் குடிவந்திருந்த "மெரீனு" என்பவள் ஓடிவந்தாள். அவள் வரும்போது சப்பாத்துப் போட்டுக் கொண்டேவந்தாளென்பது சத்தத்திலிருந்து தெரிந்தது. பெயரைப் பார்த்ததும் வேறேதோ சாதியென நினைத்து விடாதீர்கள். அவளும் எங்கள் சாதியினளே. அவள் வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். நாங்கள் நெருப்பைப்பற்றியும் அது அணைக்கும் விதத்தைப்பற்றியும், முன்னிருந்த இடத்தில் நடந்த விபத்தைப் பற்றியும் ஏதேதோ பேசி முடித்தோம். நெருப்பு மனிதரில் பற்றிக் கொண்டால் ஓடவே கூடாதாம். உடனே மண்ணில் விழுந்து புரள வேண்டுமாம். பாம்பு கடித்தத்தால் அந்த இடத்தைக் கத்தியால் இன்னும் கீறி இரத்தத்தை உறுஞ்சி எடுத்துத் துப்பச் சொல்வார்கள். இவை யெல்லம் அறிந்திருப்பது நல்லதுதான். ஆனால் அவற்றை உடனே செய்யக்கூடிய தைரியமும் ஆற்றலுமல்லவா முக்கியமாக வேண்டும்.

மெரீனு என்பவள் கிறீஸ்தவ பெண்ணெனதினால் எனக்குச் செய்த பிரசங்கத்தை இன்னொரு முறை அவளுக்குச் செய்ய வேண்டிய சிரமம் என் சிநேகிதிக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனதினால் எண்ணெச் சட்டியை மறுபடி நாங்கள் இறக்கி வைத்துவிட்டோம், அந்தப் பிரசங்கம் முடிந்ததும் மெரினு கேட்டாள் வருஷப் பிறப்பென்கிறீயே அதை எப்படி நீங்கள் கொண்டாடுகிறீர்கள்.

ஏன் வருஷப் பிறப்பு நீ கொண்டாடுவதில்லையோ என்று மெரீனுவைப் பார்த்துக் கேட்டாள் என் சினேகிதி.

மெரீனு:—தமிழ் வருஷப் பிறப்பா அது தமிழரல்லவா கொண்டாட வேண்டும். எங்களுக்குத்தான் வேறு உண்டே.

சி:—என்ன! தமிழருக்கா? அப்படியானால் நீ ஆர்? நீ தமிழ்ப்பெண்ணல்லவோ? சீனப்பெண்ணு?

மெரீனு:—தமிழரென்று வாய் தடுமாற்றமாய்ச் சொல்லிவிட்டேன். இந்து மதத்தைத்தான் நான் கருதியது.

சி:—நாட்கள், மாசங்கள், வருஷங்களில் கூடவா, மதத்தைப் பற்றி இருக்கிறது. இந்திய இலங்கை மக்கள் யாவரும் தங்கள் மூதாதையர் கொண்டாடி வந்த புது வருஷத்தை மகா புண்ணிய தினமாகக் கொண்டாடி வருகிறார்களே. தீபாவளியைத்தான் சமூகத் திருநாள் என்று விட்டு விடுங்கள் சரி. புது வருஷப் பிறப்பையுமா சமூக நாள் என விலக்குகிறாய். சிங்களவர் கூட இந்தப் புது வருஷத்தைக் கொண்டாடுகிறார்களே! மற்றச் சாதியாரைப் பார். முதலில் மலாயரைப் பார். அவர்கள் தங்கள் சாதி சமயத்தைவிட்டு விலகியவரை சாதிப் பிரஷ்டம் செய்து விடுகிறார்கள். அதை விடுவோம்; சீனரைப் பார், அவர்கள் என்னதான் அன்னிய மதத்தைத் தழுவினலும் சாதி அபிமானம் மட்டும் அவர்களைவிட்டு நீங்கவில்லை. தங்கள் பெருநாள்களெல்லாவற்றையும் வழுவாது செய்து வருகிறார்களல்லவா? கிறீஸ்தவர்களானதினால் கிறீஸ்து பிறந்த நாள் கொண்டாடவேண்டியது அவசியந்தான். அதற்காக பொதுவாக உரியதையும் உதறித் தள்ளலாமா? உனது பெயரைப் பார். அதைக்கூட அன்னியரிடம் இரவல் வாங்கிவிட்டாயே!

(என்றதும்)

நான்:—போன மாச வழிகாட்டியில் கிறீஸ்தவச் சகோதரர் ஒருவர் அதுபற்றி எவ்வளவு அருமையாக எழுதியிருந்தார் பார்த்தாயா? அவருக்கு அரிய இரத்தினம் என்று பெயர் வைத்தாலும் வைத்தார்கள். தன் சகோதரரின் நன்மையை நாடி எவ்வளவு உருக்கமாக எழுதி யிருக்கிறார். தன் சகோதரர் இப்படியே பெயர்களை வைத்துக் கொண்டே போனால் கடைசியில் தமிழர் என்ற சொல்லே மறைந்து எப்படி எப்படிப் போய்விடுமோ என்று மிகவும் வருந்துகிறார். அறிவுக்கல்வியும் தேசாபிமானமுமுள்ள சகோதர சகோதரிகள் அதை மிகச் சிரத்தையுடன் உற்று யோசித்துப் பார்த்து அதன் உண்மையை உணராமலிரார். எங்கள் நிறம், பாஷை, இவற்றிற்கேற்றதாக வன்றே பெயரையும் வைத்துக் கொள்ளவேண்டும். அதை விட்டு அந்தச் சகோதரர் சொன்னது போல் அன்னியரின் பெயர்களைச் சூடி நாம் ஏன் மற்றவரை ஏமாற்ற வேண்டும்

சினே:—நல்ல வேளையாக உடையையும் இரவல் வாங்காமல் இருக்கிறாயே, அது ஒன்றே பதினாயிரம். அது அப்படியிருக்க கிறீஸ்து பிறந்த தெவ்விடம்?

மெரீனு:—கிறீஸ்து பிறந்தது ஆசியாக்கண்டம் தான்.

சினே:—அப்படியிருக்க ஐரோப்பியரின் பெயரைச் சூடுவதற்கு நியாயமென்ன?

மெரீனு:—அது என்னவோ நான் அறியேன். என் பெற்றோரையல்லவோ கேட்க வேண்டும்.

சினே:—அப்படியானால் உன் குழந்தைகளுக்கு என்ன பெயரிட்டிருக்கிறாய்? (மெரீனு ஒன்றும் பேசாமல் சிரித்தாள்.)

சமயத்தில் சிறிது பேதமிருப்பதினால் மட்டும் நீ தமிழ் பெண்ணல்லாமல் பாறிவிட முடியுமா? என்ன சமயமாயிருந்தபோதிலும் தன் சுய சாதியின் பெயரையும் பழக்கவழக்கங்களையும் விட்டு விலகினால் அன்னியர் மதிப்பாரா? பெயரைப் பார்த்த அளவில் இது என்ன சாதிபார் என்று அறியாமலல்லவோ திண்டாடுவார்கள். பின் நம் நிறத்தைப் பார்த்துத்தான் சந்தேகந் தீர்வார்கள். கறுத்தவராகிய நாம் வெள்ளையரின் பெயரை மட்டும் சூடி என்ன செய்வது? சகோதரர் அரியரத்தினம் என்பவர் கிறீஸ்தவராயிருந்தும் இதைத் தம் சகோதரருக்கு எடுத்துக் கூற முன் வந்தது அவரின் புத்திக்கூர்மையும், சமூகாபிமானத்தையும், விளக்கிக் காட்டுகின்றது. அவரைப்போல் இன்னும் அனேகர் கிறீஸ்தவர்களாயிருந்த போதிலும், தங்கள் சாதிப் பெயரைத் தள்ளிவிடாமல் சூடியிருப்பது போற்றத் தக்கதே. சீனர்களைப்பார், அவர்கள் என்ன சமயமாயிருந்தபோதிலும் அவர்களின் பெயரைக் கேட்டவுடனே இது சீனர் தான் என்று நம்மனதில் அப்படியே பதிந்துவிடுகிறதல்லவா? அதைவிட்டு நம்மை வேறு யாரோ என்று காட்டிக் கொள்வதால் வரும் லாபந்தானென்ன? மதத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம். தமிழராகியவர் தமக்கெனப் பொதுவாக உரிய வருஷப் பிறப்புப் போன்ற திருநாள்களைத் தள்ளி விடுவதும் அழகல்ல.

இவ்வளவையும் ஆறுதலாகக் கேட்டுவந்த மெரீனு, "என்ன இப்படிப் பெரிய பிரசங்கம் செய்கிறாய். எனக்குத் தமிழ் பெயர் இல்லாமலா இருக்கிறது, எனது தமிழ்ப் பெயர் 'அற்புதம்" அந்தப் பெயரால் அவ்வளவாக என்னை ஒருவரும் அழைப்பதில்லை. பள்ளிக்கூட நாட்களிலிருந்தே ஆங்கிலப் பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தேன். அதுவே பழக்கமாய்ப் போய்விட்டது. இனி எனது குழந்தைகளுக்காவது தமிழ்ப் பெயரையே வைத்து அதையே கூப்பிட்டு வருவேன். வருஷப் பிறப்பைப்பற்றிச் சொன்னையே அது அவரிடம் சொல்லிப் பார்க்க வேண்டும் என்ன சொல்வாரோ தெரியாது" என்றாள்.

சினே:—அதெல்லாம் வீண் வார்த்தை. அவர்கள் என்ன சொல்வார்கள். துவேஷ புத்தி பெண்களுக்குத்தான் அதிகம் உண்டு. நீ கொண்டாட வேண்டுமென்றால் உடனே தேவையான தெல்லாம் வீடி தேடி வருகிறது. இதற்கெல்லாம் புருஷர்மேல் வீண் பழியை போடுவது அழகல்ல. பாவம், அவர்களுக்குத் தங்கள் வேலையில் மூளை செலவிடவே சரியாயிருக்கும். இதெல்லாம் பெண்கள் கையிலல்லவா இருக்கிறது. நீதான் முயற்சி செய்ய வேண்டும்.

சரி சரி அதை எப்படித்தான் கொண்டாடுவது என்று மெரீனு கேட்டாள். இதற்குள் அவள் வீட்டில் குழந்தை அழுத சத்தம் கேட்டு எழும்பிப் போய்விட்டாள். எனக்கும் நேரமாய் விட்டதால் இன்னொரு நாளைக்கு வருகிறேனென்று சொல்லி எழுந்தேன். "சற்று நின்று இதைமட்டும் கேட்டுக் கொண்டு போ" என்று சொல்லி என்னை உட்காரவைத்துப் பிள்ளை வருமாறு சொன்னாள் என் சிநேகிதி:—

மெரீனு புதிதாக வந்தவளானதினால், நானே போய்ப் பார்க்க வேண்டுமென்று என் புருஷன் எனக்குச் சொன்னார். அதனால் ஒருநாள் போனேன். வெளி விறாந்தையில் நின்று தட்டிப் பார்த்தேன். ஒரு சத்தமுமில்லை. கனநேரத்தின்பின் ஒரு குழந்தை வந்து "அம்மா உங்களை உட்காரச் சொன்னா" என்றது. நானும் உட்கார்ந்தேன். நான் போகும்போது 2½ மணி. மணி 3 அடித்தது; மூன்றரையும் ஆய்விட்டது. அவளைக் காணோம். இனி நாலு மணிக்கு ஏதும் ஆயத்தப் படுத்தவேண்டுமே. இப்படி வந்து மாட்டிக கொண்டேனே! எப்படிச் சொல்லாமல் போவது! என்று பலவாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கச் சப்பாத்துச் சத்தம் கேட்டது. வேறும் ஆரும் வருகிறார்களோ வென்று வெளியே எட்டிப் பார்த்தேன்.

"அங்கே என்ன பார்க்கிறீர் நேரம் தாழ்த்தினதிற்காக மன்னிக்க வேண்டும்," என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தாள் மெரீனு.

அவளின் வேஷத்தைப் பார்த்த எனக்கு ஒன்றுமே சொல்லிக்கொள்ளத் தெரியவில்லை. "வெளியே போகப் போகிறாயோ? நான் வந்து இடைஞ்சல்பண்ணி விட்டேனே" என்று வயிற்றெரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டேன். இல்லை என்று பதில் சொல்லிச் சேமம் விசாரிக்கலானாள். எனக்காகவா இவ்வளவு சோடினை! இதற்காகத்தான் இவ்வளவு நேரமும் காக்க வைத்தாயோ? என்று முகத்திலடித்தாற்போல் பதில் சொல்லலாமா என்றே என் மனம் துடித்தது. ஆயினும் என் கோபத்தை அடக்கிக் கொண்டு இரண்டொரு பதிலுடன் வீடு வந்து சேர்ந்தேன். வீடு போகிறவர்களை இப்படியும் அலட்சியம் செய்து சோடித்துக் கொள்வாருண்டோ? என்று மகா கோபத்துடன் சொல்லி முடித்தாள்.

நவநாகரீகமா? பாழும் மோலிக் கௌரவமா? அறியாமையா? அல்லது மமதையா? எப்படித்தான் இதைத் சொல்லி யழுவது.

... சகோதரத்துவம் ...

(முற்றொடர்.)

வெகு புத்திசாலியான ராதா சாந்த முடனும் கவனமுடனும் கேட்டுவந்து "ஓ! சரிதான், இவ் விஷயம் நான் சுருக்கமாகக் கேள்விப் பட்டேன். உன்னிடமிருந்து சகலமும் அறியலானேன். அ வள்மிகவும்அடக்கமும், கருணையும்,அழகுள்ளவ ளும் என்று கேள்விப்பட்டேன். நான் சொல்வ தின்படி நீ நடக்கச் சம்மதித்தால் உன்கவலையெல் லாம் அறவே ஒழிந்து விடும் என்றாள்.

தாரா:-"என்னவழி? அதைச்சொல்" (எனவெ கு ஆவலுடனும் பரிதாபமாகவும் கேட்டாள்.)

ராதா:—"சகி! இது உனக்குத் தெரியாதா? நீ உன்து கணவனுடன் யோசித்து சகுந்தலாவைமறு மணம் செய்யக்கேட்டுக்கொள். அவரிடம் கிட்சய மான முடிவை அறிந்து கொண்டு நீயும், நானு மாக ஓர் உபாயம் செய்யலாம். (என்று சொல் லிச் சிலவார்த்தைகளை அவள்காதில் மெதுவாக ஓதினாள்.)

இவ்வுள்ளீத்தையும் கேட்ட தாரா, அதிகமகி ழ்ச்சி கொண்டவளாக, "என் இன்னுயிர்த் தோ ழியே? நீ சொல்லுகிறபடி யாவும் நடக்க எம்பி ரான் அருள்புரிய வேண்டும்.

முதலில் நான் உன்னிடம் ஒருவிஷயம் சொல்ல வேண்டும். இவைகள்யாவும் சம்பவிக்கும் வரையி லும், நீ இதை ஒருவரிடமும் கூறுவதில்லை யென்று எனக்குச் சத்தியம் செய்துகொடு. அதின் பிறகே சிலவிஷயம் நான் உனக்குச் சொல்வேன்" என்றாள்.

ராதா:—என்பிரிய தோழியாகிய உன்மனது வருந்த நான் சகியேன். நீசந்தோஷமாகவும் சுக மெலத்துடனும் சீவிக்கவேண்டு மென்பதே என் விருப்பம். நீ கவலை யில்லாமல் சொல். நான் ஒரு வரிடமும் இதுவிஷயத்தை யிட்டுப் பேசவேமா ட்டேன் இது சத்தியம்.

தாரா:—என்பிரிய ராதா! இந்த உலக சீவியம் எனக்கு வெறுப்பைத் தருகிறது. என்புருஷனை யும், அவர் குடும்பத்தையும், சகுந்தலாவின் கை யில் ஒப்படைத்துவிட்டு, என்வாழ்நாள்முழுவதை யும் பகவானுக்கே அர்ப்பணம் செய்யத் தீர்மானி த்து விட்டேன். நீ இதைப்பற்றி என்னசொல்லு கிறாய் என்றாள்.

ராதா:—(நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன் று நினைத்தமாதிரி இவள் இப்படிச் சொல்லுவாள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே. நான் உனக்கு விரோதமாக ஒன்றும் பேசுவதில்லை யென்று வாக்குக் கொடுத்திட்டேனே, என்ன செய்யலாம் "ஐயோ தெய்வமே! இவள் இந்தச்சிறு பிராயத்திலா உமது அடியாளாக வரவேண்டும், இதுவும் உமது சோதனையா? கருணைக்கடலே நீர் தான் என் சிநேகிதியை எவ்விதஇடையூறுமின் றிக் காத்து ரட்சிக்கவேண்டும். என்று மனதில் பிரார்த்தித்தவளாக;) "என் பிரிய சகோதரி, நீ என்னிலும் பார்க்க அறிவாலுயர்ந்தவள், நான் எ ன்னத்தைச் சொல்வேன். இந்த ஏழையின்மேல் உனது கருணையிருந்தால் போதும். பகவான், நீ நினைத்தகாரியம் கைகூட அருள் புரிவாராக" என் றாள்.

(ராதாவின் முகத்தில் கவலை தோன்றுவதைக் கண்ணுற்று)

தாரா:—"என்பிரிய ராதா, நீ யேன் கவலைப்ப டுகிறாய்? நாம் இந்த உலகில் சீவிக்கும் வரைக்கும் நமக்கு என்றல்ல, பிறர் நன்மையைக் கருதி அல் லவோ சீவிக்க வேண்டும். நம்மைச் சுற்றிலும்பார் எத்தனையோ ஏழைஜனங்கள் அன்ன ஆகாரமும், உடுக்க உடையுமின்றிக் கஷ்டப் படுகிறார்கள் அப்படியே எத்தனையோ ஐசுவரியவான்களும் இ றுமாப்பான சிந்தையால் தங்கள் மனதைக் கடின ப்படுத்தி, ஏழைகளுக் கிரங்காமல், தங்கள் ஐசு வரியத்தையே நம்பி, மனம்போன போக்கில் நடக் கிறார்கள். கடவுள் ஒருவர் இருக்கிறார், நாம் எல் லோரும் அவருடைய பிள்ளைகள், ஏழை என்றும் டணக் காரனென்றும் அவருக்கு வித்தியாசமேகி டையாது, ஒவ்வொருவர் செய்கிற செய்கையின் படி பலனளிப்பார் என்பதை அடியோடு மறந்து உலகத்திலே மயங்கிக் கிடக்கிறார்கள். நாம் ஒரு வரிலொருவர் அன்புகூர்ந்து பிறருக் காகச் சீவி க்க வேண்டும். என் பிரியசகி! நீ கவலைப்படாதே. கடவுளை நான் கொண்டுள்ள எண்ணத்தை பூர்த்தி செய்ய வேண்டிக்கொள். (எனக்கூறிமுடித்தாள்)

ஓர் நாள் காலை 9 மணி இருக்கும் சிநேகிதிகளி ருவரும் சென்னைக்குப் பிரயாண மானார்கள். போகும் வழியில் பலவிதமான இயற்கைக் காட்சிகளையும் கண்டு களித்தவாறும், விநோதமான பலகதைகளைக் கதைத்துக் கொண்டும் வெகு குதூகலமாகச் சென்றார்கள். புகையிரத வண்டியும் சென்னை ஸ்டேஷனில் வந்து நின்றது. நமது கதா நாயகிகளிருவரும், மேலே நடக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி எண்ணமிட்டவாறுக, ஓர் கார் (Car) அமர்த்திக் கொண்டு நேராக பிரயாணிகள் விடுதிக்குச் செ ன்று, ஓர் அறை வாடகைக்கு அமர்த்தி அன் றைப் பொழுதை அங்கே கழித்தார்கள்.

சாயங்காலமானதும் புறப்பட்டு ஒவ்வொரு வீடாகத் தேடிக் கடைசியில் சகுந்தலாவின் வீட் டைத் தட்டினார்கள். வயது சென்ற கிழவி யொ

ருத்தி வந்து, கதவைத் திறந்தாள். இவர்களைக் கண்டதும், "நீங்கள் யாரம்மா? இந்த நேரத்தில் தனிமையாக வரக் காரணமென்ன? யாரைத்—தேடுகிறீர்கள்? உங்கள் புருஷன்மார்கள் எங்கே? என்று இன்னும் பலவிதமான கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள். இதற்குள் சகுந்தலாவும் அவள் சகோதரனும் வந்து பாட்டி, வந்தவர்களை உள்ளே அழைத்து வராமல், என்ன பிதற்றிக் கொண்டு நிற்கிறாய்? என்று சொல்லி, அவர்களை அழைத்துக் கொண்டுபோய் வேண்டிய உபசாரங்கள் செய்த பிற்பாடு, சகோதரிகளே! இந்த இருட்டான நேரத்தில் எங்கு வந்தீர்கள்? நீங்கள் யார்? எங்களால் ஆகவேண்டிய காரியம் ஏதேனும் உண்டோ? என்று வெகு தயவாகக் கேட்டார்கள். அவர்களின் களங்கமற்ற மனதையும் அன்பையும் கண்ட இரு சிநேகிதிகளும் மிகவும் ஆச்சரியப்பட்டவர்களாக (முன்பின் அறியாத எங்களுடன் எவ்வளவு அன்புடன் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளா? அஞ்தைகளாக இருக்கவேண்டும். இவர்களின் குணத்துக்கு ஏற்றப்போல் அழகையுமல்லவா? ஈசன் இவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். நாங்கள் வந்த காரணம் கைகூடவேண்டுமேயாகில் இவர்களிடம் பொய் சொல்லித்தான் தீரவேண்டும். கடவுளே நீர்தான் எல்லாம் ஈடேறச் செய்யும் என்று எண்ணமிட்டவர்களாக, அவர்களை நோக்கித் தாராவானவள் சொல்லுகிறாள். "சகோதரர்களே! நாங்களிருப்பது திருவனந்தபுரம். எங்கள் தகப்பனார், அந்த ஊரில் ஜமீன்தாராக இருக்கிறார். இந்த ஊரைப் பார்க்க வேண்டுமென்று வெகுநாளாக ஆவல் கொண்டு புறப்பட்டு வந்தோம். வழியோ தெரியவில்லை, இருட்டிப்போய் விட்டது. எங்கேயாகிலும் தங்கக்கூடிய இடம் உண்டோ? இந்த இருட்டில் எங்கு செல்வதென்று வழி தெரியவில்லை என்றாள்.

சகுந்தலா:—அவர்களை நோக்கி, என் பிரிய சகோதரிகளே! நீங்கள் எத்தனைநாள் வேண்டுமாகிலும் இங்கே தங்கலாம். நானே உங்களைக் கூட்டிக் கொண்டுபோய் ஒவ்வொரு இடமும் காண்பிக்கிறேன், உங்கள் சொந்த வீடுபோல நீங்கள் நடந்து கொள்ளலாம். என்று, கபடமற்ற மனதுடன் வெகு சந்தோஷமாகச் சொன்னாள். அவளின் குயிலினுமினிய குரலையும், தேன்மொழி போன்ற சொற்களையும் செவியுற்ற இரு சிநேகிதிகளும் சந்தோஷம் கொண்டவர்களாய், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கினார்கள். இவ்விதமாக ஒவ்வொருநாளும் சென்னையின் அதிஅற்புதமான காட்சிகளையும், இந்திரலோகமோ என ஜொலிக்கும் வண்ணமாயுள்ள, கூடகோபுரம் மாடமாளிகைகளையும், ஆண்டவனின் அற்புத சிருஷ்டியில் ஒன்றாகிய சமுத்திரத்தின் இயற்கை வனப்பையும், கண்டு களித்தவாறாக, அந்நால்வரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போல ஒரு வாரம். தாங்கள் வந்த அலுவலையும் மறந்து போனார்கள் ஓர் நாள் சாயங்காலம் வழக்கம்போல் கடற்கரைக்கு இந்நால்வரும் சென்று பல பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் சமயம் "தாராவானவள்:—சகுந்தலாவை நோக்கி, எங்கள் பிரியமுள்ள சகோதரியே! நீங்கள் இவ்வளவு நாளும் எங்களுக்குச் செய்த உபகாரங்களுக்காக நாங்கள் அநேக வந்தனம் செலுத்துகிறோம். நாங்கள் நாளைக் காலையில் ஊர் போய்ச் சேரவேண்டும். எங்கள் தகப்பனார் எங்களைக் காணமல் வருந்துவார். நாங்கள் சோரி வந்த காரியம் உன்னாலும் உன் அண்ணனாலும்தான் நிறைவேற வேணுமென்றாள்.

சகு:—"என் பிரிய சகோதரிகளே எங்களால் ஆகவேண்டிய காரியம் எதுவாக இருந்தாலும் சரி நாங்கள் செய்யத் தடையில்லை. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இது சத்தியம் என்றாள்.

தாரா:—சரிதான் அந்தக் காரியம் உன்னால் தான் ஆகவேண்டும். எனக்கு ஒரு சகோதரன் உண்டு. அவருக்குப் பல இடங்களிலும் பெண் பார்த்தும் ஒன்றும் சரிப்படவில்லை, அது விஷயமாகவே நாங்கள் இவ்வளவு தூரம் வந்தோம். இன்றே எங்கள் விருப்பம் நிறைவேறிற்று. நீயே அவருக்கேற்ற பெண். என்ன சொல்லுகிறாய்.

சகு:—(இதைக் கேட்டவுடன் திடீரெனத் தூக்கி யெறியப்பட்டவள்போல் மனம் தடுமாறி) நீங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே எனக் கூறி மேலும் ஏதோ சொல்ல வந்தவள் அவ்வளவிலேயே நிறுத்திக் கொண்டாள்.

தாரா:—"ஆனால் நீ இப்போ செய்த வாக்கை மாற்றப்படாது, உன்னால் ஆகக்கூடிய காரியம் எதுவானாலும் சரிசெய்ய ஏனும் என்பதாகக் கூறினபல்லவா? உனது அண்ணனுடன் யோசித்துச் சொல். இப்போ இருட்டிவிட்டது நாம் வீட்டிற்குப் போவோம் வா.

உடனே சகுந்தலா தூங்கி விழித்தவளைப்போல செய்வதின்னதென்று வகை தெரியாமல் சிந்தனையில் ஆழ்ந்தாள். நான் தீர யோசியாமல் செய்த வாக்குறுதி இவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டதே. எனது அண்ணன் இதை அறிந்தால் என்ன நினைப்பாரோ? என்று எண்ணமிட்டவளாக, அவர்களுடன் செல்லலானாள்.

வீடு சென்றதும் இனித் தாமதிக்கக் கூடாதெனக் கருதி, தாராவானவள் சுதர்சனனுக்கு எல்லா விஷயங்களையும் தெளிவாக எடுத்துக் கூறிச் சகுந்தலாவை தனது அண்ணனுக்கு விவாகம் செய்து தரும்படியாக வெகு பணிவுடன் வேண்டிக் கொண்டாள். இவளின் தந்திரம் அவ

னுக்குத் தெரியாததால் அவள் சென்னதை உண்மையென நம்பி அவளின் வேண்டுகோளுக்கிணங்கினன். அவன் தனது சகோதரிக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொன்னதுமன்றி, வேண்டிய பொருட்களையும் ஆடை ஆபரணங்களையும் கொடுத்து; ஆசீர்வதித்தான். மறுநாட் காலையில் எல்லோரும் திருவனந்தபுரத்துக்குப் பிரயாணமானார்கள். சிறு பிராயமுதல் அவளை வளர்த்த கிழவியையும் சுதர்சனன் அவர்களுடன் கூட அழைத்துச் சென்றான்.

மூன்று நாள் சென்ற பிற்பாடு, சகுந்தலாவுக்கும் தாராவின் கணவனுக்கும் அமைதியாக விவாகம் நடந்தது. ஆனால் மணமகன் தாராவின் தமயன் என்றே சகுந்தலா நம்பி யிருந்தாள். ஏனெனில் மன வருத்தத்தினால் அவனின் முந்தின சாயல் எல்லாம் மாறி விட்டது. அவளால் யார் என்று கண்டுகொள்ள முடியவில்லை. அவனுக்கும் தன் மனைவியின் தந்திரம் தெரியாது. என்னவிதமாகச் சகுந்தலாவைச் சம்மதிக்கச் செய்தாள் என்று வெகுவாக ஆச்சரியப்பட்டான். இவ்விதமாகவே தாரா தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றினாள். உண்மையான அன்பும், சகோதர வாஞ்சையும், கடவுள் பக்தியும் நமது உள்ளத்தில் இருக்குமாயின் நாம் நினைத்துச் செய்யும் ஒவ்வொரு காரியமும் கைகூடும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

மறுநாட் காலையில் அந்த வீடு முழுவதும் ஒரே அமர்க்களம். "தாராவைக் காணவில்லை, தாரா...!...! தாரா.....! தாரா என்ற கூக்குரல் எங்கும் கிளம்பின. வீதி முழுவதும் தேடினார்கள். அவளின் தோழி ராதாவைப் போய் விசாரித்தார்கள். "தான் தேசத் தொண்டில் ஈடுபட்டுத் தன் பிற்கால சீவியத்தைக் கழிப்பதாக" அவள் சொன்ன வாக்கை அப்பொழுது உணர்ந்தான். "ஐயோ! என் பிராண சகி, நீ எங்கு சென்றாய்! ஒரு வார்த்தையாகுதல் எனக்குச் சொல்லாமல் சென்றாயோ? நான் இனி உன்னை எங்கே பார்ப்பேன்" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு பிரலாபித்தாள். ஆனால் அவள் மாயமாக மறைந்த இடம் ஒருவருக்கும் தெரியாது. உலகத்தையே வெறுத்துத் தன்னைத்தான் கடவுளுக்கே அர்ப்பணம் செய்த, புனிதவதியை பெண்கள் நாயகத்தை; யாரால்தான் கண்டு பிடிக்க முடியும்.

தாராவின் அறையில் ஓர் கடிதம் கண்டெடுத்தார்கள். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

என் பிராணபதி, அடியாளில் கோபம் வேண்டாம். இன்றே என் வேண்டுகோள் நிறைவேற ஈசன் கிருபை செய்தார். நீங்களும் சகுந்தலாவும், உங்கள் சீவியம் முழுவதையும் பிறரின் நன்மையை விரும்பி, ஆண்டவரின் அடியாராக உங்கள் வாழ்நாளைக் கழியுங்கள். நான் என் சீவியம் முழுவதையும் சன்னியாசியாகக் கழிக்கத் தீர்மானித்தேன். என்னைத் தேடித் திரியவும் வேண்டாம். நீங்கள் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. என்னைப்பற்றிய மனக் கவலையை அறவே ஒழியுங்கள். இதுவே நான் உங்களிடம் வேண்டும் மன்றாட்டு.

இப்படிக்கு

தங்கள் அடியாள்

தாரா.

என்று எழுதப்பட்ட கடிதத்தைப் படித்ததும் அவனுக்குப் பூமியே இருண்டுவிட்ட மாதிரி இருந்தது. என்ன செய்வான்? பரிதாபமாகப் புலம்பினான். தன்னால் கூடிய மட்டும் அவளைக் கண்டு பிடிக்க வேண்டிய எல்லாவிதமான உபாயங்களையும் செய்து பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை. இப்பொழுதுதான் சகுந்தலாவுக்குத் தான் ஏமாற்றப்பட்டது விளங்கிற்று,

சகுந்தலாவும் அவளது கணவனும், "தாராபாய் தர்ம வைத்தியசாலை" என்று நாமகரணம் சூட்டி ஓர் வைத்திய சாலை ஸ்தாபித்து எல்லாவிதமான வசதிகளையும் ஏழைகளுக்கு அளித்ததுமன்றி, வருஷம் இருமுறை தாராவின்பேரால் அன்னதானமும் வழங்கி வந்தார்கள்.

ஆகையினால், நாம் இவ்வுலகில் சுகமாய் ஜீவிக்கவும் நமது ஆன்மா நற்கதியடையவும் சகோதரத்துவம் அவசியமே. ஆனதால் ஜாதி, மதம், தொழில் முதலிய எவ்விஷயத்திலும் உயர்வு, தாழ்வு என்கிற எவ்வித வித்தியாசமும் பாராடாடது யாவரும் ஒரு தாய் வயிற்று சகோதரர்களாகவே பாவித்து ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு கருணையோடு ஒற்றுமையாய் நடந்துவர வேண்டியது மிகவும் அவசியம்.

(ஸரோஜா.)

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க அரை வருஷக்கூட்டம்.

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்கத்து அரை வருஷப் பொதுக்கூட்டம் 1937-ம் ஜூலை மீ 5-ம் உ செல்வாய்க்கிழமை கோலாலம்பூர் நகர மண்டபத்தில் நடந்தேறியது. சபாநாயகர் ஸ்ரீமான் இ. நா. தம்பித்துரை அவர்கள் தலைமை வகித்தார். Mr. G. M. Brander அவர்களும் அங்கத்தவர் அநேகரும் சமூகமளித்தனர்.

போன பொதுக்கூட்டத்தின் குறிப்புகள் வாசிக்கப்பட்டபின் தலைவர் பின் வருமாறு கூறலானார்:—

"ஏதோ காரியதங்கள் தேடினபோது இந்தச் சங்கத்தின் முதல் வருஷக் குறிப்பு என் கைக்கு எட்டியது. அப்போ சங்கத்தின் 1924ம் வருடம் ஆடி மாசம் முதலாம்தேதி முதல் 1925-ம்ஆண்டு ஆனிமாசம் 30-ம் தேதி முடிய ஒரு வருஷம். அவ் வருஷத்தலைவர் ஸ்ரீமான் S.T. தோமஸ் அவர்கள். அவ்வருஷக் கூட்டத்து அறிக்கையை இதே மண்டபத்தில் 1925-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 20ம் தேதி நடந்த கூட்டத்தில் ஒப்புவித்தார். ஸ்ரீமான் தோமஸ் அவர்களை அநேகர் அறிவீர்கள். அவர் இவ்வூரில் அனேக வருஷம் கடமைபார்த்து இப்போ சில வருடங்கட்கு முன் ஓய்வெடுத்து தன் நாட்டில் ஏகி ஆறுதலாகவும் சந்தோஷமாகவும் தன் காலத்தைக் கடத்தி வருகிறார்.

"முதல் வருஷக்கடைசியில் ஆயிரத்து நாற்பத்து ஏழு அங்கத்தினர் இந்தச்சங்கத்தில் சேர்ந்திருந்தார்கள். அத்தனை அங்கத்தினர் சேர்ந்தது திருப்திகரமான சங்கதியெனச் சொல்லி பின்னும் 55 அங்கத்தவர் சேர்ந்துள்ளார்களென்றும் சொல்லிச் சந்தோஷித்தார். வரவரச் சங்கம் முன்னேறிமடைந்து வருமென்பது தனது நம்பிக்கை யெனவும் சென்னார்.

"ஐக்கியமாகாண கவண்மென்டின் பெரிய சக்கடத்தாராகிய Sir George Maxwell அவர்களின் கடிதம் ஒன்றை தலைவர் வாசித்தார். அதில் குறிப்பிட்டிருந்ததாவது:—

"நான் சங்கத்தின் முதல் வருஷக் குறிப்புகளை மிகுந்த அக்கரையாக வாசித்தேன். அங்கத்தவரின் தொகை மிகுந்த திருப்திகரமாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தவர் யாவரையும் இச்சங்கத்தில் அங்கத்தவராயிருக்க வேண்டுமென்று ஊக்கம் கொடுக்கும் சங்க நிர்வாகஸ்த்தருடன் நான் அனுதாபப்படுகிறேன். அபிமான முள்ள யாழ்ப்பாணத்தவர் யாவரும் இச்சங்கத்தில் சேர்ந்து இதை மேன்மையுறச் செய்வார்களென்றே நான் நம்புகிறேன். இச்சங்கத்தில் பெண்மணிகளும் அங்கத்தவராயிருப்பது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பெண்களே வீட்டிலிருந்து குடும்ப நிர்வாகத்தை சிக்கனமாகவும், செவ்வையாகவும் நடத்து பவர்களாகையால் அவர்களின் அங்கத்துவமே மிகவும் விரும்பத்தக்கது.

இவ்வூரில் ஐக்கிய சங்கங்களுக்குப் பிதாவைப் போன்றிருந்தவரான Sir George அவர்கள் ஓய்வெடுத்துத் தாய்நாடேகின போதிலும் இந்த ஐக்கியசங்கங்களில் மிகுந்த கவனமெடுப்பது அவர் இடையிடையே எழுதிவரும் கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது.

தலைவர் சங்கத்தில் மிகவும் நம்பிக்கையாகவும் அப்போ இருந்த நிலைபரம் திருப்திகரமானதாகவும் எண்ணினார்.

ஆனால், அக்கூட்டத்திலிருந்தவர்களில் எத்தனைபேர் இங்கு சமூகமா யிருக்கிறீர்களென்று தெரியவில்லை. "மலாய் மெயில்" என்னும் பத்திரிகை அந்தக் கூட்டத்தின் குறிப்புக்களை வெளியிடுவதற்கு எழுதியுள்ள தலையங்கம் "ஐக்கிய சங்கத்தின் இணக்கமின்மை" "கோலாலம்பூரில் சண்டமாருதமான கூட்டம்." அக்கூட்டம் உண்மையில் மகா உக்கிரமான கூட்டமே. அதுதான் எனது முதல் பரிச்சியம். அந்த உக்கிரமான கூட்டத்திற்கு முன் சில காலமாக நான் காரியதரிசி பதவியிலிருந்தேன். ஸ்ரீமான் தோமஸ் அவர்களின் பின் என்னைச் சபாநாயகனாக அக்கூட்டத்திலேயே தெரிவு செய்தார்கள். எத்தனை மனை பீரீதியுடன் அப்பதவியைக் கையேற்றேனென்பது நான் விளங்க வைப்பதிலும் பார்க்க நீங்களே யூகித்துக் கொள்வது நல்லது. தணல்மேல் நிற்பவன் போல் மகா கஷ்டத்துடன் அப்பதவியை வகிக்க ஒருப்பட்டேன். ஒரு மனத் திருப்தியற்ற அங்கத்தவர் சங்கத்தின் புஸ்தகங்களைப் பார்க்கவேண்டுமென்று கேட்டதின் பலனே அந்தப் பெரும் சண்ட மாருதத்தின் காரணம். அதன் காரணம் யாவற்றையும் சரிவரச் சபையோர்க்கு விளங்க வைத்தபின் யாவரும் ஒத்துக்கொண்டு நிர்வாக சபையில் நம்பிக்கை கூறினார்கள்.

ஐக்கிய சங்கங்களின் அதிகாரியான Mr Cavandish அவர்கள் நம் கூட்டத்தை தற்சமயம் பழகி வரும் ஒரு பஜனைக் கூட்டத்திற்கு ஒப்பிட்டார். அதில் சிலர் இசைப் பொருத்தமாகப் பாடினார்களாம். சிலர் உரத்த சத்தமாகப் பாடினார்களாம், வேறு சிலர் மெதுவாகப் பாடினர்

கலாம். யாவரும் ஒத்துப்பாடவில்லையாம். நாள டைவில் பஜனைக் கூட்டம் நன்முகப் பழக்கப்பட்டபின் எப்படிச் சேர்ந்து பாடுவார்களோ அதுபோல் சங்கமும் தோச்சியடைய எல்லாம் இணக்கமாய் வருமெனவும் குறிப்பிட்டார். இச்சங்க நிர்வாகஸ்தர் மிகுந்த பொறுப்புவாய்ந்தவர்களென்றும் அவர்கள் இச்சங்கத்தை மேனிலைக்குக் கொண்டுவரவே கஷ்டப்படுகிறார்களென்று தான் நம்புவதாகவும் வாழ்த்துரைகள் கூறி முடித்தார்.

நான்கரை மணித்தியாலம் அக்கூட்டம் நடைபெற்றது. பழைய சங்கதிகளை ஏன் இப்போ தெல்லாம் ஒந்தனெனில் இந்நாட்களில் சேர்ந்தவர்களான இளைய அங்கத்தவருக்கு நம் சங்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றியும், அத்தசையில் அது பட்ட கஷ்ட நிஷ்டூரங்களையும் அறிவிப்பதற்காகவே. இச்சங்கத்தை இப்படி பதின் மூன்றாண்டுகள பிராயமுள்ளவனுக வளர்த்தெடுப்பதற்கு நாங்கள் பட்ட கஷ்டமும் மன வேதனையையும் விளக்கவைப்பது முடியாத காரியம். ஆனாலும் மிகச் சுருங்கச் சொல்லியாவது கொஞ்சம் அறிவிக்க விரும்புகிறேன்.

1929-ம் ஆண்டு முடிவில் எங்கள் சங்கத்தில் 2,226 அங்கத்தவர் இருந்தனர். அங்கத்தவர் அதிகரிக்கக் கஷ்டங்களும் தொந்தரவுகளும் அதிகரித்தன. அரோகத்தில் அவ்வளவு கப் பிறருக்குத் தெரியாவிட்டாலும் கறையான் அரிப்பது போல் உள்ளிருந்தே அரிக்கத் தொடங்கியது. பெயருக்கு மட்டும் அங்கத்தவரையும் கூட்டி அதனால் தொந்தரவையும் சகித்துக் கொண்டிருப்பது அறிவாளிகள் சிலருக்குப் பிடிக்கவில்லையானதினால், அவர்கள் ஒன்று சேர்ந்து சங்கத்தை நன்னிலைக்குக் கொண்டு வர முயற்சித்தனர். அவர்கள் அப்படி முயற்சிக்கவே மற்றையோர்க்கு இது விருப்பமின்மையால் சங்கத்தை விட்டு விலகத் தலைப்பட்டனர். ஒவ்வொரு கூட்டத்திலும் அங்கத்தவர் குறைந்து கொண்டே போகிறார்களென்பதை மிகுந்த மன வருத்தத்துடன் அறிவிக்க வேண்டியதாய்விட்டது. இப்படியே அங்கத்தவர் குறைந்து குறைந்து போக நம் அங்கத்தவரும், அலலாதவரும், அபிமானிகளும், மற்றவர்களும் "இச்சங்கம் கூனைதசை அடைந்து வருவதைப் பார்த்தால் இது இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் நிலைக்கும்" என்று சொல்லிவிட்டார்கள்.

ஒரு மனுஷன் என்னதான் தைரியசாலியாய் துணிந்து நிற்பவனுயிருந்தபோதிலும் நாளுக்கு நாள் இப்படி ான சொற்கள் காதில் விழுந்து கொண்டே இருந்தால் அவன் என்னதான் செய்வான். சரி இவ்வளவு காலமும் பட்ட கஷ்டமெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் வியர்த்தமாய்ப் போவதா என மனமுருகித் தொழுவேன். என்ன செய்வதென வகையறியாது தத்தளித்தேன். இரவும் பகலுமாய் இதே யோசனையால் சிந்தை நொந்தேன். என்னதான் என் மனசில் கஷ்டப்பட்டாலும் அந்த அங்கத்தினர்றியாவண்ணம் காப்பாற்றி அவர்க்குத் தென்பை உரைத்து வந்தேன். இத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் காலமும் போக நாட்களும் தோச்சியடைய இச்சங்கம் இப்போ எவ்வளவோ இணக்கமாக வந்துவிட்டதென்பதை உங்களுக்கு அறிவிக்க மிகுந்த பகிழ்ச்சியுறுகிறேன். போன வருஷத்தினும் பார்க்க இவ்வருஷத்தில் இச்சங்கத்தில் அங்கத்தவர்கள் கூடியிருக்கிறார்கள். போன வருஷம் 818 அங்கத்தவரிருந்தார்கள். இப்போ 941 அங்கத்தவராய் இருக்கிறார்கள். இதிலிருந்து இனிவரவர நம் சமூகத்தில் அபிமானிகள் அதிகரிப்பார்களென்றும், சங்கம் வளர்ச்சியுறும் என்றும் நம்புகிறேன்.

நான் 1936-ம் ஆண்டு சித்திரை 14-ம் தேதி அறிக்கையை வாசித்தபோது உங்கள் சங்கத்தின் "வழிகாட்டி" என்ற சஞ்சிகையைப் பிரசுரித்து இரண்டு நாளாயிருந்தது. தமிழ் வருஷப் பிறப்பிற்கு முதலுள் அச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டது. அதை இச்சங்கமாகிய உடம்புக்கு மகுடமெனனை யெனவும், அது உண்மையாக மைக்குமெனவும் சொன்னேன். சஞ்சிகையின் ஆறு இதழ்கள் வெளிவந்துவிட்டன. வழிகாட்டியின் உண்மையான உழைப்பினாலேயே சங்கத்தில் அங்கத்தவர் கூடி வருகிறார்களென்பது எனது முழு நம்பிக்கை. எங்கள் சமூகத்தின் நன்மை தின்மைகளைப்பலருமறியச் செய்தும் அவர்களின் யோசனைகளை அறிவதற்கு உதவியாகிறது. இந்த வழிகாட்டியானது அங்கத்தவருக்கு மாத்திரமல்ல இவ்விடமிருக்கும் நம் சமூகத்தவர் யாவருக்குமே ஒரு புதயுகம் போலிருக்கிறது. வழிகாட்டி தொடங்கி இத்தனை நாளைக்குள் செய்த அருஞ் சேவை நாளடைவில் வளர்ந்து மிகப் பயனளிக்குமென்றே நம்புகிறேன். சங்கத்தைப் போலவே இதையும் அடுத்த இதழ் வெளிவரு போ வராதோ என வழிபார்த்தவர் அநேகர். சங்கத்தைப்போலவே இதுவும் வளர்ந்தோங்கிவருமென்பதே என் நம்பிக்கை. வழிகாட்டியினுல் எவ்வளவோ சிக்கனம் சீர் முதலியவைகள் கறிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான்சொல்வதை அலைவிடம்." என்பனபோன்ற புதிமதிகளைச் சொல்லிமுடித்தார். இடமின்மையால் முழுதும் எழுதப்படவில்லை.

: : நீங்கள் அறிவீர்களா. : :

பெண்ணுக்குப் பெண் புருஷன்.

இதென்ன வேடிக்கை யென்று நினைப்பீர்கள். கேளுங்கள் விஷயத்தை ஜெயபுரி சமஸ்தானத்தில் மலாக்காபுரி என்ற இடத்தில் ஒருகிராமம் உண்டு. அங்கே இரு பெண்கள் இருந்தார்கள். அவர்களது கணவன்மார் அவர்களைக் கொடுமையாக நடத்தியதால் அவர்கள் இருவரும் ஊரைவிட்டு ஓடி விட்டார்கள். காலிகளின் அட்டகாசத் திலிருந்து தப்பிக்கொள்வதற்காக அப்பெண்களி லொருத்தி ஆண் வேஷம் பூண்டாள். அவ்விருவரும் பதினைந்து வருஷ காலம் புருஷன் மனைவிபோல் குடும்பத்தை நடத்தினார்கள். பின்னர்தான் விஷயம் கண்டு பிடிக்கப் பட்டது.

தாய்மார்களுக்குத் தண்டனை.

குழந்தைகளை அடி அடி என்று நொறுக்கினால் தான் சரியாய் வளரும் என்று சாதாரணமாக நம்மவர் சொல்வதைக் கேட்டிருக்கிறீர்களா? "அடித்து வளர்க்காத பிள்ளையும் முறித்து வளர்க்காத முருங்கையும்" என்று கூட ஒரு பழமொழி வழங்கி வருகிறதல்லவா? அடி செய்யும் உபகாரம் அண்ணன் தம்பி செய்ய மாட்டான் என்று சொல்லித் தங்கள் குழந்தைகளை விளாசி விடுகிறார்கள் சிலர். இங்கிலாந்தில் இம்மாதிரி குழந்தைகள் மீது கடினமாக நடக்கும் தாய்மார்கள் தண்டிக்கப்படுகிறார்கள். சென்ற வருஷத்தில் இம்மாதிரித் தண்டிக்கப்பட்டவர் தொகை 46003 ஆகும்.

பணிப்பெண்களுக்குப் பள்ளி.

திருமதி தோகுகே ஓகாடா என்னும் பணிப் பெண் மணமகளிர்க்கு ஷாங்காயில் ஒரு பள்ளி வைப்பாளாம். அதில் குடும்பப் பொறுப்பு வகிக்கும் விஷயமாகப் பாடங்கள் போதிக்கப்படுமாம். மகளிர்க்கு இது நல்ல சந்தர்ப்பமல்லவா? நம்மவரும் அனுபவ சாலிகளான பெரியோர்களைக் கொண்டு குடும்பம் நடத்தப் போகும் சிறுமிகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் எவ்வளவுநன்மையாகும். ஆனால் அனுபவசாலிகளான பெற்றோர் (தாய்மார்) தாங்களே உபாத்தி மாராகலாம்.

லண்டனில் இந்து கோஷ்டிரம்.

ஐரோப் பாவிலுள்ள இந்து சங்கத்தார் லண்டன் நகரில் இந்துமதத்தைப் போதிக்க ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தப் போகிறார்களாம். இக்கட்டிடம் மத்திய லண்டனில் இருக்குமாம். பிரதி வாரமும் இந்துமதத்தைப் பற்றியும் இந்துதேச சரித்திரத்தைப் பற்றியும் பிரசங்கங்கள் நடைபெறுமாம். தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் இந்து வேதாந்த உண்மைகளுக்குமான விஷயங்கள் வலியுறுத்தப்படுமாம். பல மதஸ்தர்களும் வரலாம். வாதப் பிரதிவாதங்கள் நடத்தலாம். இந்துமத சம்பந்தமான பெரிய புஸ்தக சாலையும் நிறுவப்படும். இத்திட்டமானது 25,000 பவுனுக்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பாடும் கிணறு.

இந்தக் கலியுகத்தில் மின்சார சக்தி, ரேடியோ சக்தி முதலியன செய்யும் அற்புதங்களுக்கு எல்லையில்லை. அடுப்பு முதல் சாதாரண தண்ணீர்க் குழாய்கள்கூட ரேடியோ உதவியால் பாட ஆரம்பிக்கின்றன. ஆல்பெர்ட்டர் பிரதேசத்திலுள்ள வாட்டர் என்னுமிடத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அது ஓர் விவசாயிக்குச் சொந்தம். ஓர் நாள் அந்த விவசாயி தண்ணீரெடுக்கப் போகும் போது கிணற்றுக்குள்ளிருந்து அருமையான சங்கீதம் கேட்டதாம். தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் சங்கீதம் கேட்கிறதாம் அவ்வூரார் அதைக் கேட்டு வருகிறார்கள். ரசாயன நிபுணர்கள் சோதித்துப் பார்த்ததில் ரேடியோ சக்தியால் அந்தக் கிணறு இதர ரேடியோ சங்கீதங்களைக் கிரகித்துப் பாடுவதாகக் கூறுகிறார்களாம்.

போர் முனைக்கு 3,000 சீன மாதர்.

யன்னன் மாகாணத்திலுள்ள சீன மாதர்கள் தங்கள் கணவன்மாருடன் போர் முனைக்குச் செல்கிறார்கள். சீனத் தலைவிகளின் வேண்டுகோளுக்கிணங்க 3,000 சீன மாதர்கள் போர் முனைக்குப் புறப்பட்டு விட்டார்கள். இவர்களில் சிலர் தாணவிகளும் உபாத்தியாயினிகளுமாவர். மாதர் இக்கனம் போர் முனைக்குச் செல்ல சீன சர்க்கார் (ஸ்பெஷலாக) பிரத்தியோகமாக அனுமதி கொடுத்தனராம்.

கலியுகக் கற்பரசி.

சாந்தியென்னும் வட இந்தியாவிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த நடுக்காட்டில் ஒரு இளம்பெண் தன் மாடுகளைக் கலைத்துக்கொண்டு வீடுநோக்கிச் சென்றாள். அவளை இரு தூர்த்தர்கள் கற்பழிக்

சும் நோக்கத்துடன் பின் தொடர்ந்தனர். இதை யுணர்ந்த பெண் தப்ப வழியின்றி தெய்வமே! என்னைக் காப்பாற்றுவாயாக! என அலறினாள். அந்த நேரத்தில் மேகம் இருட்டியிருந்தது. அவர்களும் பெண்ணைச் சமீபித்தனர். அந்த வேளை திடீரென ஒருவன் மேல் இடி விழுந்தது. அவன் உடனே இறந்தான். மற்றவன் அறிவி ழந்தான். பெண் திகில் கொண்டவளாய் வீட்டு கு ஓடி நடந்ததைச் சொன்னாள். கிராமத்தைச் சேர்ந்த சிலர் ஸ்தலத்திற்குச் சென்று கருகிக் கிடந்த பிரேதத்தையும் அறிவிழந்து கிடந்த மனி தனையும் தூக்கிச் சென்றனர். உத்தமரைக் காப் பாற்ற கடவுள் எங்கும் ஆயத்தமாயிருக்கிறார்.

வேலையில்லாக் கஷ்டத்தினால் தற்கொலை.

புலோலி வாசியாகிய சோமசுந்தரமென்னும் வாலிபன் ஒரு மாதத்தில் தூங்கி இறந்தார். அவ ரது மடியில் ஒரு கடிதம் இருந்தது. அதில் தன க்கும் தனது மனைவிக்குமிடையில், தான் உழைக் காமலிருப்பது பற்றி வாக்கு வாதம் ஏற்பட்டதா யும் அம்மன வருத்தத்தால் தாம் தற்கொலை செ ய்வதாயும் அதற்கு வேறொருவரும் பொறுப் பில்லை யென்றும் எழுதியிருந்தது. அவருக்கு மூன்று மாதக் குழந்தையு மொன்றிருக்கிறதாம்.

ஐயோ பாவம். இனி அவர்கள் கதி யென்ன? சகோதரிகளே சிந்தித்துப் பாருங்கள். புருஷன் கஷ்டப்படும்போது ஆதரவளிப்பதல்லவா உங்கள் கடமை. "புருஷன் இறந்த பின் விதவைக்குப்பு த்தி வந்தது" என்பது ஒருபழமொழி. ஆனால் புருஷர் இறந்தபின் அழுது கொண்டு சாப்பிடா மலும் பிள்ளைகளைக் கவனியாமலு மிருப்பது நல் லதல்ல. புருஷன் இருக்கும்போது அவன் மனங் கோணமல் நடந்து உப்பில்லாக் கூழானாலும் உவ கையுடனருந்தி சந்தோஷமாக இருப்பதே புத்தி.

கடிதம்

பெண்ணுரிமை (1)

கனம் பத்திராசிரியர் அவர்கள் திவ்ய சமூகத் திற்கு —

ஐயா, தங்கள் ஏழாவது இதழில் வெளிவந்து ள்ள "பெண்ணுரிமை" என்னும் விஷயம் பெண் களை மிகவும் சிலாக்கியமாகக் கூறுகின்றது. பெ ண்களைப்பற்றி இவ்வளவு பெருமை வாய்ந்த கட் டுரை எழுதியிருக்கும் சகோதரருக்கு மனமுவ ந்த நன்றி செலுத்தாமலிருக்க முடியவில்லை.

ஆனால் சில சந்தேகமா யிருப்பதால் அதை நிவர்த்திக்கப் பிரார்த்திக்கிறேன். "கேவலம் நகை, புடவை வாங்கும் காலத்தில் தாய் தந்தை யர் பிள்ளைகள் விருப்பங் கேட்கின்றார். ஆனால் ஓர் பெண்ணின் வாழ்வினாடே நெடிதும் உயிரா ய்க் கலந்து வாழத்தக்க நாயகனைப்பற்றிய விருப் பத்தைக் கேட்டல் ஓர் இழிவெனக் கருதப்படு கின்றது." என்ற அவரது எண்ணம் எனக்கு விளங்கவில்லை. தற்காலத்தில் நகை, புடவை வாங்குவது போலவே ஓர் மணமகனையும் வாங்கு கிறார்கள் எனப் பொருத்தியது சரியே. நகை புடவையாலும் பெற்றோர் ஏதோ தங்கள் பிள்ளை கள் விரும்பியதை வாங்கிக் கொடுத்து விடுவார் கள். அது விருப்பமில்லாவிடில் மாற்றியோ, அழித்தோ வேறு அவர்கள் விரும்பியதைத் தே டிக் தொடுத்து விடலாம். ஆனால் மணமகனையும் அப்படித் தேடலாமோ? என்பதுதான் எனது சந்தேகம்.

ஆறாவது இதழில் தாங்கள் எழுதிய குறிப்புப் போல் சிறுபிள்ளைகளுக்கு என்ன தெரியும் "காந் தனது பேரழகுதான் விரும்பும் பெண்" என்றல் லவா முதியோரும் சொல்லியுள்ளார். அப்ப டியே பெண் சிறு புத்தியினால் அழகுள்ளவனையே கேட்டுவிடில் பின் அவனது அந்தஸ்து, குணம் ஒன்றையும் பாராமலல்லவோ நாம் கட்டிக் கொடு த்துவிடநேரிடும். அதன் பின் குழந்தை குட்டி களுடன் அவள் கஷ்டப்படும்போது ஆர் உதவி செய்வார்கள். பெற்றோரல்லவா பின்னும் மனம் வருந்தி ஆகரிப்பவர்கள். ஆதலால் அவர்களே தெரிந்து கலியாணம் செய்து கொடுப்பதால் வரும் கெடுதி என்ன?

பெற்றோரே பிள்ளைகளுக்குக் கலியாண ஒழுங் குகள் செய்து வரும் நம் சாதி மக்களா அல்லது தாங்களே தங்களுக்கு ஏற்ற வரனைத் தேடிக் கொள்ளும் அன்னிய நாட்டினரா ஒற்றுமையாச்ச சந்தோஷமாக வாழுகிறார்கள்? எந்த நாட்டில் பெற்றோர் அநாதைகளாக விட்டுச் சென்ற குழந் தைகளுக்கெனச் சத்திரங்களிருக்கின்றன? நம் நாட்டில் பிச்சை யெடுப்பவளானாலும் தன் குழந் தையைவிட்டுப் பிரிய மனம் சகிப்பாளா? எந்த நாடு அன்பு மயமானது? என்பனவே நான் அறிய விரும்புவது.

"உரிமை யென்பது கடவுளால் அளிக்கப் பட்ட ஓர் கொடை" என்று சகோதரர் சொல் வது வாஸ்தவமே. அதை யாராவது கைப்பற் றிக் கொண்டதாகத் தெரியவில்லை. பெண்கள் அடிமைகளா யிருந்தாலல்லவோ அதை நிவர்த் திக்கப் பாடுபட வேண்டும். தங்கள் வீடுகளில்

சகல உரிமைகளோடும், சர்வ சுதந்தரத்தோடும் இருப்பவர் பெண்களல்லவா? யாருக்குமே பயப்படாமல் புருஷன் பிள்ளைக்கென்ற பாசத்தால் மகா சந்தோஷத்தோடு தம் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு ஒழிந்த நேரத்தை தையலிலோ, வாசிப்பிலோ, செலவிட்டு ராணிகளைப் போல் வாழ்பவர் பெண்களல்லவா?

பெண்களை அடிமைகள் என்று பரிதாபப்படும் ஆண் சிங்கங்களை எடுத்துக்கொள்வோம். அதிகாலையில் எழும்பி ஏதோ கிடைத்ததைப் புசித்து விட்டு வேலை ஸ்தலம் செல்கிறார்கள். அங்கு அவர்கள் படும் கஷ்டமும் மேலதிகாரிகளுக்குப் பயந்து அங்கு இங்கு திரும்பாமல் சர்வ சுதந்திரமுமிழந்து, பாம்பாட்டியின் கையில் அகப்பட்ட பாம்புபோல் நின்று ஆடிவிட்டுக் களைத்துச் சோர்ந்து வீடு திரும்பும்போது பார்க்கப் பெரிய பரிதாபமே. ஆனால் அன்னிய நரகரீகத்தைக் கடைப்பிடித்த நம் சகோதரிகளிற் சிலரும் அப்படியான வாழ்வு வாழ்கிறார்கள்தான். அவர்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல வரவல்லை. கிரகலக்ஷ்மிகளாய் இல்லற அரசிகளாய் சர்வ சுதந்திரத்துடன் காலம் கழித்து வரும் நம் சகோதரிகட்கு என்ன அடிமைத்தனம் வந்துவிட்டது என அறியவே விரும்புகிறேன்.

இன்னொன்று "கலியாண காலத்தில் நம் சகோதரிகளைக் கடைச்சரக்கைப்போல் விலை பேசுவதை உற்று நோக்கின் நாகரீக உலகம் நகைக்காமலிருக்குமா" என்கிறார். சகோதரிகளை என்று போட்டிருக்கும் இடத்தில் சகோதரரை என்று போட்டிருந்தால் பொருந்தும் என்பதே எனது எண்ணம். ஏனெனில் கடைச் சரக்கை விலை பேசுவது எப்படி? ஒருவர் ஒரு பொருளை வாங்கினால் காசு கொடுத்துப் பெற்றுக் கொள்ளுகிறார்களா? பணமும் பொருளையும் பெற்றுக் கொள்ளும் வழமை எங்காவது உண்டோ? அப்படியும் ஒரு மூடக் கடைக்காரன் இவ்வுலகில் இருப்பானோ? ஆதலால் பெற்றோர் சீதனப்பணத்திலோ ஓர் மணமகனைத் தங்கள் பெண்களுக்கு வாங்குகிறார்கள் என்றால் மட்டும் பொருந்துமல்லவா? சீதனம் எவ்விடம் கூடக் கிடைக்குமென்று கடைச் சரக்குபோல் தங்களை விலைக் கூறித்திரிவது ஆண்களா? அல்லது பெண்களா? சகோதரர் இவை யெல்லாவற்றையும் யோசித்து எனது சந்தேகத்தை நிவர்த்திப்பாரென்றே எதிர் பார்க்கிறேன்.

இங்ஙனம்,
தமிழண்ணகு.

சங்கீதம் (2)

பத்திராதிபர்,
"வழிகாட்டி"

ஐயா,

சென்ற ஆவணிமாதச் சஞ்சிகையின் 18-வது பக்கத்தில் "சங்கீதம்" என்னும் விஷயம்பற்றி சங்கீத வித்வான் ஒருவரால் வரைந்துள்ள கட்டுரையையும், பத்திராதிபர் அவர்கள் சாற்றிய குறிப்புரையையும் படித்துளேன்.

வித்வான் அவர்கள் அவலை நினைத்து உரலையிடிப்பது மன்றி தாமெழுதிய வாசகத்தின் பொருள் களிணுண்மையை ஆராய்ந்தறியா தெழுதியது மிகவும் விசனிக்கத்தக்கது.

அவர் இந்நாட்டில் தமிழ் பெருமக்கள் முக்கியமாய்த் தம் தம் பெண்மக்களுக்கு தென்னாட்டுச் சங்கீதத்தையே போதிக்க அவாக்கொண்டு அதற்காகப் பெருமிதமான செலவு செய்து வருகிறார்களென்றும், செலவுக்குத் தக்கபடி அவரவர்களின் மக்கள் சங்கீதத்தில் தேர்ச்சி யடைந்திருக்கின்றார்களா? எனப் பார்ப்போமானால் "இல்லை" எனும் பதில் தான் கிடைக்குமென்றும், இதற்குக் காரணம்:—

(1) அந்தந்தக் காலங்களில் ஏற்பட்ட சங்கீத வித்வான்களென்போர் அவர்களுக்கிருந்த இந்திய மன்னர்களின் அரசாங்க உதவியால் தங்கள் தங்களுக்குத் தோன்றிய படியே பல விதமாய் அமைந்திருப்பது.

(2) முறையற்ற, ஞாயமற்ற சங்கீத அமைப்புகளை எந்த ஒருவரும் ஆக்ஷேபிக்காமல் அதையே அனுசரித்து வந்தது.

(3) "உண்மையான கலை விருத்தியாகுப்படி பாடபடாமை முதலியவை களையாகும்" எனக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

செலவுக்குத் தக்கபடி இந்நாட்டில் பெண்மக்கள் சங்கீதத்தில் தேர்ச்சி யடைந்திருக்க வில்லையென்பதை வித்வான் அவர்கள் எந்த அளவு கோலால்ளந்து அறிந்தனரோ தெரியவில்லை. ஒரு சமயம் அவர் குறிப்பிடும் "பூர்வீக சங்கீத உண்மை" எனும் நூலில் அந்த அளவுகோலைக் கண்டுபிடித்திருக்கின்றாரோ மிலும்.

வித்வான் அவர்கள் குறிப்பிட்ட முதற்காரணம் விளக்கமற்றதும் பொருத்தமற்றதுமன்றி ஒன்றை நினைத்து வேறொன்றை வரைந்திருப்பது போல் புலப்படுகின்றது. அந்தந்தக் காலங்களில் ஏற்பட்ட சங்கீத வித்வான்களென்போர் அவர்களுக்கிருந்த இந்திய மன்னர்களின் அரசாங்க உதவியால் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடியே பல விதமாய் அமைந்திருப்பதற்கும், இம்மலாய் நாட்

டில் சங்கீதங் கற்கும் பெண்மக்களின் சங்கீதத் தோற்சிக்கும் என்ன சம்பந்தமிருக்கின்றது?

வித்வான் அவர்கள் இரண்டாவதாகக் குறிப்பிட்ட காரணம் அவரின் அறியாமையைக் காட்டுவதுமன்றி மிகப்பாரதூரமான குற்றமுமாகும். இந்நாட்டிலிருக்கும் சங்கீத சபாக்களும் அச்சபாக்களில் சங்கீதங் கற்கும், கற்றிருக்கும், பெண்மக்களில் பெரும்பான்மையோரும், கற்பிக்கும் உபாத்தியாயர்களிலனேகரும், குவாலம்பூர் சங்கீத அபிவிருத்திச் சபாவிலனுசரித்து வரும் முறைகளையே கையாண்டு வந்திருக்கின்றார்கள். இச்சங்கீத அபிவிருத்திச்சபா, தென் இந்திய சங்கீதக் கலாசாலைகளில் அனுசரித்துவரும் முறைகளையே கையாண்டு வந்திருக்கின்றது. ஆகவே அம்முறைகள் முறையானதும், ஞாயமானதும் என்பது எனது சிற்றறிவு.

இம்முறைகளையே வித்வான் அவர்களும், மதுரை பொன்னுசாமிப்பிள்ளை அவர்களும் கையாண்டு வந்தார்களெனக் கூறுவதும் மிகையாகாது.

வித்வான் அவர்கள் மூன்றாவதாகக் குறிப்பிட்ட காரணம் விநோதமாயிருக்கின்றது. சங்கீதக் கலையில் உண்மையான கலையென்றும் பொய்யான கலையென்றும் பாகு பாடிருப்பதாக நாம்கேள்விப் பட்டதில்லை.

செலவுக்குத் தக்கபடி இந்நாட்டில் பெண்மக்கள் சங்கீதத்தில் தேர்ச்சி யடையாததின் காரணமென்ன வென்பவற்றை வித்வான் அவர்கள் கண்டுபிடித்திருக்கும் தராஸ்படியைக் கொண்டு பார்க்குமிடத்து முதலாவதாக இந்தியாவில் மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாவருமானம் பெறக்கூடிய ஒரு வரை சங்கீத வித்வான் என நாமஞ் சூட்டி மாதமொன்றுக்கு நூற்றைம்பது ரூபா சம்பளத்தில் உபாத்தியாயராக ஏற்படுத்துவது. இரண்டாவதாக இந்நாட்டில் போதிய சங்கீத வித்வான்களில்லாமையும், அப்படி யிருப்பவர் களிலனேகர் அகம்பாவமும் காசாசையு முள்ளவர்களாக நேரிடுவது. மூன்றாவதாக சங்கீதங் கற்கும் பெண்மக்களுக்குப் போதிய தமிழறி வின்மையும், படிக்கப் போதிய நேர மின்மையும், பெற்றோர்களின் சங்கீத அறிவுக் குறைவுமேயாகும்.

சங்கீதங்கற்கும் பெண்மக்களும் அவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்கும் உபாத்தியாயர்களும் மற்றும் சங்கீதப் பிரியர் களும் சங்கீதத்தின் உற்பத்தியையும் அதன் பெருமையையும் அதை அனுசரிக்கும் முறைகளையும் அறியவேண்டியது அவசியம்.

நாகசர வித்வான் மதுரை பொன்னுசுவாமிப் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்று சென்ற முப்பதாமாண்டில் வெளியிடப் பெற்ற "பூர்வீக சங்கீத உண்மை" எனும் நூலில் அடங்கி யிருக்கும் விஷயங்களை "வழிகாட்டி" மூலமாக அறியப் போவது எம் போன்றவர்களின் பாக்கியமென்றே சொல்ல வேண்டும். ஆனால் இந்நூலை எழுதிய வித்வான் நால்விதக் கருவிகளில் துளைக்கருவி வாத்தியமாகிய நாகசரத்தையே கையாண்டுள்ளவரானதினால் அவரினது அபிப்பிராயங்களனைத்தையும் சங்கீத ஆராய்ச்சியாளரோ அன்றி நரம்புக் கருவி வாத்தியங்களாகிய வீணை, பிடில் வாத்தியங்கள் கையாடும் வித்வான்களோ ஒப்புக்கொள்ளுவார்களென்பது சந்தேகம்.

வைத்திய நிபுணர்களில் கண் வைத்திய நிபுணரென்றும், ரண சிகிச்சை நிபுணரென்றும், மருத்துவ நிபுணரென்று மிருப்பதுபோல் சங்கீத நிபுணர்களுள் பாட்டு வித்வான், வீணை வித்வான், பிடில் வித்வான், நாகசர வித்வான், புல்லாங்குழல் வித்வான், ஆர்மோனிய வித்வான், ஜலதரங்க வித்வான்களென அனேக வித்வான்களிருக்கின்றனர். ஆகவே இவர்களுள் எவரினது அபிப்பிராயத்தை நாம் கைக்கொள்வது?

எந்தத் தேசத்திலும் 12 சுரஸ்தானங்கள், ஒவ்வொரு ஸ்தாயியிலுமுள்ள தென்பது எல்லோரும் அறிந்த விஷயம்; அப்படியே நமது கர்நாடக சங்கீதத்திலும் 12 சுரஸ்தானங்களையும் சப்த சுரங்களால் உச்சரித்து சஞ்சரிக்கிறோம். ஆனால் நமது சங்கீதத்திலும் 12 சுரஸ்தானங்கள் தான் உளதா? இதற்கு மேல்பட்ட ஸ்தானங்களுமிருக்கின்றதா? என்பதை ஆராய்ச்சி செய்யும்போது சங்கீத நூலாசிரியர்கள் 24 சுருதி ஸ்தானங்களை ஒவ்வொரு ஸ்தாயியிலு மிருக்கின்றதென்பதைப் பின்வரும் உதாரணங்களால் தெரிவிக்கின்றார்கள்.

உலகுக்கு முதல்வனுய் எங்கும் வியாபித்திருக்கும் முழுமுதற் கடவுள் முதல்முதல் நாதசொரூபியாய், பின் சீவனுய், சீவர்களின் உணர்வாய், உணர்வில் அறிவாய், அறிவில் ஆனந்தமாய், ஆனந்தத்தில் நாதமாய், நாதத்தின் கீதமாய், கீதத்தில் லயமாய் ஆனந்த நிர்த்தனஞ் செய்து உலகைப் பரிபாலிக்கின்றார்.

இந்நாதசொரூபியாய் நின்ற மூதல்வனின் வார்த்தையே சீவர்களின் எழுவகைத் தோற்றத்திற்கும் ஆதியாயிருந்தது போல எழுவகைத் தோற்றத்திலுள்ள சீவர்களின் ஓசையே சப்த சுரங்களும் சுருதிகளுமாகப் பிறந்தன.

பிராணிகளின் தூல சூட்சம சரீரத்தில் சீவனுனது கீழ் ஆறு மேல் ஆறுமாகிய பன்னிரண்டு ஸ்தானங்களைப் படிப் படியாகப் பெற்று விளங்கி நிற்பது போல் சீவர்களின் ஓசையும் சப்த சுரங்களுக்கு முதன்மையாய் நிற்கும் சட்சமமானது 1. -. 3. 4. 5. 6. போல படிப் படியாய் உயர்ந்து சப்த சுரமாகி மத்தி மத்தின் கீழ் ஆறு சுரங்களாகவும் மேல் ஆறு சுரங்களாகவும் கிரமம் பெற்றிருக்கின்றது.

தூலசரீரத்தின் அமைப்பையும், பிராணனின் நிலையையும் அதன் இயக்கத்தையும் நன்கறிந்த

தெய்வபக்தர்கள் எல்லா விதத்திலும் அத்தூல உடம்பையே ஒத்திருக்கும் யாழ் எனும்சிறந்த வாத்தியஞ் செய்து தங்கள் தெய்வத் தோத்திரங்களடங்கிய கானத்திற்கு உதவியாக உபயோகித்து வந்திருக் கின்றார்கள்.

பூர்வ காலத்தில் வழங்கிவந்த யாழ்களுக்கு 1. 2. 3. 4. 7. 9. 16. 17. 21. 100. 1000. முதலிய தந்திகள் பூட்டி அவரவர்கள் பிரியத்திற் கேற்ற வடிவுடனும், அழகுடனும் வழங்கி வந்திருக்கின்றனர். இவைகளில் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ்-என நாலுவகை யாழ்களுமே மிகச்சிறந்தது.

இவைகளில் 7 தந்திகளுள்ளதும் தற்காலத்தில் "வீணை" என்று அழைக்கப்படுவதுமான செங்கோட்டி யாழே பூர்வ காலந் தொட்டு தற்காலம்வரையும், தமிழ் மக்களால் அதிகமாய் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இந்தச் செங்கோட்டி யாழானது மானிட சரீரத்திற்கு முற்றிலும் ஒத்திருப்பதோடு வடிவத்திலும், அளவிலும், ஓசையிலும், இனிமையிலும் மேன்மை பெற்றிருப்பதுடன் சுத்த சுரங்களையும் நட்டமான சுருதிகளையும் சொல்வதற்கு சிறந்த கருவியுமாக விருக்கின்றது.

மனுட சரீரத்தில் உச்சரிக்கும் குறில், நெடில், ஒற்று, கமகம் முதலிய ஓசைகளை உள்ளபடி காட்டக்கூடிய இயல்புடையது யாழே. மற்ற எந்த வாத்தியத்திலும் யாழைப்போல் சொல்லக் கூடாமலிருப்பதினால் யாழ் ஒன்றே உயிருள்ள வாத்தியமென்றும், தேவவாத்தியமென்றும் மற்ற வாத்தியங்களெல்லாம் ஊமை வாத்தியங்களென்றும் கூறினர்.

வீணை தண்டமென்றழைக்கப் படும் மனுட முதுகெலும்பு 24 கோர்வை துண்டுகளுள்ளது. அதுபோன்று வீணையிலுள்ள தண்டிலும் 24 மெட்டுகள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

வீணைத் தண்டின் நீளம் மூன்று சாணையிருப்பதுபோல் மனுஷனுடைய முதுகெலும்பும் முச்சாண் நீளமாயிருக்கின்றது. இந்த முச்சாண் நீளமே மனுஷனுடைய தலையின் சுற்றளவும் வீணைக் குடத்தின் சுற்றளவுமாகும்.

எப்படி மனுட சரீரம் தோல், எலும்பு, தசை, மூளை, சுக்கிலம், இரத்தம், மச்சை எனும் ஏழு தாதுக்கள் பெற்று பூரணமாகிறதோ அப்படியே வீணையும் ஏழு தந்திகளினால் பூரணமடைகிறது.

எப்படி தூல மானிட சரீர அமைப்பின் சில விஷயங்கள் யாழ் அமைப்பை ஒத்திருக்கின்றதோ அப்படியே சூக்கும சரீரத்தில் பிராணனும், பிராண வாயுவின் பல செயல்களும் யாழின் ஓசையையும் அதன் பாகுபாடுகளையும் ஒத்திருக்கின்றன.

தூல சரீரத்தின் பஞ்சீகரண தத்துவங்கள் இருபத்துநான்கு இருப்பது போல் சூக்கும சரீரத்திலும் பஞ்சீகரண செயல்கள் இருபத்துநான்கு தத்துவங்களையுடையதாயிருக்கின்றது. அப்படியே யாழிலும் தூல வடிவாக 24 மெட்டுகளும் சூக்கும வடிவாக 24 ஓசைகளும் பொருந்தியிருக்கின்றனதென்பது ஆராட்சி.

இந்த இருபத்துநான்கு ஓசைகளே நாளது வரையும் அனுபவத்திலிருந்து வருகின்றனவெனினும் அவைகளை இன்னவை யென்று திட்டமாயறிந்து கொள்ளாமையினால் பலர் பலவிதமாய்ச் சொல்லவும் எழுதவும் நேரிடுகிறது.

ம. கன்தையா.

குவாலாலம்பூர்,
25-9-37.

எங்களிடத்தில் ரசீது, செக்றேள், பாக்கெட் செக்றேள், பில் புத்தகங்களும், அன்டமேன்ட், ஐ.ஒ.யூ., புறமெசரி நோட்டுகளும், திருமணப் பத்திரிகை முதலிய அச்சு வேலைகளும், இன்னும் ஸ்டேஷனரி சாமான்களும், சகாயமான விகிதத்திற்தும், குறித்த காலந்தவறமலும் செய்து கொடுக்கப்படும்.

தேவையான வைகளுக்கு தீழ்கண்ட விலாசத்திற்கு ஆர்டர் செய்யுங்கள்.

இன்டர் நேஷனல் பிரின்டர்ஸ்,

27, ஜாவா ஸ்திரீட், கோலாலம்பூர்.